# மஞ்சரி

FEB. '48

தை



மறைந்த ஜோதி

★

கருடனும் அஹிம்சையும்

★

பிசாசு ஓட்டிய பட்டர்

★

யானைக் குஸ்தி

★

இந்தியாவின் வேதனை

★

பெண்ணுக்கு எதிர்

★

எது தேசிய பாஷை?

-6-
அணா

# தேன்கூடு

மலர்த்தோட்டத்தில் குழந்தைகள் விளையாடுகின்றன; வண்ணாத்திப் பூச்சிகள் பறந்து திரிகின்றன. அட்டையிலுள்ள அந்த அழகிய தோட்டத்தைக் கூர்ந்து கவனியுங்கள். தேனீக்கள் மலர்களிலே அமர்ந்து மதுரமான தேன் சேகரிப்பதைக் காண்பீர்கள். தேனீ சேகரித்து வைப்பது மலர்களின் மதுரத் தேன்கூடு.

பல பத்திரிகைகளிலிருந்து அரிய விஷயங்களைச் சேகரித்த சிந்தனைத் தேன்கூடு 'மஞ்சரி.' படித்தறிய, சிந்தனைக்குரிய கட்டுரைகள் பல இதில் இருக்கின்றன. முக்கியமாக 57 - ஆம் பக்கத்தில் நமது தேச பாஷை எது என்பது பற்றி மூன்று பிரமுகர்கள் எழுதியுள்ள அபிப்பிராயங்களைப் படிக்கத் தவறாதீர்கள். அமர வாழ்வடைந்த காந்தி மகானைப் பற்றிய மதிப்புரைகளை நம் உள்ளத்திலே பதித்துக்கொள்ளவும் வேண்டும்.


## மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

| | |
|---|---|
| கி. வா. ஜகந்நாதன் | கா. ஸ்ரீ. ஸ்ரீ. |
| த. நா. குமாரஸ்வாமி | குமுதினி |
| வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி | கி. சாவித்திரி அம்மாள் |
| சீதா தேவி | 'ஆர்வி' |
| கௌரி அம்மாள் | டி. வி. பரமேசுவரன் |
| மோ. ஸ்ரீ. செல்லம் | ச. கு. கணபதி ஐயர் |

ஓவியர்கள்: ஸாமி; சங்கர்; மகான்.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை. 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8 கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை "ஸர்க்குலேஷன் மானேஜர்" என்று விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 1 ] [ இதழ் 3

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

# மறைந்த ஜோதி

பண்டித ஜவாஹர்லால் நேரு

★

நண்பர்களே, தோழர்களே, நமது வாழ்க்கையின் ஜோதி மறைந்துவிட்டது. எங்கும் ஒரே இருள்மயமாகிவிட்டது. இந்தச் சமயத்தில் உங்களிடம் நான் என்ன சொல்வது, எப்படிச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. நம் அருமந்த தலைவர் - 'பாபு' என்று நாம் அழைத்துவந்தோமே, அவர்- பாரதநாட்டின் தந்தை - மறைந்துவிட்டார். நான் இப்படிச் சொல்வது ஒருகால் தவறாக இருக்கலாம். என்றாலும், நாம் இவ்வளவு வருஷங்களாக அவரைப் பார்த்துவந்தது போல் இனிப் பார்க்க முடியாது. இனி அவரிடம் விரைந்து சென்று ஆலோசனை கேட்கவோ, அவரிடமிருந்து ஆறுதல் பெறவோ முடியாது. இது எனக்கு மட்டுமன்றி, இந்த நாட்டிலுள்ள கோடானு கோடி மக்களுக்குமே ஒரு பேரிடியாகும்.

ஜோதி மறைந்துவிட்டதென்று சொன்னேன். ஆனால், அப்படிச் சொன்னது தவறுதான். ஏனென்றால் இந்த நாட்டில் ஜொலித்துக் கொண்டிருந்த அந்த ஜோதி ஒரு சாதாரண ஜோதியல்ல. சென்ற பல வருஷங்களாக இந்த நாட்டைப் பிரகாசப்படுத்திவந்த அந்த ஜோதி இன்னும் பல்லாண்டு இந்த நாட்டைப் பிரகாசப்படுத்திவரும். இன்னும் ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகும் அந்த ஜோதி இந்த நாட்டில் திகழ்ந்து வரும். உலகம் முழுவதும் அதைக் காணும். கணக்கற்ற மக்களது நெஞ்சில் அது ஆறுதல் உண்டாக்கும். ஏனென்றால் அந்த ஜோதி தற்காலத்தை மட்டும் பற்றியதல்ல; அது நித்தியமான சத்தியத்தை, சாசுவதமான உண்மைகளைக் குறிப்பதாகும். அது தவறான வழியிலிருந்து நம்மை இழுத்துத் தர்ம நெறியை நமக்கு அறிவுறுத்துவதாகும். இந்தப் புராதன நாட்டுக்குச் சுதந்தரம் கிடைக்கச் செய்ததும் அதுதான்.

இன்னும் அவர் செய்ய வேண்டிய காரியங்கள் எவ்வளவோ இருக்கை

**ஜனவரி 30-ஆம் தேதி மாலையில் இந்தியாவின் ஜோதி மறைந்தது; மகாத்மா காந்தி உயிர் நீத்தார். அன்றிரவு, வேதனை நிறைந்த குரலில் டில்லி அகில இந்திய ரேடியோவில் இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு பேசிய பேச்சு இது.**

யில் இந்தக் கொடுமை நேர்ந்திருக்கிறது. அவர் நமக்கு அநாவசியம் என்றோ, அவர் தம்முடைய வேலையைப் பூர்த்தி செய்துவிட்டார் என்றோ நாம் என்றுமே எண்ணியிருக்க முடியாது. குறிப்பாக நமக்கு எவ்வளவோ சங்கடங்கள் இருந்துவரும் இந்தச் சமயத்திலே, அவர் நம்மிடையே இல்லாமற் போனது சகிக்க முடியாத துன்பமாகும்.

ஒரு பைத்தியக்காரன் அவருடைய உயிரை மாய்த்துவிட்டான். இந்தச் செயலைப் புரிந்த அவனைப் பைத்தியக்காரன் என்றுதான் கூற வேண்டும். சென்ற சில வருஷங்களில் - முக்கியமாகச் சென்ற சில மாதங்களில் - தேசத்தில் மிகுந்த விஷம் தலைகாட்டிவிட்டது. அது நம் மனத்தைக் கெடுத்துவிட்டது. இந்த விஷத்தை நாம் சமாளிக்க வேண்டும். அதை நாம் வேருடன் களைய வேண்டும். நம்மைச் சூழ்ந்துள்ள ஆபத்துக்களைச் சமாளித்தாக வேண்டும். பைத்தியக்கார முறையிலோ தவறான வழியிலோ அதை நாம் சமாளிக்கக் கூடாது. நம்முடைய அரும்பெரும் தலைவர் காட்டிய வழியிலேதான் அதைச் சமாளிக்க வேண்டும். நமக்கு ஆத்திரமாக இருப்பதால் நாம் தவறான முறையில் நடந்துகொள்ளக் கூடாது. இதை நாம் முக்கியமாக ஞாபகத்தில் வைக்கவேண்டும். உறுதியும் உரமும் உள்ளவர்களாக நாம் நடந்துகொள்ள வேண்டும். சூழ்ந்துள்ள எல்லா ஆபத்துக்களையும் சமாளிக்க நாம் உறுதி பூணவேண்டும்.

நம்முடைய மகாகுருவும் தலைவருமான காந்திஜி செய்துள்ள உபதேசங்களைப் பின்பற்றி நடக்க நாம் திட சங்கல்பம் செய்துகொள்ள வேண்டும். அவரது ஆத்மா நம்மைக் கவனித்து வருவதாக நினைத்து நடக்கவேண்டும். அவரது ஆத்மா நம்மைக் கவனித்து வருவதாகவே நான் நம்புகிறேன். தவறான வழியிலோ, பலாத்காரமாகவோ நாம் நடந்துகொண்டால், அவருடைய ஆத்மா வேதனைப்படும். ஆகவே, அவ்விதம் நாம் நடக்கக் கூடாது. ஆனால், அதற்காக நாம் கோழைகளாக இருக்க வேண்டுமென்பதில்லை. நம்மை எதிர்நோக்கி நிற்கும் பிரச்னைகளைப் பூர்ண பலத்துடனும் பூர்ண ஒற்றுமையுடனும் நாம் தீர்க்க முற்படவேண்டும். இந்த மகத்தான அனர்த்தம் ஏற்பட்டிருக்கும் இந்தச் சமயத்தில் நாம் எல்லோரும் நம்முடைய சில்லறை அபிப்பிராய பேதங்களையும் கஷ்டங்களையும் மறந்து ஒன்றுபட்டிருக்க வேண்டும். ஒரு பெரிய அனர்த்தம் நிகழ்ந்தால், நாம் பெரிய விஷயங்களை நோக்கிச் சிறிய விஷயங்களை மறக்கவேண்டும் என்பதை நமக்கு அறிவுறுத்தும் ஒரு சின்னமாகவே அதைக் கருதவேண்டும்.

காந்திஜி தமது மரணத்தால் வாழ்க்கையின் சீரிய லட்சியங்களை - நித்தியமான சத்தியத்தை - நமக்கு ஞாபகப்படுத்துகிறார். இதை நாம் நினைவில் வைப்போமானால், அதுவே இந்தியாவுக்கு க்ஷேமம் தரும்.

**இந்தியாவில் உள்ள அனைத்தும் என் உள்ளத்தைக் கவர்கிறது; எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு உன்னத லட்சியங்களைக் கொண்ட ஒரு மனிதன் விரும்பத்தக்க அனைத்தும் இந்தியாவில் இருக்கின்றன.**

**—மகாத்மா காந்தி**

# உலகத்தின் கண்ணீர்

**வஞ்சகத் துப்பாக்கிக் குண்டு பட்டு மகாத்மா காந்தி உயிர் துறந்தார் என்ற செய்தி கேட்டு, உலகமே கண்ணீர் விட்டுக் கதறுகிறது. எண்ணற்ற அநுதாபச் செய்திகள் குவிகின்றன. அவற்றில் சில கீழே காண்பவை:**

**பிரிட்டிஷ் மன்னர்:** மிஸ்டர் காந்தியின் மரணச் செய்தி கேட்டு ராணியும் நானும் பெரிதும் திடுக்கிட்டோம். இந்தியா - ஏன், உலகமேதான் - அடைந்துள்ள ஈடு செய்ய முடியாத நஷ்டத்துக்கு எங்கள் அநுதாபத்தை இந்திய மக்களுக்குத் தெரிவியுங்கள்.

**மவுண்ட்பாட்டன்:** (பிரிட்டிஷ் மன்னருக்கு அனுப்பிய பதிலில்): காந்தியின் மரணம் உண்மையில் மனித குலத்துக்கே நஷ்டம். அன்பு, சகிப்புத் தன்மை என்ற லட்சியங்களுக்காகவே வாழ்ந்து, அவற்றுக்காகவே அவர் உயிர் விட்டார். அந்த லட்சியங்களின் ஒளியே இன்று மனித குலத்துக்கு மிகமிகத் தேவையாயிருக்கிறது. தான் பெருந் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் இந்த நேரத்திலேயும், அழியாப் புகழ் பெற்ற ஒரு மனிதரை உலகுக்கு அளித்ததில் இந்தியா பெருமை கொள்கிறது.

**அமெரிக்க ஜனாதிபதி:** குருவும் தலைவருமான அவருடைய செல்வாக்கு, இந்தியாவில் மட்டுமல்ல; உலகெங்குமே பரவியிருந்தது. அவருடைய மரணம், சமாதான விருப்பமுள்ள மக்கள் அனைவருக்குமே துயரம் அளித்திருக்கிறது. மனிதர்களுக்குள்ளே மற்றொரு மகா புருஷன், சகோதரத்துவத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதில் தம் உயிரையே துறந்துவிட்டார்.

**மவுண்ட்பாட்டன்** (அமெரிக்க ஜனாதிபதிக்கு அனுப்பிய பதிலில்): யமுனா நதிக்கரையில், காந்தியின் தகன சம்ஸ்காரம் நடந்தது. அங்கே இருந்து இப்போதுதான் நான் திரும்பி வந்தேன். அந்த அந்திமக் கிரியைகளைக் காணக் கணக்கிறந்த மக்கள் கூடியிருந்தார்கள். அதுவே இந்த நாட்டில் அவருடைய செல்வாக்கு எவ்வளவு விரிந்து பரவியிருக்கிறது என்பதைக் காட்டும் சாட்சியமாகும். இந்தியா - ஏன், உலகமேதான் - அவரைப்போல் இன்னொருவரை இன்னும் பல நூற்றாண்டுகள் வரையில் காணப்போவதில்லை.

**ராஜாஜி:** நந்தா விளக்கு அணைந்து போயிற்று.

**பிரிட்டிஷ் விமான மந்திரி:** இந்தியாவுக்கு மட்டுமன்றி உலக மக்களுக்கே வழிகாட்டும் ஜோதியாக அவருடைய ஆத்மா அமரத்துவம் பெற்றுவிட்டது.

**சர் சப்ரு:** புருஷோத்தமர்; தலைசிறந்த தேசபக்தர்; இந்திய சுதந்தரத்தின் பிதா.

**நிஜாம் பிரதமர்:** இவரது மறைவால் உலகத்துக்கே பெரிய நஷ்டம்.

**ஐ. நா. கவுன்ஸில் தலைவர்:** அவருடைய அஹிம்சை லட்சியங்களையே ஆதாரமாகக் கொண்டது ஐ. நா. சபை. அந்த லட்சியங்களை இந்தியாவிலும் பிற உலகத்திலு அவரை மறவாதவர்களெல்லாம்

இன்னமும் பரப்பிக்கொண்டே யிருப்பார்கள்.

**அயர்லாந்தின் பிரதமர்:** தங்களுக்குச் சுதந்தரம் வாங்கித் தந்த தலைவரை இந்தியர் இழந்துவிட்டார்கள்.

**கானடா பிரதமர்:** தன்னலமற்று அஹிம்சையைக் கடைப்பிடித்த ஒருவர், ஹிம்சைக்குப் பலியானது மகா துக்கமாயிருக்கிறது.

**ஆஸ்திரேலியப் பிரதமர்:** மனிதவர்க்கத்துக்கும், சமாதானத்தை நிலைநாட்டவும் உழைத்தவர் என்று காந்தியை ஆஸ்திரேலியர் என்றும் ஞாபகம் வைத்திருப்பார்கள்.

**டச்சுப்பிரதமர்:** சகோதர மனிதர்களின் நலத்துக்காகச் சேவை புரிவதில், எந்தத் தியாகத்தையும் பெரிதாக மதியாதவர் மகாத்மா காந்தி.

**பிரேஞ்சுப் பிரதமர்:** அவர் வாழ்வு, சேவை, ஞானம் இந்த அனைத்தும் மனிதகுலத்துக்கு என்றும் அழியாத நன்கொடையாகும்.

**டேன்மார்க் பிரதமர்:** யுத்தத்தால் மக்களின் மனத்தில் தோன்றியிருக்கும் மிருகத்தனத்துக்கு ருசு என்றே, காந்திஜியின் மரணத்தை நாகரிக உலகத்தினரெல்லாம் எண்ணுவார்கள்.

**எகிப்து மன்னர்:** கீழ்நாடு ஒரு தேசபக்தரை இழந்துவிட்டது. உலகமும் மனித குலமும் ஒரு மகா புருஷனை இழந்துவிட்டது.

**எகிப்தின் பிரதமர்:** உலகம் என்றும் கண்டிராத ஒரு மகான் அவர்.

**தென்னுப்பிரிக்கப் பிரதமர்:** மனிதர்களுக்குள்ளே மன்னர் மறைந்துவிட்டார்.

**இலங்கைப் பிரதமர்:** இந்தத் துக்க சம்பவத்தால், இந்தியாவுக்கு மட்டுமல்ல; உலகத்துக்கே என்ன கதி நேரிடுமோ என்று நினைக்கவே என்னால் முடியவில்லை.

**பர்மாப் பிரதமர்:** மகாத்மாவின் மரணத்தைப் பர்மாவுக்கும் நஷ்டம் என்றே இங்கே நாங்கள் எண்ணுகிறோம்.

**ஜெனரல் மக்ஆர்த்தர்:** பலாத்காரத்தால் எந்தப் பிரச்னையையும் தீர்க்க முடியாது என்று அவர் நம்பினார். மனிதநாகரிகம் பிழைக்க வேண்டுமானால், காலக்கிரமத்தில் சகல மனிதர்களுமே இதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனால், காந்தி தற்காலத்தை விட்டு மிக முன்னேறிவிட்ட தீர்க்கதரிசி.

**ரேவரண்ட் ஜே. எச். ஹோம்ஸ்:** ஒன்று அணுக்குண்டு பூதம் அல்லது காந்தி - இந்த இரண்டில் எவருக்குச் சேவை புரிவது என்பதை இன்று தீர்மானித்துக்கொள்ளுங்கள்.

**போர்ச்சுகல் பிரதமர்:** உலகத்திலே ஒரு பெரிய தர்மாத்மா.

**ஆப்கன் பிரதமர்:** சமாதானப் பிரியர்; உன்னத தேசபக்தர்; இந்திய மக்களின் அன்பைக் கொள்ளை கொண்ட தலைவர்.

**நார்வே அயல்நாட்டு மந்திரி:** இந்தியாவின் உன்னத புத்திரன்.

**பேர்னர்ட் ஷா:** மிகவும் நல்லவனாயிருப்பது அபாயம் என்பதையே இது காட்டுகிறது.

**சியாங் தம்பதிகள்:** அஹிம்சா முறையிலே சமாதானத்துக்காகப் போராடிய வீர மகான்.

**பிரிட்டிஷ் பிரதமர்** (காரியாலய அறிக்கையில்): உலகெங்கும் வாழ்க்கையின் பல துறைகளிலுமுள்ள கோடிக்கணக்கான மக்கள் அவ

ருடைய மரணத்தால் ஏற்பட்ட நஷ்டத்துக்கு வருந்துவார்கள். தார்மிக முறையிலும் ஆத்மிக முறையிலும் அவர் தலைமை தாங்கினர். புத்திதடுமாறித் தவிக்கும் உலகத்துக்கு அவருடைய தலைமை ஊக்கந்தரும் உதாரணமாய் விளங்குகிறது.

**பிரெஞ்சு மாஜி பிரதமர் லியான் புளூம்:** நான் காந்தியைப் பார்த்ததில்லை; அவர் பேசும் மொழியை அறியேன்; அவர் நாட்டில் அடியெடுத்துவைத்ததில்லை. என்றாலும் யாரோ ஒரு நெருங்கிய உறவினரை இழந்தது போல் எனக்குத் துக்கம் உண்டாகிறது.

**பேர்ள் பக்:** என் கணவர் திடீரென்று எங்கள் அறைக்குள்ளே வந்தார். "ரேடியோ இப்போது ஒரு பயங்கரச் செய்தி சொல்லிற்று. காந்தி இறந்தார்" என்றார். சகிக்க முடியாத அந்த விவரங்களைக் கேட்டோம். தம் மக்களுக்குச் சேவை செய்வதில் தமது வாழ்க்கையையே ஈடுபடுத்திய சமாதானவாதியான காந்தி கொலையுண்டார். எங்களுடைய பத்து வயது மகன் கண்ணீர் சொரிந்து கொண்டு, "துப்பாக்கி செய்ய யாருக்குமே தெரியாமல் போயிருக்கலாகாதா!" என்றான்.

**ஹைதராபாது நிஜாம்:** சத்தியமும் அஹிம்சையுமே உருவெடுத்தவர் மகாத்மா காந்தி. அவருடைய முயற்சியாலும் தியாகங்களாலுமே கடைசியில் சுதந்தரம் வந்தது. அவர் காலத்திலே மிக உயர்ந்த மனிதர் அவரே. ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக அவர் உயிர் துறந்தார். இந்திய சரித்திரத்திலும் உலகம் முழுவதன் சரித்திரத்திலுமே அவருடைய உன்னதமான செயல்கள் என்றென்றும் ஞாபகத்தில் வைக்கப்படும்.

## சந்தி வேளையில்

சந்திவேளையிலே இப்போது நாம் இருக்கிறோம். ஆனால் அது காலையோ, மாலையோ? அதை நாம் அறியோம். அந்தி சந்திக்குப் பின் இரவு வருகிறது. உதயசந்திக்குப் பின் உஷக் காலம் வருகிறது. நமது இந்தச் சந்திவேளைக்குப் பின்பு, துக்க இருள் சூழாமல், ஒளி நிறைந்த பகலை நாம் காண விரும்பினல், இந்தக் கணத்திலே நாம் உண்மையை உணரவேண்டும்; என்ன வந்தாலும் சரியென்று அதைத் தாங்கி நிற்க வேண்டும். என்ன துன்பம் வந்தாலும் சரியென்று, அதையே உபதேசிக்க வேண்டும்; அநுஷ்டிக்க வேண்டும்.

—மகாத்மா காந்தி.

## ராம நாமம்

நான் குழந்தையாக இருக்கையில், 'பயமோ துயரமோ வரும்போது, ராம நாமத்தை ஜபி' என்று என் செவிலித்தாய் எனக்குக் கற்பித்தாள். அந்த வழக்கம் என் இயல்போடு இயல்பாய் ஒட்டி, வயதாக வயதாக வளர்ந்துவிட்டது. அந்த நாமம் என் உதடுகளிலே இல்லாதபோதும், இருபத்து நாலுமணி நேரமும் என் உள்ளத்தில் இருந்துகொண்டேயிருக்கிறது.

—மகாத்மா காந்தி.

# முதல் சணல் ஆலை

முகுல் குப்தா

**சணல் விளைவு பாகிஸ்தானில்; ஆலைகள் இந்தியாவில்! இப்படி ஒரு சிக்கல், இந்தியாவைப் பிரித்ததால் ஏற்பட்டிருக்கிறது. சணல் தொழில் வங்காளத்தின் ஒரு பெருந்தொழில். அது எத்தனை பாடு பட்டு, இந்த நாட்டில் உதயமாயிற்று என்ற வரலாற்றை இங்கே காணலாம்.**

ஜார்ஜ் ஆக்லண்டு என்ற வெள்ளைக்காரர் கிழக்கிந்தியக் கடற்படையில் வேலையில் இருந்தார். நாளாவட்டத்தில் அவர் இலங்கையில் ஒரு காபித்தோட்ட முதலாளியானார். கடைசியில் இலங்கை மேல் சட்டசபை அங்கத்தினராகவும் பதவி பெற்றார். திடீரென்று காபித் தோட்டத்தில் அவருக்குப் பெரிய நஷ்டம் வந்தது. பணமெல்லாம் போய் வங்காளத்துக்கு வந்தார். பணம் போனாலும் தன்னம்பிக்கையும் முயற்சியும் போகவில்லை. எப்படியாவது இழந்த சொத்தை மறுபடியும் சம்பாதித்துவிட வேண்டும் என்ற உறுதி அவருக்கு நிறைய இருந்தது.

புல்லிலிருந்து காகிதம் செய்வது, சணலைக் கையாலேயே நூற்று முரட்டுத்துணி நெய்வது போன்ற கைத்தொழில்கள் கங்கைக்கரையில் நிறைய நடக்கின்றன என்று ஆக்லண்டு கேள்விப்பட்டிருந்தார். சணல் நாரினால் முரட்டுத் துணி நெய்வது கீழ்வங்காளத்தில் அப்போது ஒரு பெரிய கைத்தொழிலாக இருந்தது. ஒவ்வொரு வீட்டாரும் இந்தக் கைத்தொழிலைச் செய்து வந்தார்கள்.

இதே காலத்தில் ஸ்காட்லாந்தில் உள்ள டண்டி என்ற இடத்திலும் ஹெம்ப் என்ற ஒருவகைச் சணல் கைத்தொழில் மும்முரமாக நடந்து வந்தது. அப்பொழுதெல்லாம் டண்டி ஆலை முதலாளிகளுக்கு இந்தியச் சணல் மீது என்னவோ ஒரு வெறுப்பு இருந்தது. தங்கள் ஆலைகளில் நெய்யும் துணிகளில் இந்தியச் சணலைச் சேர்க்கக்கூடாது என்று ஒரு கட்டுப்பாடும் அவர்களுக்குள் இருந்தது. அவர்களுடைய வெறுப்பே தமது பாக்கியம் என்று எண்ணினார் ஆக்லண்டு. இந்தியாவிலேயே ஒரு சணல் ஆலையைத் தொடங்க அவர் முயன்றார். ஆனால், இதற்குள் டண்டி முதலாளிகள் மெல்ல மெல்ல இந்தியச் சணல் மீது மோகம் கொள்ளத் தொடங்கினார்கள். என்றாலும், ஆக்லண்டு தமது முயற்சியைத் தளர்த்தவில்லை.

வங்காளத்துக்கு வந்தவுடன் ஆக்லண்டுக்கு விசுவம்பர ஸேன் என்ற ஒரு பெரிய பணக்காரப் பனியாவின் நட்புக் கிடைத்தது. ஆக்லண்டுக்குத் திறமை இருந்தது. ஸேனுக்குப் பணம் இருந்தது. தொழிலுக்கு

காப்பிரைட்: அமிர்த பஜார் (ஆங்கிலம்: 18-1-'48),
12, ஆனந்த சட்டர்ஜி லேன், கல்கத்தா.

ஆக்லண்டு கேட்ட பணமெல்லாம் இல்லை யென்னுது கொடுத்தார் ஸேன். இந்தியச் சணலை வெளுத்து டண்டிக்கு அனுப்பிப் பார்த்தார் ஆக்லண்டு. அது பயன்படவில்லை. இந்தியாவிலே கையால் சணல் நூற்கும் தொழிலை அவர் பரீட்சித்தார். அதில் நிறைந்த அளவு உற்பத்தி செய்ய முடியவில்லை. கடைசியில், யந்திரங்கள் அமைத்து, ஓர் ஆலையே தொடங்குவதுதான் சரி என்று ஆக்லண்டு முயன்ருர்.

கையால் நூற்ற இந்தியச் சணல் நூலை, சீமையில் யந்திரம் செய்பவர்களுக்கு மாதிரியாக அனுப்பினுர். எந்த மாதிரி யந்திரம் வேண்டுமென்று அப்போதுதானே தெரியும்? கடைசியில் ஜான் கேப்பர் என்ற லண்டன் பத்திரிகாசிரியரின் உதவியாலும், டண்டி மில்லில் வேலை செய்த வார்ப்படக்காரரான ஜான் கெர் என்பவரின் உதவியாலும், ஆக்லண்டு ஒரு மில்லுக்கு ஆர்டர் கொடுத்தார். மில்லும் உருவாகி வந்து சேர்ந்தது.

ரிஷ்ரா என்ற இடத்தில் 1855-ஆம் வருஷ மத்தியில் இந்தியாவிலேயே முதலாவதான இந்த இந்தியச் சணல் மில் வேலை ஆரம்பித்தது. ஆக்லண்டுக்கும் ஸேனுக்கும் சந்தோஷம் தாங்கவில்லை. அவர்களது கனவு நனவாகி விட்டதல்லவா? ஆரம்பத்தில் நாளொன்றுக்கு ஆன வேலை 8 டன்தான். இது மிகவும் குறைவு. இதை அதிகரிக்க ஆக்லண்டு எவ்வளவோ முயன்ருர். 1857-இல் சிப்பாய்க் கலகம் என்ற முதல் இந்திய சுதந்தர யுத்தம் ஆரம்பித்தது. இது தொடங்கிய பாரக்பூருக்கு எதிர்க்கரையில்தான் இந்த மில் இருந்தது. இந்தக் குழப்பத்தால் மில்லுக்கு என்ன சேதம் நேருமோ என்று ஆக்லண்டு பயந்தார். நல்ல வேளையாக மில் சேதப்படவில்லை. ஆனுல், துரதிருஷ்டவசமாக 1858-இல் நெருப்புப் பிடித்து ஆலை முழுவதும் சாமான் செட்டுகளோடு வெந்து சாம்பலாகிவிட்டது. இருந்தாலும் ஆக்லண்டு மனம் தளரவில்லை. இந்தச் செய்தி அவருக்குக் கிடைத்த போது, அவர் இங்கிலாந்தில் இருந்தார். மறுபடியும் முயன்று இஷேரா நூல் மில் என்ற பெயரால் மில்லைப் புதிதாக அவர் தொடங்கினுர். இவருடைய மில்லின் தறிகளெல்லாம், ஆள்கள் கையால் சுற்றுவதால் ஓடின; எஞ்சின் பலத்தால் ஓடவில்லை.

இவருக்குப் போட்டியாக ஜார்ஜ் ஹெண்டர்ஸன் என்பவர் போர்னியோ சணல் கம்பெனி என்ற மில் ஒன்றை 1859-இல் பாரா நாகூரில் ஆரம்பித்தார். அந்த மில்லில் எஞ்சின் பலத்தால் 152 யந்திரத் தறிகள் வேலை செய்தன. அதில் மிஞ்சிய பிரமாத லாபத்தைக் கொண்டு, 1864-இல் அவர் இன்னொரு மில்லையும் ஆரம்பித்தார். மொத்தம் 512 பவர் யந்திரத் தறிகள் வேலை செய்தன. தாமஸ் டப் என்ற சாமர்த்தியசாலியான ஸ்காட் வியாபாரி ஒருவர், ஹெண்டர்ஸன் கம்பெனியாருக்கு உதவி செய்தார். டேவிட் வால்டி என்ற பெரிய விஞ்ஞானியும் பலவகை ஆராய்ச்சிகளால் அவர்களுக்கு உதவினுர். வெகு சீக்கிரத்திலேயே ஹெண்டர்ஸன் கம்பெனியார் போட்ட முதலை எடுத்துவிட்டார்கள். 1872-இல் அவர்கள் கம்பெனிப் பெயரை மாற்றி, பாரா நாகூர் ஜூட் பாக்டரி கம்பெனி லிமிடெட் என்று புதுப்பெயர் வைத்துக்கொண்டார்கள்.

தங்கள் மில்லிலும் எஞ்சின் பலத்தால் ஓடும் பவர் தறிகளைப் போடாவிட்டால் பலன் கிடைக்காது என்ற

விஷயம் ஆக்லண்டுக்குச் சீக்கிரம் தெரிந்துவிட்டது. எனவே, பவர் தறிகள் ஏற்படுத்தியதுடன், தங்கள் கம்பெனியின் பெயரான 'இஷேரா யார்ன் மில்ஸ்' என்பதை மாற்றி 'ரிஷ்ரா ஜூட் மில்ஸ் கம்பெனி லிமிடெட்' என்று வைத்துக்கொண்டார். ஆக்லண்டே கம்பெனிக்கு மானேஜிங் டைரக்டர் ஆனார். இந்த முயற்சியில் முதல் சில வருஷங்களில் நல்ல லாபம் வந்தது. ஆனால் போதிய கவனிப்பு இல்லாமையால், 1867-இல் மில்லின் நிலை ஆட்டம் கொடுத்தது. கடைசியில் கம்பெனியிலிருந்து ஆக்லண்டு விலகிக்கொள்ள நேர்ந்தது. ஐந்து வருஷங்களுக்குப் பிறகு 'கல்கத்தா ஜூட் மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்' என்ற பெயரால் இந்த மில் புனர் ஜன்மம் எடுத்தது. மாகின்டோஷ் அண்டு கம்பெனியார் 1889-இல் இதன் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், சில வருஷங்களுக்குப் பிறகு நிர்வாகம் 'சம்ப்தானி' என்ற கம்பெனியாரின் கைக்கு மாறிவிட்டது. அவர்கள் இதற்கு வெல்லிங்டன் ஜூட் மில் என்று நாமகரணம் செய்தார்கள்.

அன்று முதல் நம் சணல் தொழில் முன்னேறிக்கொண்டுதான் வருகிறது. இன்று இந்தியாவில் 77 சணல் ஆலைகள் இருக்கின்றன. இவற்றில் 63 மேற்கு வங்காளத்தில் இருக்கின்றன. மற்றப் பதினுலும் பிற பாகங்களில் பரவிக் கிடக்கின்றன. இன்று வேலை செய்யும் மொத்தத் தறிகள் 85,000. இவற்றில் 65,000 தறிகள் மேற்கு வங்காளத்திலும் மற்றவை இந்தியாவின் வேறு பாகங்களிலும் இருக்கின்றன. இன்று நூல் நூற்கும் கதிர்கள் 11,64,000. இவற்றில் 11,27,600 கதிர்களுக்கு மேல் மேற்கு வங்காளத்தில் இருக்கின்றன.

இந்தியாவை இரண்டாகப் பிரித்ததால் சணல் தொழிலுக்கு ஒரு பெரும் சிக்கல் உண்டாகிவிட்டது. இந்தியச் சணலில் பெரும் பகுதி பாகிஸ்தானில் விளைகிறது. ஆனால் அங்கே சணல் மில்லே இல்லை. மேற்கு வங்காளத்தில் விளையும் சணல் அங்கே உள்ள மில் தொழிலுக்குப் போதாது. வெகு சிரமப்பட்டு ஆக்லண்டு முதலியோர் பெற்று வளர்த்த இந்தக் கைத்தொழிலை, வீண் சச்சரவினால் நாம் கொன்று விடக்கூடாது. ஆக்லண்டு இறந்து நெடுங்காலமாகிவிட்டது. ஜார்ஜ் ஹெண்டர்ஸன், விசுவம்பர் ஸேன், டேவிட் வால்டி ஆகியவரும் இறந்துவிட்டார்கள். என்றாலும், இந்தியச் சணல் ஆலைகளின் உன்னதமான புகைபோக்கிக் குழாய்களிலிருந்து ஒவ்வொரு நாள் காலையிலும் முதலிலே குப் என்று கிளம்பும் பழுப்பு நிறப் புகை, இந்த மூல புருஷர்களின் ஞாபகத்துக்கு என்றென்றும் மரியாதை செலுத்திக்கொண்டேயிருக்கும்.

நீ கோபங்கொள்ளும் ஒவ்வொரு நிமிஷமும், அறுபது விநாடி மகிழ்ச்சியை இழந்துவிடுகிறாய்.

* * * *

எவனுடைய குற்றங்களை எண்ணிக் கணக்கிட்டு விட முடியுமோ அவனே மகான்.

—ஹீப்ரு பழமொழி.

# பெண்ணுக்கு எதிரி பெண்ணே

வஸுந்தரா

பெண்களின் சீர்திருத்தத்தைப் பற்றிப் பல வருஷங்களாக முரசறைவதைப் பார்த்தால், உண்மையிலேயே இன்று பெண்கள் வெகு தூரம் முன்னேறிவிட்டார்களோ என்றுதான் தோன்றும். ஆனால் அக்கம்பக்கத்தை உற்று நோக்கினால் நாம் இருந்த இடத்தை விட்டு அவ்வளவாக அசைந்துவிடவில்லை என்பது தெரியும். விதிவிலக்காக ஏதோ சில பெண்கள் நிறையப் படித்திருக்கிறார்கள், செயலாற்றல் மிகுந்தவர்களாக இருக்கிறார்கள்; அவர்களைப்பற்றி இங்கே பேச்சில்லை. மொத்தத்தில் நமது சமூகம் இன்னமும் இருளிலேயேதான் கிடந்து தவிக்கிறது. கண்ணைத் திறந்து வெளிச்சத்தைப் பார்க்க நமக்குத் துணிவு இல்லை, விருப்பம் இல்லை, உற்சாகம் இல்லை. என்னைச் சுற்றியுள்ள, படித்துப் பட்டம் பெற்ற பெண்மணிகளையுங் கூடச் சேர்த்துக்கொண்டுதான் நான் பேசுகிறேன்: நமது சீர்திருத்தம் உடுப்பிலும் தளுக்கிலுந்தான் இருக்கிறது. அதிலும் இன்ன பாஷன் புதியது, இன்னது பழையது என்று முடிவு கட்டுவது சிரமமான வேலை.

**பெண்கள் எப்படி முன்னேறுவது? ஆண்கள்தாம் அதற்குத் தடையா? இல்லை என்கிறார் இந்தப் பெண்மணி. பெண்கள் முன்னேறச் சில யோசனைகளும் கூறுகிறார். பெண்களின் சீர்திருத்தத்துக்காக இவர் நிறைய உழைப்பவர். கதைகள், கட்டுரைகள், சொற்சித்திரங்கள் ஆகியவையும் ஏராளமாய் மராட்டியில் எழுதியுள்ளார்.**



முரடனுடைய பிடியில் இருப்பதாக ஒரு பிரமை

முன்பெல்லாம் முழங்கை வரைக்கும் நீண்ட ரவிக்கை அணிந்து, மேல்புடைவை விலகாமல் இழுத்துப் போர்த்துக் கொள்வார்கள். இப்பொழுது தோள்பட்டையில் கொசுவம் வைத்த ஜம்பர் அணிந்து, இடது தோளிலே புடைவைத் தலைப்பைத் தொங்கும்படி விட்டுக் கொள்வது நாகரிகமாக இருக்கிறது. நாகரிகம் எதுவாக இருந்தாலும் சரிதான், பெண்களின் பொது உயர்வுக்கு ஏற்றபடி அதைக் கைக்கொள்வதில் ஏதும் தடை சொல்ல முடியாது. இன்றைக்குப் புதிய நாகரிகமாகத் தோன்றுவது நாளைக்குப் பிற்போக்காகத் தோன்றவும் கூடும். மனிதருக்கு ஒரே பொருளைத் திரும்பத் திரும்பப் பார்த்தால் வெறுப்பு உண்டாவது இயல்பு. அழகுக்காக

காப்பிரைட்: வஸந்த் (மராட்டி: ஜனவரி '48), பம்பாய் 4.

வும் புதுமைக்காகவும் உடைவகைகளை மாற்றிக்கொள்வது அவசியந்தான் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் மேலெழுந்தவாரியாக வாழ்க்கையிலே மாறுதல்கள் செய்து கொள்வது சீர்திருத்தமாகாது. கிணற்றிலுள்ள தூர்வை வாரி எடுக்காமல் மேலே தண்ணீரை மட்டும் இறைப்பதனால் கிணறு சுத்தமாகிவிடாது.

இன்றுவரைக்கும் பெண்களின் முன்னேற்றத்துக்காக ஆண்களே முயன்று வந்திருக்கிறார்கள். "நீங்கள் அறியாமையில் மூழ்கி இருக்கிறீர்கள்; உங்கள் வாழ்வு துன்பமயமாக இருக்கிறது; பழைய கொள்கைகள் பலவும் உங்கள் மதிப்பைக் குறைத்துவிட்டன" என்று அவர்கள் கூவியிருக்கிறார்கள்; இப்போதும் கூவுகிறார்கள். ஆனால் இன்னமும் இது நமக்கு உண்மையென்றே படவில்லை. நாம் அறியாமையில் மூழ்கியிருப்பதாகவே நமக்குத் தோன்றவில்லை. எந்த அநீதியினால் நமது வாழ்வு குறுகி இருக்கிறது, பல்லாயிர வருஷத்துக் கொள்கைகளிலே எவை நமது முன்னேற்றத்தைத் தடுக்கின்றன, எந்தத் துன்பங்கள் நமது உள்ளத்தைக் கசக்கிப் பிழிகின்றன என்பவையெல்லாம் நமக்குத் தெரிவதில்லை. பாட்மிண்டன் கோர்ட்டுக்கு விளையாடப் போய்விட்டால் முன்னேற்றத்தின் உச்சியை எட்டிவிட்டதாகப் பல பெண்மணிகள் கருதுகிறார்கள். பரந்த வாழ்க்கையில் துணிச்சலோடு ஈடுபட வேண்டும் என்ற உணர்ச்சியே நமக்கு இன்னமும் ஏற்படவில்லை. சில்லறை விளையாட்டுக்களிலே சீர்திருத்தம் செய்வதால் நம் சிக்கல்கள் தீர்ந்து போகுமா?



பெண்களின் முன்னேற்றத்துக்குப் பெண்களே தடை

நமது பொருளாதாரம், மண வாழ்க்கை, தனிப்பட்ட விடுதலை, குடும்ப வாழ்க்கை, லட்சியம், மறுமணம், விவாக ரத்து முதலிய சிக்கல்களினால் நமது வாழ்க்கை இன்று நிலையற்றுத் தவிக்கிறது; வாழ்க்கையிலே எக்கச்சக்கமாக நாம் மாட்டிக்கொண்டிருக்கிறோம். இதைப்பற்றி ஆண்கள் மட்டுமே சிந்திக்க வேண்டுமோ? தேவையில்லாத கூச்சத்தையும் அச்சத்தையும் ஒதுக்கிவைத்து, நமது வாழ்க்கைச் சிக்கல்களைப்பற்றி நாமே சிந்திக்க இன்னும் வேளை வரவில்லையா?

இந்த வேளை வந்துவிட்டது; ஆனால் இதைப்பற்றிப் பிறர் பேசுவது நல்லது என்று நினைக்கும் பெண்களின் கூட்டமொன்று இன்று இருக்கிறது. இந்தச் சிந்தனைகளை நேரடியாக வாழ்க்கையிலே அமலுக்குக் கொண்டுவருவது ஒரு புறம் இருக்கட்டும்; இவற்றைப் பற்றிப் பேசவே பலருக்குப் பயமாக இருக்கிறது. கையில் பிரம்புடன் எவனோ ஒரு முரடன் தங்கள்மீது ஆதிக்கம் செலுத்தி எதிரே நிற்பதாக எண்ணி, அந்தப் பயத்தினாலே இவர்கள் நடுங்கிச் சாகிறார்கள். "அந்தப் பேச்சே வேண்டாமேடீ! நாலு பேர் என்ன சொல்லுவார்களோ? அதைவிட நாம் இப்படியே செத்துப் போவது நல்லது!"

என்ற பேச்சு நிலவும் இடத்திலே, யாராவது முன்வந்து நமக்கு விடுதலை அளித்தாலும் அதைத் தாங்கும் வல்லமை நமக்கு எங்கிருந்து வரும்? வழக்கத்துக்கு மாறான ஒரு காட்சியைக் கண்டால் நமது மனம் கலங்குகிறது. நாம் பிற்போக்காக இருப்பது நமக்கே தெரிந்திருந்தும் உலகத்தாரிடம் உள்ள பீதியினால் எதைச் செய்வதற்கும் நமக்குத் தன்னம்பிக்கை இல்லை. நமது வாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்து நாளை உலகில் நாம் சாமர்த்தியசாலிகளாக வாழ்வதை விட்டு, இன்று நமது பலவீனத்துடன், 'நாம் நம் அரசருக்கு ராணியாக இருக்கிறோம்!' என்று நம்மை நாமே திருப்திப்படுத்திக்கொள்கிறோம். ஆனால் இந்தச் சிக்கல்கள் நம்முடைய பெண்களை நாளைக்குத் துன்புறுத்தாமல் விடப்போவதில்லை.

தாம் ஒன்றும் செய்யாவிட்டாலும், பிற பெண்களின் சீர்திருத்தப் பேச்சைப்பற்றி வம்பளக்கும் பெண்மணிகள் ஏராளமாக இருக்கிறார்கள். ரேஷன் அரிசியிலுள்ள கல்லையும் மண்ணையும் பொறுக்கிக்கொண்டே, இவர்கள் நல்லவளைக் கெட்டுப் போனவள் என்பார்கள்; துரும்பைத் தூணாக்குவார்கள். நடுநிலையோடு சிந்தித்துப் பார்த்தோமானால், இன்று பெண்களின் முன்னேற்றத்துக்குப் பெண்களே தடையாக இருக்கிறார்கள்; அவர்கள் தமக்குள்ளே பொறாமையை விளைவித்துச் சச்சரவுகளைப் பெருக்குகிறார்கள்; சிறிதும் இரக்கமின்றி நடந்து கொள்கிறார்கள். ஆண்களுக்கு ஸர்ட்டிபிகேட் கொடுப்பது என் நோக்கமல்ல; ஆயினும் அவர்கள் பெண்களிடம் இரக்கமுள்ளவர்கள் என்று கூற நான் தயங்கமாட்டேன். பெண்ணிடம் பெண்ணுக்குத்



முதல் தடவையாக வாசலைப் பார்க்கிறாள்.

தான் இரக்கம் தோன்றவேண்டும்; பெண்மனம் பெண்ணுக்குத்தான் தெரியவேண்டும். ஆனால் பெரும்பாலும் அப்படி நடப்பதில்லை. ஒரு விதவைப் பெண் குங்குமம் இட்டுக்கொண்டால், ஒரு நாளைக்குப் பத்துத் தடவை பெண்டுகள் அதைப்பற்றிப் பேசுவார்கள். மறுமணமான ஒரு பெண்மணி மூக்குத்தி வாங்கிக்கொண்டால் பத்துப் பெண்டிர் நாக்கை வளையாமலிருக்க மாட்டார்கள். தான் காதல் மணம் செய்துகொண்ட ஒரு மங்கை மற்றொருத்தியின் காதல் மணத்தைப் பற்றி அநுதாபத்தோடு பேசுவாள் என்று எதிர்பார்க்க முடியாது. "அவளா! அம்மாடி! ரொம்பப் பெரிய விஷயம் அது!" என்று அவள் சொல்லாமலிருந்தாலே போதுமே! சிறுவயதில் தாங்கள் கெட்டுப்போயும் தங்களைப் பதிவிரதைகளாக எண்ணிக்கொண்டு, தமது வீட்டில் இளம் விதவையான மருமகளையோ நாத்தியையோ பழிக்கும் பெண்மணிகள் பலரை நான் பார்த்திருக்கிறேன். தன்னால் ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும், வாழ்க்கைப் பாதையிலே முன்னேறிய ஒரு பெண்ணை உற்சாகப்படுத்தி வியப்பதும், வீழ்ச்சி அடைந்தவளை இரக்கத்தோடு தூக்கி நிற்க வைப்பதும், துரதிருஷ்டமாக



பணக்காரனுக்கு மாலை போடும் உலகம்

வாழ்பவளைக் கண்டு பரிதாபப்படுவதாகக் காட்டிக்கொண்டு பெருமைப்படுவதை விட்டு அவளுக்குத் தன்னால் இயன்ற உதவியைச் செய்வதும், குறுகிய மனப்பான்மையை ஒழித்துப் பெண்வாழ்வின் சிக்கல்களைப் பரந்த நோக்கத்தோடு விடுவிக்கச் சிந்திப்பதும் இன்று ஒவ்வொரு பெண்ணுக்கும் உரிய மிகப் பெரிய கடமை. பெண்களுக்குத் தேவையான முதல் சீர்திருத்தம் இதுதான்.

பெண்கள் குறுகிய மனப்பான்மையோடு வாழ்வதற்கு அவர்களே முக்கியமான காரணம் என்று சொல்ல முடியாது. பல நூற்றாண்டுகளாகப் பெண் திரை மறைவிலே வாழ்ந்திருக்கிறாள். முகமூடியணிந்த கோஷா உடையைப்பற்றி மட்டும் நான் குறிப்பிடவில்லை; சிந்தனையுலகிலும், உலக அநுபவத்திலும் பெண் நாலு சுவர்களின் எல்லையைத் தாண்டி வெளியே தலை காட்டவில்லை. இப்பொழுதுதான் அவள் வாசற்கதவைத் திறந்து வெளியே பார்க்க ஆரம்பித்திருக்கிறாள். பிறந்து நாலு நாளான பச்சைக் குழந்தை வெளிச்சத்தைப் பார்த்தால் கூசிக் கண்ணை மூடிக்கொண்டு உடலைச் சுருக்கிக்கொள்கிறது. அந்த நிலையில்தான் இன்று நாம் இருக்கிறோம். வெளியுலகத்திலே நமக்கும் பங்கு வேண்டும் என்று நாம் உணருகிறோம். ஆனால் கட்சிப் பிரதிகட்சிகளின் நடுவே வழியை உண்டாக்குவதற்கு நாம் செய்ய வேண்டிய முயற்சிகளையும், அந்த முயற்சியில் தெருவில் நடக்கும்போது தடுக்கி விழுந்தால் ஜனங்கள் என்ன சொல்வார்களோ என்ற பயத்தையும் எண்ணும்போது நமக்கு மார்பு படபடவென்று அடித்துக்கொள்கிறது. இது நம்முடைய குற்றமல்ல. இத்தனை ஆண்டுகளாக நாம் ஒரே இடத்தில் புளிமூட்டைபோல விழுந்து கிடந்தோம். இன்று வாழ்க்கையென்னும் பரந்த வெளியில் ஆண்களுக்குச் சரியாக ஓடும் திறமை நமக்கு இல்லையென்றால் இது நமது தவறு அல்ல.

பெண்களின் வாழ்க்கையைச் செம்மையாக அமைக்கும் துணிவு நமக்கு வேண்டும். நம் கொள்கைகளை நாணயமாக வெளியே எடுத்துச் சொல்ல நாம் சிறிதும் கூச்சப்படக் கூடாது. நெருக்கடியான சந்தர்ப்பங்களில் சாமர்த்தியமாக நடந்து கொள்ளும் தைரியமும் நமக்கு வேண்டும். உறுதியான உள்ளத்தோடு, கடுமையான வாழ்க்கைப் பாதையில் கம்பீரமாகவும் சிரித்த முகத்தோடும் பெண்கள் வழி நடந்தால் அவர்களைத் தடுப்பவர் யாருமில்லை. விடுதலையைப் பெறுவதற்கு யாருடைய அநுமதியும் வேண்டியதில்லை. நம்முடைய போராட்டத்தை நாமே நடத்தவேண்டும். நம் சிக்கல்களை நாமே விடுவித்துக் கொள்ள வேண்டும். நம்மைக் கொண்டே நாம் வாழவேண்டும். எந்த நாடும், எந்தச் சமூகமும், எந்த மனிதனும் கற்றுக்கொள்ள வேண்டிய முதல் விஷயம் இதுதான்.

நமக்குச் சம உரிமை வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, டிராமிலும் ரெயிலிலும் ஆண்கள் தமது இடத்தை நமக்கு ஒழித்துக் கொடுக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்ப்பது எவ்வளவு தவறு! உலகப் போராட்டத்திலே நாமும் சுய மரியாதையோடு வாழவேண்டும் அல்லவா? அப்படியானல் தலை நிமிர்ந்து நடந்து, உங்கள் வல்லமையைக் காட்டுங்கள். இன்று வரையில் பெண்கள் நாட்டுக்காகவும் குடும்பத்துக்காகவும் எவ்வளவோ தியாகங்கள் செய்திருக்கிறார்கள்; ஆனல் பலவீனர்கள் செய்யும் தியாகங்களுக்கு உலகில் என்றுமே மதிப்புக் கிடையாது. ஒரு பணக்காரன் ஒரு ஸ்தாபனத்துக்குப் பத்து லட்சம் ரூபாய் நன்கொடை அளித்தால் உலகம் அவனைப் போற்றுவது இயல்பு. ஆனல் போரிலே அடிபட்டுச் சாகும் வீரனுடைய பிணத்தை யாரும் தேடித் திரிவதில்லை; அவன் எத்தனை பெரிய தேசபக்தனுக இருந்தாலும் அவன் குடும்பம் நாசமானதைப்பற்றி யாரும் பேச்செடுப்பதில்லை.

ராஜ்யத்தைப் பெறுவதை விட அதை நிலைக்க வைப்பதுதான் மிகவும் சிரமம் என்பார்கள். உரிமைகளுக்காகப் போரிடுவது மட்டும் பெரிதல்ல; தனி நபர் என்ற முறையில் பெண் உயர்வாகவும் மதிப்போடும் வாழ்ந்து, பிறரைச் சார்ந்து நில்லாமல், தன் கடமைகளை நன்ருகச் செய்து முடித்து, உலகிலே தலை நிமிர்ந்து விடுதலையோடு நடக்கும் வல்லமையைப் பெற வேண்டும்.



‘நம் அன்பைக் கவர்ந்த கவர்னரும் அவர் படும் பாடும்.’

—அமிர்த பஜார் பத்திரிகை

ஆபரேஷன் என்ருல், மயக்க மருந்து கொடுக்காமல் அநேகமாக நடப்பதில்லை, இந்த மருந்தின் வளர்ச்சிதான் என்ன அதிசயம்!

# மயக்க மருந்து

என். என். டே

நோயுடன் நவீன வைத்தியர்கள் தொடுக்கும் போராட்டத்தில் இன்றியமையாத ஒரு துணையாக இருப்பது மயக்க மருந்து. இது பத்தொன்பதாம் நூற்ருண்டில், விஞ்ஞானிகள் வேடிக்கை காட்டும் ஒரு புதுமையாகவே இருந்தது. சென்ற நூற்ருண்டில், மயக்க மருந்து பொதுவாக எவ்விதம் வளர்ச்சி அடைந்தது என்பதை இங்கே பார்ப்போம்.

சஸ்திர சிகிச்சையால் ஏற்படும் வலியைத் தீர்க்க என்ன செய்யலாம் என்று, மிகப் பழங்காலத்திலிருந்தே சஸ்திர சிகிச்சை நிபுணர்கள் முயன்றுகொண்டிருந்தார்கள். இதற்காக உள்ளுக்கு மருந்து கொடுக்கும் வழக்கமும் மிகப் பழங்காலம் முதலே இருந்து வருகிறது. ரணசிகிச்சையின் வலியை நோயாளி மறக்கும்படி செய்ய, கஞ்சாவைக் கொடுத்து வந்தார்கள் சீன வைத்தியர்கள். நெஞ்சில் உள்ள 'கரோடிட்' என்ற ரத்தக் குழாயை அமுக்கி, ஒரு வகைக் கரிப் புகையின் உதவியுடன் மயக்கம் உண்டாக்கினுர்கள் அஸிரிய வைத்தியர்கள். கீழ்நாடுகளில் மனோவசியம் செய்வதன் மூலம் நோயாளியைப் பிரஞ்ஞை இழக்கச் செய்தார்கள். பிற்காலத்தில், லாகிரி வஸ்துக்களைக் கொடுத்து, அதன் மூலம் நோயாளிகளுக்கு வைத்தியர்கள் மயக்கம் உண்டாக்கினுர்கள்.

ஆனுல், முற்றும் பத்திரமாக மயக்கம் கொடுக்கக் கூடிய முறைகளைக் கண்டுபிடித்த பெருமை பத்தொன்பதாம் நூற்ருண்டில் (1842 - '47) வாழ்ந்த நிபுணர்களுக்கே உரியது. நைட்ரஸ் ஆக்ஸைட் என்பதை மயக்க மருந்தாக உபயோகிக்கலாம் என்று யோசனை சொன்னவர் ஸர் ஹம்ப்ரி டேவி. ஈதர் திரவத்துக்கு மயக்கும் சக்தி உண்டு என்று கண்டுபிடித்தவர் ஸி. டபிள்யூ. லாங். நைட்ரஸ் ஆக்ஸைடை நேரே சஸ்திர சிகிச்சையில் உபயோகித்துக் காட்டியவர் ஹொரேஸ் வெல்ஸ். ஈதர் திரவத்தை அந்தமாதிரி உபயோகித்துக் காட்டியவர்கள் ஸி. டி. ஜாக்ஸன், மார்ட்டன் என்ற இருவருமாவர். குளோரபாரம் என்ற மயக்க மருந்தைக் கண்டுபிடித்தவர்கள் ப்ளௌரென்ஸ், ஸர் ஜேம்ஸ் சிம்ஸன் என்ற இருவருமே.

குளோரபாரம் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு, மயக்க மருந்து விஷயத்தில் 1923-ஆம் ஞு வரையில் விசேஷ அபிவிருத்தி எதுவும் ஏற்படவில்லை. 1923-க்குப் பிறகு, எதிலீன், ஸைக்ளொப்ரொபேன், எவிபால் முதலியவையும் தியொ-ஹார்பிசுரேட் மருந்து வகை சிலவும் தீவிரமாய் நிபுணர்களால் ஆராயப்பட்டு வருகின்றன.

காப்பிரைட்: கரண்ட் ஸயின்ஸ் (ஆங்கிலம்: டிசம்பர் '47) பெங்களூர்.

முன் நாட்களில், மயக்கம் என்பது என்ன என்ற காரணத்தை யாரும் ஆராயவில்லை. ஏதோ மயக்கம் என்ற ஒன்று உண்டாகிறது என்பதோடு அவர்கள் திருப்தியடைந்து விட்டார்கள். ஆனால், பிரஞ்ஞை என்பது என்ன என்ற ரகசியத்தை ஏதோ ஓரளவு அறிந்துகொண்டால் தான், மயக்கம் என்பதன் இயல்பையும் நாம் புரிந்து கொள்ள முடியும் என்ற விஷயத்தை, ஆராய்ச்சியாளர்கள் இப்போது உணர்ந்துவிட்டார்கள். திட்டமாகச் சொன்னால், புலன் உணர்ச்சியை இழப்பதே இங்கே 'மயக்கம்' என்று குறிக்கப்படுவது. ஆனால், சகல புலன் உணர்ச்சிகளையும் இழக்கச் செய்யும் மயக்க மருந்துகளோ, பிரஞ்ஞையையும் இழக்கச் செய்து விடுகின்றன. பல முறைகளில் இந்த மயக்கத்தை உண்டாக்கலாம். அவை யாவன : (1) சஸ்திரசிகிச்சை தேகத்தின் எந்த இடத்தில் நடக்கிறதோ அந்த இடத்தில் உள்ள புலன் உணர்ச்சி நரம்புகளின் முனைகள் மட்டும் சிறிது நேரத்துக்கு மரத்துப் போகச் செய்தல் ; (2) உடம்பில் சஸ்திர சிகிச்சை நடக்கிற பகுதிக்கு வரும் புலன் உணர்ச்சி நரம்புகள் முழுவதுமே சிறிது நேரத்துக்கு மரத்துப் போகச்செய்தல். இந்த இரண்டு முறைகளிலும் நோயாளி பிரஞ்ஞை இழப்பதில்லை. ஆனால், பின்கண்ட இரண்டு முறைகளிலுமோ அவன் பிரஞ்ஞை இழந்துவிடுகிறான் : (3) ஆவியாய்ப் பரவக் கூடிய சில மருந்துகளை மூக்கிலே காட்டுவது ; (4) ஆசனம், நரம்பு முதலியவற்றில் சில மருந்துகளை ஊசி போடுவது.

இந்த 'மயக்கம்' என்பது, பல அம்சங்களில் தூக்கத்தைப்போலவே இருக்கிறது.

இக் காலத்தில் வரவரச் சிக்கலும் கடுமையுமான சஸ்திர சிகிச்சைகள் நடந்து வருகின்றன. இதனால், 'மயக்க' மருந்தும் மிகமிக அதிகமாய்த் தேவையாகி வருகிறது. முதலாவதாகப் பத்திரம் முக்கியமாகும். எந்த அளவில் எவ்வளவு நேரத்துக்கு வேண்டுமோ அந்த அளவில் அவ்வளவு நேரத்துக்கு மட்டிலும் 'மயக்கம்' உண்டாக்குவது தேவையாகிறது. தவிர அந்த 'மயக்கம்' நோயாளிக்கும் சௌகரியமாயிருக்க வேண்டும் ; வைத்தியருக்கும் சௌகரியமாயிருக்க வேண்டும்.

பற்பல மயக்க மருந்துகள் இப்போது உபயோகத்தில் இருக்கின்றன. அவற்றில், ஈதர், குளோரபாரம், எதில் குளோரைட், வினில் ஈதர், மூவர்ண எதிலீன், நைட்ரஸ் ஆக்ஸைட், எதிலீன், மார்பைன் கலந்தோ கலவாமலோ உபயோகிக்கும் அவெர்ட்டின், ஸ்கோபலாமைன், ஹார்பிசுரேட் வகைகள் என்பவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

மூக்கிலே இழுக்கும் ஆவி பரவும் மயக்க மருந்துகளின் குணங்குறைகளை இங்கே விரிவாக விளக்க இயலாது. ஒன்று மாத்திரம் சொல்லலாம் : அவற்றில் நைட்ரஸ் ஆக்ஸைட் என்ற மருந்தைவிட, குளோரபாரம் அதிக அபாயமானது. சாதாரணக் கேஸ்களிலெல்லாம் ஈதர், நைட்ரஸ் ஆக்ஸைட் இரண்டும் பத்திரமானவை. சொற்ப நேரத்துக்குள் நடத்திவிடக் கூடிய சஸ்திர சிகிச்சைகளில் நைட்ரஸ் ஆக்ஸைட் ஒன்றே மிகவும் பத்திரமானது.

தியோ - ஹார்பிசுரேட் வகைகளில் 'கெமிதால்' என்ற ஒரு புது மருந்தைச் சமீபத்தில் உபயோகிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இது வரையில் அதன் பலன்கள் மிகவும் திருப்தி யளித்திருக்கின்றன.

மூக்கில் இழுக்கும் ஆவி பரவக் கூடிய மயக்க மருந்து வகைகளை ஒன்றோடொன்று கலந்து உபயோகிக்கச் சில முயற்சிகள் நடந்ததுண்டு. ஆனால், அவையெல்லாம் பலிக்கவில்லை. ஆனால், ஒன்றுக்குப்பின் ஒன்றாக, இரண்டு மூன்று மருந்துகளை உபயோகித்து வெற்றி கண்டிருக்கிறார்கள்.

மூக்கிலே இழுக்கும் மயக்க மருந்துகளை அளவு பிசகாமல் கணக்காகவும் ஒழுங்காகவும் கொடுக்கத் தக்க பல நுட்பமான கருவிகளைச் சமீபத்தில் செய்திருக்கிறார்கள்.

மயக்க மருந்தினால், அபாயம் ஏற்பட்டுச் செத்த சாவுகள் பற்றிச் சரியான புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. வெவ்வேறு மருந்துகளின் அபாயத்தால் ஏற்படக் கூடிய சாவு விகிதத்தை இவ்வாறு குறிப்பிடலாம்: குளோரபாரம், 3500-இல் 1; ஈதர், 16,000-இல் 1; எதில் க்ளோரைட், 3,000-இல் 1; சொற்ப நேரச் சிகிச்சையில் நைட்ரஸ் ஆக்ஸைட், 50,00,000-இல் 1.

சஸ்திர சிகிச்சை ஒரு காலத்தில் மிகவும் குறைவாயிருந்தது. மயக்க மருந்து கொடுத்து இப்போது சஸ்திர சிகிச்சை செய்வதால், அந்தச் சிகிச்சை செய்துகொள்வோர் ஏராளமாகிவிட்டார்கள். இனி மயக்க மருந்து இல்லாமல், சஸ்திர சிகிச்சை என்பதே நடவாது. மயக்க மருந்து உபயோகிப்பதால், உடம்பின் எந்தப் பகுதியிலும் சஸ்திர சிகிச்சை நிபுணர் ஆபரேஷன் செய்ய முடிகிறது. மயக்க மருந்தை உபயோகிக்க முடியாத காலத்தில் அவசர அவசரமாக ஆபரேஷன் செய்தது போல் இல்லாமல், இன்று சஸ்திர சிகிச்சை நிபுணர்கள் நிதானமாகவும் மிகக் கணக்காகவும் ஆபரேஷன் செய்ய முடிகிறது. சமீபத்தில் மயக்க மருந்து அடைந்திருக்கும் அபிவிருத்தி, மனித குலத்துக்கே ஒரு பெரிய வரமாகும்.

## திறமையில்லாதவர்!

திருவாவடுதுறையில் சில வருஷங்களுக்கு முன் சுப்பிரமணிய தேசிகர் என்பவர் ஆதீனத் தலைவராக இருந்தார். அவரிடம் தங்கள் புலமைத்திறத்தைக் காட்டிப் பரிசு பெறுவதற்குப் புலவர்கள் முந்துவார்கள். ஒரு நாள் தேசிகர் பல புலவர்களிடையே வீற்றிருந்து அவர்களோடு பேசிக்கொண்டிருந்தார். ஒவ்வொருவரும் அவருடைய பெருமையை எடுத்துரைத்தார்கள். அப்போது ஒரு வடமொழி வித்துவான், "இவர்கள் பல வகையில் சிறப்புள்ளவர்களே. ஆனாலும் ஒரு விஷயத்தில் இவர்களுக்குத் திறமை போதாது. அதில் இவர்களுக்கு முன் இருந்த பண்டார சந்நிதிகளின் திறமை இவர்களுக்கு இல்லை" என்றார். இதைக் கேட்டதும் எல்லோரும் திடுக்கிட்டார்கள். வித்துவான் சிறிது மௌனமாக இருந்தார். பிறகு, "ஆம். இவர்களைப் பார்த்துப் பொறுக்கித் தமக்குப் பின் ஆதீனத்தலைவராக இருக்கும்படி முந்திய பண்டார சந்நிதிகள் அமர்த்தினாரே. இவர்களுக்கு அப்படி ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் 'திறமை ஏது? இவர்களைப் போல இனி யார் கிடைக்கப் போகிறார்கள்? அந்த விஷயத்தில் இவர்களுடைய சக்தி குறைந்ததுதானே?" என்றார்.

**குழந்தைகளிடம் நமக்கு அளவற்ற அன்பு. என்றாலும், வளர்க்கத் தெரியாமல் கெடுக்கிறோம். சரியாக வளர்க்கும் வழி எது?**

# குழந்தையைக் கெடுக்காதீர்கள்

★

‘குழந்தைகளை வளர்க்கத் தெரியாமல் கெடுத்துவிடுகிறார்கள். ஐயோ! கெடுத்துவிடுகிறார்கள்’ என்று சொல்கிறார்களே; இதற்கு அர்த்தம் என்ன? குழந்தைகள் கேட்பதை யெல்லாம் கொடுத்துப் பழக்குவதால், அவர்கள் கெடுகிறார்களா; அல்லது அவர்கள் முக்கியமாக எந்தப் பொருள்களை ஆசை வைத்துக் கேட்கிறார்களோ அவற்றைக் கொடுக்காமல் மறுப்பதால் குழந்தைகள் சிடுசிடுப்பும் ஏக்கமும் கொண்டு கெடுகிறார்களா?

கோபுவுக்குச் செல்லம் கொடுப்பதில் அவன் அம்மாவுக்கு இஷ்டமில்லை. பக்கத்து வீட்டுச் சுந்து வைத்திருக்கிற மாதிரி தனக்கும் ஓர் ஏரோப்ளேன் வேண்டும் என்று அம்மாவை அவன் கேட்டான். “சரி, வாங்கித் தருகிறேன். இன்றுமுதல் அதற்காகத் தினம் சாயந்தரம் கால் ரூபாய் கொடுக்கிறேன். உண்டியில் போட்டு வைத்துக்கொள். எட்டு நாளைக்கு அப்புறம் ஏரோப்ளேன் வாங்கிக் கொள். ஆனால் தினம் சமர்த்தாய், எனக்கு உபகாரமாக, நான் சொல்லுகிற வேலையை யெல்லாம் செய்ய வேண்டும். கன்றுக் குட்டிக்கு இரண்டு வேளையும் வைக்கோல் போடவேண்டும். நான் கிணற்றுக்குத் தண்ணீர் எடுக்கப் போகிறபோது கூடவே வந்து ஒரு செம்பு ஜலம் கொண்டு வரவேண்டும்” என்றாள் அவன் அம்மா.

கோபு சமர்த்தாக அப்படியே இந்த இரண்டு நாளும் செய்து வருகிறான். அவன் அம்மாவின் தோழிகளெல்லாம், “அதுதான் சரி. கோபுவுக்குச் செல்லம் கொடுத்துக் கெடுக்காமலே, அவன் வேண்டுவதையும் வாங்கிக் கொடுக்கிறாய்” என்று அவளைப் பாராட்டினார்கள்.

ஆனால் இந்த இரண்டு நாளாகக் கோபு மாத்திரம் சந்தோஷமாகவே இல்லை; என்னவோ ஏங்கிய மாதிரி இருக்கிறான். ராத்திரி யெல்லாம் என்ன என்னவோ கெட்ட கனாக் காண்கிறான். எதையோ பறிகொடுத்தவன்போலத் தோன்றுகிறான். அவன் அம்மாவுக்கு நிஜமாக அவனிடம் பிரியம் இருக்கிறதா என்று அவன் சந்தேகப் படுவதாகவே தோன்றுகிறது. வெளியே போய் விளையாடுவதற்கும் தோழர்கள் யாரும் இல்லை.

சுந்துவுக்கு அவன் அம்மா திடீரென்று ஒரு நாள் ஏரோப்ளேன் வாங்கி வந்து கொடுத்தாளாம். “இதோ பார் சுந்து, உனக்கு ஓர் ஏரோப்ளேன்” என்று அன்போடு அவள் கொடுத்தாளாம். சுந்து பள்

**ஆதாரம்: பில்லிஸ் பி. ஹெல்லர் எழுதிய கட்டுரை; பேரன்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்; ஜனவரி ’47), 52, வான்டர்பில்ட் அவென்யூ, நியூ யார்க்.**

ளிக்கூடத்தில் இதைக் கோபுவிடம் சொன்னான்.

கோபுவுக்கு வேண்டியது ஏரோப்ளேன் அல்ல. சுந்துவின் அம்மா அப்பா சுந்துவிடம் காட்டுவது போன்ற அன்புதான் இவனுக்கும் வேண்டும். அந்த அன்பை இவனிடம் இவனுடைய அப்பாவும் அம்மாவும் காட்டுகிறார்களா என்ற சந்தேகம் இவனை அலைக்கிறதே. இவன் எப்படிச் சந்தோஷமாக இருக்க முடியும்?

கமலா ஓர் எட்டு வயதுப் பெண். பக்கத்துத் தெருவில் இருந்த அவள் சிநேகிதி பத்மா ஒரு நாள் அவளைப் பொம்மைக் கல்யாணத்துக்குக் கூப்பிட்டிருந்தாள். இன்னும் பல தோழிகளும் அங்கே வருவார்களாம். கமலா, அப்பாவிடம், "நானும் போய் வருகிறேன், அப்பா" என்றாள். "கூடாது, அங்கே யெல்லாம் நீ போகக் கூடாது. கண்ட குட்டிகளோடு சேர்ந்து கெட்டுப்போய் விடுவாய்" என்று அப்பா மறுத்துவிட்டார். ஒரு வாரமாக, 'இதற்குப் போகவேண்டும்; போக வேண்டும்' என்று ஆசையாக இருந்த கமலாவுக்கு எப்படி இருக்கும்! அவள், "போகத்தான் போவேன்" என்று பிடிவாதம் பிடித்தாள். அழு அழு என்று அழுதாள், முரண்டினாள். அவளுடைய அம்மா முதுகெலும்பில்லாத ஒரு பிராணி. கடைசியில் எப்படியோ அம்மா சிபார்சில் அப்பா மசிந்துவிட்டார். "சரி, தொலை" என்றார். கமலா போனாள். ஆனால், அவள் மனசில் உத்ஸாகமே இல்லை. தான் பண்ணின பிடிவாதமெல்லாம் நினைவுக்கு வந்து நெஞ்சை அறுத்தது. அந்த விளையாட்டை அவளால் ரசிக்க முடியவே யில்லை. இப்படித் தன் சந்தோஷத்தைக் கெடுத்ததற்காக அப்பாவின் மேலும் அம்மாவின் மேலும் அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. உள்ளூற அவர்களின் மேல் ஒரு வகை வெறுப்பும் படரத் தொடங்கிவிட்டது!

தங்களுக்கு எப்போதும் தொல்லை கொடுக்கும் குழந்தைகளுக்கு, 'சண்டிக் குழந்தைகள்' என்று பெரியவர்கள் நாமகரணம் செய்துவிடுகிறார்கள். மனத்தத்துவ சாஸ்திரிகளோ, "இந்தக் குழந்தைகளின் மனத்தில் சிக்கல் இருக்கிறது. இவற்றை ஜாக்கிரதையாக நடத்தி நேராக்க வேண்டும்" என்கிறார்கள்.

இப்படிப்பட்ட குழந்தைகள் பொய் சொல்லுகின்றன; ஏமாற்றுகின்றன; எதற்கெடுத்தாலும் சண்டித்தனம் செய்கின்றன. ஆனால் பிறக்கும்போதேயா இவை இப்படிப் பிறந்தன? ஒருபோதும் இல்லை! இவற்றின் மனத்துக்குள் ஆழத்தில் புதைந்து கிடக்கும் ஏதோ ஒரு கோளாறே இவற்றை இப்படி ஆக்கி விட்டது. ஏதோ ஒரு சமயத்தில் இந்தக் குழந்தைகளுக்கு அவசியமான அன்பும் பரிவும் கிடைக்கவில்லை. அந்தக் குறையே இந்தக் கோளாற்றுக்கும் அதனால் ஏற்பட்ட இந்தச் சண்டித்தனத்துக்கும் காரணம். பார்க்கப் போனால் இந்தக் குறை அப்படி ஒன்றும் பிரமாதமானதாக இருக்காது. அம்மாவின் மடியில் ஒரு குழந்தை ஏறி உட்கார விரும்பிய போது வேலைத் தொல்லையால் அவள் அதைத் தள்ளிவிட்டுப் போயிருப்பாள். "இந்தப் பெண்ணுக்குப் பதிலாக ஓர் ஆண் குழந்தை பிறந்திருக்கக் கூடாதா?" என்று அப்பாவும் அம்மாவும் பேசிக்கொண்டது ஏழு வயதுக் கமலியின் காதில் விழுந்திருக்கும். இந்தச் சிறு குற்றங்களே குழந்தைகளின் மனசில் இவ்வளவு பெரிய கலவரத்தையும் சிக்கலையும் உண்டாக்கி யிருக்கும்.

"நம்மிடம் அப்பா அம்மாவுக்கு நிஜமான பிரியமில்லை" என்ற சந்தேகமே இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம்.

"சரி, பின்னே குழந்தைகளை எப்படித்தான் வளர்க்க வேண்டும்? அவர்கள் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்துவிடவேண்டுமோ? அவர்களுடைய இஷ்டப்படியெல்லாம் ஆட வேண்டுமோ? அப்போதுதான் மனக் கோளாற்றில் சிக்கல் சண்டித்தனம் எதுவும் வராமல் தடுக்க முடியுமா?" இப்படி ஒருவர் கேட்கலாம்.

இல்லை, இல்லவே இல்லை; என் வாதம் இதுவல்ல. குழந்தையின் மன வளர்ச்சியை ஆராய்ந்த எல்லாத் தத்துவ சாஸ்திரிகளும் நான் சொல்வதைத்தான் வெகு நாளாகவே சொல்லி வந்திருக்கிறார்கள். ஆனால் நாம்தான் அதைத் தப்பர்த்தம் செய்துகொண்டிருக்கிறோம்.

'குழந்தையின் மனத்தில் கோளாறு வந்துவிடக் கூடாதே; பயம் புகுந்துவிடக் கூடாதே; ஏக்கம் பற்றிவிடக்கூடாதே' என்று பயந்து பயந்து குழந்தையை வளர்க்கும் இந்தக் காலத்து நாகரிகத் தாயும் சரி, குழந்தையை எதற்கெடுத்தாலும் மிரட்டியும் அடித்தும் வளர்த்த பழங்காலத் தாயும் சரி, இருவருமே குழந்தையைக் கெடுக்கத்தான் கெடுத்துவிடுகிறார்கள்.

ஒரே ஒரு விஷயம் நினைப்பிருந்தால் போதும்; குழந்தை தானே சரியாக வளரும். தாய் தந்தைமார் தங்கள் தங்கள் குழந்தைகளிடம் உண்மையாகவே அன்பு வைத்திருப்பதையும் குழந்தைகளைக் கண்டால் தங்களுக்குச் சந்தோஷம் உண்டாவதையும், குழந்தைகள் புரிந்து கொள்ளுமாறு செய்து விடுவார்களானால் போதும். வேறொன்றும் வேண்டாம்; இவர்கள் எந்த மனத்தத்துவ சாஸ்திரமும் படிக்கவேண்டாம்.

குழந்தைகள் ஏதாவது கேட்கும்போது, அதே நிலையில் நீங்கள் இருந்தால், உங்கள் விருப்பத்தை மறுப்பது உங்களுக்கு எவ்வளவு கஷ்டம் தரும் என்று யோசித்துப் பாருங்கள். அப்போது கமலாவைப் பொம்மைக் கல்யாணத்துக்குப் போக வேண்டாம் என்று தடுத்திருக்க மாட்டீர்கள்; உங்கள் வேலை அவசரத்தில் குழந்தை வந்து உங்கள் மடியில் உட்கார முயன்றபோது அதைப் பிடித்துத் தள்ளியிருக்க மாட்டீர்கள். பெண் குழந்தையை விட ஆண் குழந்தை சிறந்தது என்று பேசியிருக்க மாட்டீர்கள். அல்லவா? இந்த உண்மை அன்பும் பரிவுந்தான் குழந்தைக்கு வேண்டும்.

குழந்தை ஏன் மடியில் உட்கார வந்தது? ஒருவேளை தான் செய்த போக்கிரித்தனத்துக்கு அது உங்களிடம் மன்னிப்புக் கேட்க வந்திருக்கலாம். நீங்கள் அதனிடம் அன்பாய் இருக்கிறீர்களா, அதை மன்னித்துவிடுவீர்களா என்று முதலில் தெரிந்துகொள்ள இது ஒரு வழியாக இருக்கலாம்! நீங்கள் அதைத் தள்ளியது, தைரியமில்லாத குழந்தையின் மனத்தில் சிக்கலை உண்டாக்கிவிட்டது. உங்களிடம் பயத்தையும், உங்கள் அன்பில் சந்தேகத்தையும் உண்டாக்கிவிட்டது! சிறு விஷயந்தான். ஆனாலும் எவ்வளவு விபரீதமான பலன்!

உங்கள் குழந்தை வெகு தைரியசாலியாக வளரவேண்டும் என்பது உங்கள் ஆசை. நல்ல ஆசைதான். குழந்தை இரவில் எழுந்து வெளியே போய் எச்சில் துப்ப விரும்புகிறது. ஹால் விளக்கைப் போடப்போகிறது. "எதற்கு விளக்கு? என்ன பயம் இப்போது!

காலெட்டுத்தானே" என்று அதட்டு கிறுள் தாய். அந்தத் தாய் வயதா னவள்தானே. விளக்கில்லாமல் இருட்டில் ரோட்டில் கொஞ்ச தூரம் அவள் நடப்பதாக வைத்துக் கொள்வோம். அவளுக்கு எப்படி இருக்கும்? இருட்டைக் கடக்கும் வரையில் நெஞ்சு 'தித் தித்' என்று படபடக்காதா? இன் ஞெருவர் துணையிருந்தால் இந் தப் பயம் தோன்ருதல்லவா? குழந்தைக்கு அந்த இருட்டில் விளக்கு ஓர் ஆள் துணை போன்றது. அவ்வளவுதான். விஷயத்தைப் புரிந்துகொள்ளாமல் ஒன்றுக்கும் உபயோகமில்லாத இதைத் தடுத் தால், வந்தது விபரீதம். பயம், அது காரணமான சிக்கல், இதைத் தடுத்த உங்கள் அன்பில் சந்தேகம், வெறுப்பு இத்தனையும் குழந்தையின் மனத்தில் நேர்கின்றன.

இன்று குழந்தைகள் சந்தோஷ மாக இருக்கவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். நாளைக்கு அவர்கள் பெரியவர்களாகி நாம் தள்ளாதவர் களாகும்போது, அவர்களின் அன் பும் ஆதரவும் நமக்குக் கிடைக்க வேண்டாமா? எப்போது பார்த்தா லும் அவர்களை உருட்டி மிரட்டிக் கொண்டிருந்தால், நாளைக்கு அவர்க ளிடமிருந்து அன்பையும் ஆதரவை யும் நாம் எப்படி எதிர்பார்க்க முடி யும்?

உங்கள் குழந்தைகள் செய்யும் காரியத்தை நீங்கள் பாராட்டமாட் டீர்களா? அப்படிப் பாராட்டும் காரி யத்தை அந்நியர்களுக்கா விட்டு விடப் போகிறீர்கள்? பிறகு, உங் கள் குழந்தைக்கு ஊக்கம் எப்படி வரும்? உங்களுக்கு அதனிடம் அன்பு இருப்பதற்கு அடையாளம் என்ன? குழந்தைகளின் செயலில் குற்றமிருந்தால், அதனிடம் சொல் லுங்கள். ஆனால், வீணே திட்டா தீர்கள். குற்றத்தை எப்படித் திருத் திக் கொள்வது என்று குழந்தைக்கு அன்போடு எடுத்துக் காட்டுங்கள். நீங்கள் இப்படிச் செய்வதால், குழந் தைக்கும் லாபம்; உங்களுக்கும் லாபம். இரண்டு பேருக்கும் சந்தோ ஷம்; அன்பும் வளரும்.

குழந்தையிடம் உண்மையான அன்பு காட்டுங்கள். இதுதான் குழந்தையைச் சரியாக, கெடாமல் வளர்க்கும் வழி. நீங்கள் உண்மை யான அன்பு வைத்தால், குழந் தைக்கு அது தெரியும். பிறகு, நீங் கள் குழந்தைக்குக் கொடுக்கும் பொருளோ, குழந்தையிடம் நடந்து கொள்ளும் மாதிரியோ குழந்தையை ஏதும் செய்துவிடாது. உங்கள் அன்பு குழந்தைக்கு நிச் சயமாகிவிட்டால், பிறகு மனக் கோளாறில்லை. குழந்தை பாசாங்கு பண்ணி உங்கள் கவனத்தைக் கவர முடியாது; சாப்பிடாமல் அடம்பண்ணி, நீங்கள் தன்னைப் பாராட்டும்படி செய்ய அது எண் ணுது; நிறைய வேண்டுமென்று கேட்டுப் பிடிவாதம் பிடித்து, அது உங்கள் கவனத்தைக் கவராது.

தாய் தந்தையராகிய உங்கள் அன்பு முழுவதும் நிச்சயமாகக் குழந்தைக்கு இருக்கிறது என்ற நம் பிக்கை ஒன்றுதான் அதை நேராக வளர்ப்பதற்கு அவசியம். இந்த நம் பிக்கை குழந்தைக்கு உண்டாகும் படி நடந்துகொள்ளுங்கள். அப் போது, குழந்தை வளர்ப்பதில் ஒரு கஷ்டமும் இராது.

**கடைவீதியிலே ரத்தினம் கிடந்தது. புழுதி படிந்திருந்ததனல் பலரும் அதைக் கவனிக்காமலே போனார்கள். ரத்தினத்தின் மதிப்பை அறிந்தவன் அதை எடுத்துக்கொண்டான். —கபீர்.**

உண்ணும் உணவுக்கும் எண்ணும் மனத்துக்கும் என்ன சம்பந்தம் என்று நாம் நினைப்போம். சம்பந்தம் உண்டு என்கிறார்கள் வைத்திய அறிஞர்கள்.

# உல்லாசமாகச் சாப்பிடு

★

நீங்கள் சாப்பிடும்போது உங்கள் மனசு என்ன நிலையில் இருக்கிறது என்பதை எப்போதாவது கவனித்ததுண்டா? இல்லையென்றால், அடுத்த தடவை கவனியுங்கள். அப்படிக் கவனித்தால் சில விஷயங்கள் உங்களுக்குத் தெரியவரும். நீங்கள் அவசர அவசரமாகச் சாப்பிடுவீர்கள். குடும்ப விவகாரங்களைப் பற்றிச் சிந்திப்பீர்கள். சிக்கனமாக இருக்கவில்லை என்று மனைவியைக் கோபிப்பீர்கள். ஒழுங்காய் நடக்கவில்லையென்று வேலைக்காரனைச் சீறுவீர்கள். சரியாய்ப் படிக்கவில்லை என்று குழந்தைகளைத் திட்டிக் கண்டிப்பீர்கள்.

ஒரு தலைமுறைக்கு முந்திய நம் முன்னோர்கள் விஷயம் தெரிந்தவர்கள். மத சம்பந்தமான காரியங்களைப் போல, சாப்பாட்டுக்கு முக்கிய ஸ்தானம் கொடுத்திருந்தார்கள். அவர்கள் சந்தோஷமாகவும் சாவதானமாகவும் சாப்பிட்டார்கள். இப்போதுகூட அநேக இந்தியர்கள்—முஸ்லிமோ, ஹிந்துவோ வேறு யாராயிருந்தாலும் சரி – சாப்பிடும் நேரத்தை ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகக் கருதுகிறார்கள்; சாப்பிடும் இடத்திலுள்ள சந்தோஷத்தை எதுவும் கெடுக்கக் கூடாதென்று எண்ணுகிறார்கள். உண்ணும்போது முகமும் கையும் சுத்தமாய் இருக்கவேண்டும். சாப்பிடும் இடமும் சுத்தமாய் இருக்க வேண்டும்.

எல்லாரும் சாப்பிடுகையில் வீட்டு எஜமானி நேரில் இருந்து கவனித்துப் பரிமாறுகிறாள். எல்லாரும் சாப்பிட்ட பிறகே அவள் உண்கிறாள். இதெல்லாம் அர்த்தம் இல்லாமல் நடக்கவில்லை. அப்போதுதான் அவளால் சுத்தமாகவும் ரம்மியமாகவும் பரிமாற முடியும். நம்மவர்கள் சாப்பிடும்போது கடவுளைத் துதித்துவிட்டுச் சாப்பிட ஆரம்பிப்பார்கள். எச்சிலாகு முன்பே பசியுள்ள ஏழைகளுக்ென்று சிறிது அன்னத்தை ஒதுக்கி வைப்பார்கள். இவையெல்லாம் பக்குவமான மன நிலையை ஏற்படுத்திச் சாப்பாட்டில் சரியான ருசியையும் ஜீர்ண சக்தியையும் அதிகரிக்கச் செய்கின்றன.

துயரம் மிகுந்த தற்கால வாழ்க்கையில் துரதிருஷ்டவசமாக இந்த மாதிரி நல்ல பழக்கங்களுக்கு இடமில்லை. உணவு உண்ணுவது முக்கியமில்லாமல் போய்விட்டது. எவ்வளவு விரைவில் சாப்பிட முடியுமோ அவ்வளவு விரைவில் சாப்பிடவேண்டும் என்று ஆகிவிட்டது. நாம் சாப்பிடுவதற்காகவே உயிர் வாழவில்லை; என்றாலும் உயிர் வாழ்வதற்கென்று மட்டுமே சாப்பிடவும் கூடாது. தீர்க்காயுளும் திடகாத்திரமும் கொண்டு

மூலம்: நுட்ரீஷன் (ஆங்கிலம்: சர்க்கார் பிரசுரம்).

நன்றாக வாழ்ந்திருப்பதற்கு நல்ல முறையில் உண்ணவும் வேண்டும்.

ஜீர்ணமாவதற்குச் சாப்பிடும் போது அமைதி சூழ்ந்திருப்பது அவசியம். சந்தோஷமில்லாமல் சாப்பிடுவதை விட, சாப்பிடாமலே இருந்து விடலாம். ஏனென்றால், சந்தோஷமின்றிச் சாப்பிடுவது கெடுதலைத்தான் விளைவிக்கும். நகரங்களில் நம்முடைய விசித்திரமான வாழ்க்கையில், சாப்பிடும் நேரத்தில் தான், தந்தை தம் குழந்தைகளைப் பார்க்க நேரிடுகிறது. அந்த ஒரு சந்தர்ப்பத்தையும் அவர்கள்மீது புகார் செய்வதற்கும், அவர்களுக்குப் புத்தி சொல்வதற்குமே அவர் உபயோகப் படுத்திக் கொள்கிறார்.

சாப்பிட உட்கார்ந்ததிலிருந்தே பையனுக்கு வயிற்றில் புளியைக் கரைத்துக்கொண் டிருக்கும். சாதம், கறி முதலியவற்றைச் சாப்பிடுவதற்குள் தனக்கு எத்தனை வசவுகள் கிடைக்கப் போகின்றனவோ என்று அவன் கலங்கிக்கொண்டே இருப்பான். படிப்பில் கவனமில்லாமல் வீணுக அவன் ஊர் சுற்றுவதும் ஊதாரித்தனமா யிருப்பதும் பற்றித் தந்தை கண்டிப்பார். கடைசியில் இதனால் தந்தையும் மகனும் மனத் தொந்தரவையே அடைவார்கள்.

சிறுவனின் வயிற்றில் 'ப்ளூரோஸ் கோப்' என்ற கருவியை வைத்துப் பார்த்தால், அவனுடைய சிறுகுடல் முறுக்கேறிச் சுருட்டிக்கொண்டிருப்பதையும், ஏதோ ஓர் உப்புத்திரவம் குடலிலிருந்து பெருகுவதையும் காணலாம். பசியுடன் அந்தப் பையனின் தங்கை அடுத்தபடி தன் முறையாக இருக்கும் என்று கலங்கிக் கொண்டே சாதத்தைக் கொறித்துக்கொண் டிருப்பாள். சாப்பாட்டு நேரத்தில் இதெல்லாம் நடக்கும் என்பதில் பழக்கப்பட்டுப் போன தாயும் அடிவயிற்றில் சங்கடத்துடன் இருப்பாள்; தன் முறை வந்தால் எப்படிச் சமாளிப்பது, குடும்ப நிர்வாகத்தைப்பற்றி எப்படி விவரிப்பது என்றெல்லாம் திட்டமிட்டுக்கொண்டே அவள் பரிமாறுவாள்.

குடும்பத்திலுள்ளவர்களின் கதி கலக்கத்தினுல் வயிற்றில் குடல் நீர் பெருகிவிடும். ஜீர்ணசக்தி கெட்டுச் சாப்பிடுவதெல்லாம் கல்லைச் சாப்பிடுவதுபோல் ஆகிவிடும்.

அந்தத் தந்தையும் இதற்கு விலக்கல்ல. சமயசந்தர்ப்பம் தெரியாமல் நடக்கும் இந்த விவாதத்தினுல், அவரும் கஷ்டப்படுகிறார். சாப்பாடு அவருக்குத் திருப்தியாய் இருப்பதில்லை. நெஞ்சில் எரிச்சலும் வலியும் தோன்றி வயிற்றில் ஏதோ கட்டியோ வியாதியோ இருப்பதாக எண்ணும்படி யாகிறது. தமக்கு ஏதோ இருதயநோய் வந்துவிட்டதாகவும் அவர் மிரள்கிறார். அவர் வேலைக்குத் திரும்பிச் செல்லும் போது அதிருப்தியுடன் அமைதி குலைந்துபோகிறார். அவருடைய வேலைகள் யாவும் தடைப்படுகின்றன. உலக விஷயங்கள் யாவுமே கசந்துவிடுகின்றன.

சாப்பாட்டின் அவசியத்தை அறிந்திருந்தும், பல பெற்றோர்கள் இந்தச் சாப்பாட்டு நேரத்தை வேதனையாக்கிக் கொள்கிறார்கள்.

ஆகவே நாம் என்ன நிலையில் சாப்பிடுகிறோம் என்பதில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். வெறுப்பான விஷயங்களைச் சாப்பாட்டு நேரத்தில் ஒவ்வொருவரும் கூடுமான வரையில் ஒதுக்கிவிடப் பழகிக் கொள்ளவேண்டும். சாப்பிடும்போது எவ்வளவு உத்ஸாகம் கொள்ள முடியுமோ அவ்வளவு உத்ஸாகமும் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால், சத்துணவு ஆராய்ச்சிக்காரனின் வேலை பாதிக்குமேல் தீர்ந்தது போலத்தான்.

மனிதனைச் சிரஞ்சீவி யாக்கிவிடலாம் என்கிறார்கள் சில விஞ்ஞானிகள். அது முடியுமோ முடியாதோ; ஆனால், அவன் பல்லாண்டு வாழலாம்.

# நூறாண்டு வாழ வழி

★

கடந்த உலகப் போரில் ருஷ்ய விஞ்ஞானி ஒருவர் தமது சிகிச்சையினாலும் மருந்தினாலும் பல சைனிகர்களைப் பிழைப்பு மூட்டினாராம். அதிலிருந்து, சாவை விஞ்ஞானத்தினால் வெல்லலாம் என்று விஞ்ஞானிகள் முரசறைந்து வருகிறார்கள். ஆயினும் விஞ்ஞானம் இது வரைக்கும் மனித வாழ்க்கையை நீடிக்கச் செய்ததாக ஒரு ருஜூவும் கிடைத்த பாடில்லை. இயற்கை நமக்கு அளித்துள்ள திறமைகளைத் தகுந்தவாறு பயன்படுத்தக்கூட விஞ்ஞானம் நமக்குக் கற்பிக்கவில்லை என்பது என் கட்சி.

ஜெனிவாவில் பதினாறுவது நூற்றாண்டில் ஒரு மனிதனின் சராசரி ஆயுள் 21-வயது. 17-ஆம் நூற்றாண்டில் அது 26-வயதாகவும், 18-ஆம் நூற்றாண்டில் 34-ஆகவும் வளர்ந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மெஸசூஸெட்ஸ் என்னும் இடத்தில் 1879-இல் சராசரி ஆயுள் 35-வயது. 1890-இல் அது 43-ஆகவும், 1897-இல் 45-ஆகவும் பெருகியது. இங்கிலாந்திலும் வேல்ஸிலும் 1922-இல் சராசரி ஆயுள் 57-வயது; 1938-இல் அது 61-ஆக அதிகரித்தது. இயல்பான சில நோய்களை மருந்துகள் ஓரளவு தடுத்திருக்கின்றன என்பது உண்மை. ஆனால் விஞ்ஞான அறிவு ஆயுளை நீடிக்க உதவுவதாக எனக்குப் படவில்லை.

"இப்பொழுது குறைந்திருக்கும் சராசரி ஆயுளை விஞ்ஞானம் நிச்சயமாக வளர்க்குமா?" என்ற கேள்விக்கு, விஞ்ஞானிகள் இரண்டு வகையாகப் பதில் சொல்லுகிறார்கள். "மனிதன் கிட்டத்தட்ட நூறு வருஷந்தான் ஜீவித்திருக்க முடியும்" என்பது ஒரு சாராரின் பதில். இவர்கள் சரித்திரத்தை அத்தாட்சியாகக் கொண்டவர்கள். ஐந்தாவது நூற்றாண்டு வேதாந்திகளின் கொள்கைப்படி, 63-ஆம் வயதில் முதுமை தொடங்குகிறது; 65-ஆம் வயதில் முதுமை தொடங்குவதாக விஞ்ஞானம் கூறுகிறது. மற்றொரு சாராரோ, "வாழ்க்கைக்கு எல்லை என்பதே இல்லை. மனிதன் அமரனாக வாழ முடியும். கோழிக்குஞ்சின் இருதயத்தை வெகு நாள் வரையில் கிண்ணத்தில் பாதுகாத்து வைக்க முடிகிறது. இறந்த ஜீவ அணுக்களை விஞ்ஞான முறைப்படி புதுப்பித்து நீண்ட நாள் வாழச் செய்துவிட்டால், மனிதனுக்குச் சாவே கிடையாது. உயிர் நூலின்படி சாவு ஒரு துர்ச்சம்பவம்; அந்தத் துர்ச்சம்பவத்தைத் தடுத்தால் ஆயுள் வளரும்" என்று சொல்லுகிறார்கள்.

ஆனால் உண்மையில் விஞ்ஞானம்

காப்பிரைட்: விசால பாரத் (ஹிந்தி- செப்டம்பர் '47),
120/2, அப்பர் ஸர்க்குலர் ரோட், கல்கத்தா.

இந்தத் துறையில் நமக்கு என்ன உதவி புரிந்திருக்கிறது? இன்று வரைக்கும் விஞ்ஞானிகளின் பேச்செல்லாம் வெறும் வாய்ப்பந்தலாகவே இருந்திருக்கிறது. உலகத்திலே இதுவரைக்கும் நீண்ட ஆயுள் பெற்றிருந்தவர்களைக் கணக்கிட்டு, அவர்களின் வாழ்க்கையைத் துருவி ஆராய்ந்தால், எளிய வாழ்வும், மிதமான உணவும், கட்டுப்பாடான உள்ளமும் ஆயுளை நீடிக்க உதவுகின்றன என்று தெரிகிறது.

தாமஸ் பார் என்ற உழவர் இங்கிலாந்தில் 152-வயது வாழ்ந்தவர்; எளிய உணவும் கட்டுப்பாடான வாழ்க்கையும் கொண்டவர்.

கைலன் என்ற யூனானி வைத்தியர் 140-வயது வரைக்கும் ஜீவித்திருந்தவர். வெறியூட்டும் பானங்களைத் துறந்திருந்ததே அவருடைய நீண்ட ஆயுளுக்குக் காரணம்.

யார்க்ஷயர் வாசியான ஜார்ஜ் கிரிட்டன்: 125-வயது. சாவுக்குப் பத்து வருஷம் முன்னுல்வரையில் அவர் மிதமிஞ்சி மதுபானம் செய்தவர்.

பிலிப் லாட்டியர்: 105-வயது வாழ்ந்தவர்; தண்ணீரைத் தவிர வேறு எதும் குடித்ததில்லை.

முகம்மத் கோக்கர்: 120-வயது; தம் வாழ்வில் தேநீர் அருந்தியதில்லை.

என். பிராஸ்ட் லிங்கன்ஷயர்: 111-வயது; பாலும் தேநீருமே அருந்தி வாழ்ந்தவர்.

கிறிஸ்தியன் டேகன்பர்க்: 146-வயது; திறந்த வெளியில் வாசம் செய்வதில் நம்பிக்கை கொண்டவர்.

ஸெயிண்ட் மங்கோர்: 185-வயது; வாழ்நாள் முழுவதும் வெறும் தரையிலேயே படுத்துத் தூங்கினுர்.

விதவை மாக்பர்ஸன்: 160-வயது; கூரைக்குடிசையில் வாசம் செய்தவள்.

நாக்பூர் வாசியான வித்தி உஸ்தாத்: 158-வயது; கோதுமை மாவு, அரிசி, ஆட்டுமாமிசம் புசித்து வந்தவர்.

இந்த உதாரணங்களை ஆராய்ந்து பார்த்தால், ஆயுளை வளர்க்க விஞ்ஞானம் வழி காட்டுவதில்லை என்றும், எளிய வாழ்க்கையைக் கைக்கொள்வதே சிறந்த வழியென்றும் அறிகிறோம்.

## 'ஜயந்தி' என்றுல் என்ன?

மகான்களின் பிறப்பு விழாவையும் கண்ணன் பிறந்த நாளையும் நாம் ஜயந்தி என்கிறோம். உண்மையில் ஜயந்தி என்பது ஒரு தனிப்பட்ட யோகம். ஆவணி மாதத்துக் கிருஷ்ண பட்சத்து அஷ்டமி நள்ளிரவில் ஒரு கலை மேலும் கீழுமாக ரோகிணியுடன் கூடியிருந்தால் இந்த யோகம் ஏற்படுகிறது. இது வெற்றி தருவதாகையால் ஜயந்தி என்று பெயர் பெற்றது.

இந்த ஜயந்தி யோகத்தில் கண்ணன் பிறந்ததனுல் அவனது பிறப்பு விழாவையே ஜயந்தி என்று கூறலாயினர். நாளடைவில் எந்த மகாபுருஷனின் பிறந்த நாளையும் ஜயந்தி என்று குறிப்பிடுவது வழக்கிலே வந்துவிட்டது.

—க்ஷிதிமோகன ஸேன் (விசால பாரத்)

ஆனந்த பவனத்தின் ரோஜா மலர் இன்று புது டெல்லியில் நலுங்காமல் கசங்காமல் மணம் வீசுகிறது! அந்த விந்தை மலர்...

# அல்லும் பகலும் உழைக்கும் நேரு

கே. அஹமத் அப்பாஸ்

குளிர் காலத்து இரவு; தெரு விளக்குகள் மங்கலாக இமைக்கின்றன. தலைநகரம் முழுவதும் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கிறது. மந்திரிகளின் மாளிகைகளும் காரியதரிசிகளின் பங்களாக்களும் இருளில் அமைதியாக இருக்கின்றன. மற்ற இடங்களிலும் யாவரும் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். வைசிராய் மாளிகையின் பதினாயிரம் ஜன்னல்களில் ஒன்றிலாவது விளக்கு வெளிச்சம் இல்லை.

அதோ யார்க் ரோடின் மூலையில் இரண்டு மாடியுள்ள வீட்டின் மெத்தையில் மாத்திரம் ஒரு விளக்கு எரிகிறது. இந்த அகாலத்தில் குளிர் நடுக்கும் இரவில் யாரோ இன்னும் வேலை செய்துகொண் டிருக்கிறார்! இதுதான் பிரதம மந்திரியின் வாசஸ்தலம்; வேலை செய்கிறவர் இந்தியாவின் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேருவே.

இது ஒன்றும் விசேஷமான செய்தி அல்ல. அவர் முதல் மந்திரி வேலையை ஏற்றுக் கொண்டது முதல் அர்த்த ஜாமத்தையும் கடந்து வேலை செய்வது அவருக்கு வழக்கமாகி விட்டது. ஒன்றரை மணிக்கு முன்பு அவர் படுக்கப் போவதில்லை; டெல்லியில் கலகம் மும்முரமாக இருந்த காலத்திலும் காஷ்மீர்ப் போராட்டத்தின் கடுமையான சந்தர்ப்பங்களிலும் விடியற்காலை வரையில் கூட



நேருவுடன் நெருங்கி விவாதிக்கும்போது, அவர் அக்கினி ஜ்வாலையாய் விளங்குகிறார்.
—இந்தியன் பார்லிமெண்ட்.

வேலையைக் கவனித்துக் கொண்டேயிருப்பார். "பிரதம மந்திரி எப்போதும் பதினொரு மணிக்கு வேலை தொடங்குவார்" என்று அவருடைய காரியதரிசிகளில் ஒருவர் சொன்னார்; "ஆம்; இரவு பதினொரு மணிக்குத்தான்" என்றார் அவர். இரண்டுமூன்று மணிநேரம் கட்டுக்களையெல்லாம் பார்ப்பார்; உத்தரவுகளையும் சில குறிப்புகளையும் எழுதுவார்; குறிப்புகளைச் சொல்லிக்கொண்டு வருவார்; கடிதங்களுக்குக் காரியதரிசி பதில் எழுதிக்கொள்ளும்படி சொல்லி வருவார். பிறகு முக்கியமான பத்திரிகைகளிலிருந்து எடுத்த செய்திகளைப் படித்துவிட்டுத் தூங்கப் போவார்.

காப்பிரைட் : இந்தியா (ஆங்கிலம்: 11—1—'48),
6, துல்லோச் ரோட், கொலாபா, பம்பாய்.

ஒரு மணி முதல் மூன்று மணி வரையில் அவர் படுக்கச் செல்லும் நேரம். உடம்பைக் கொஞ்சம் அயர விட்டு ஏழுமணி வாக்கில் எழுந்து விடுவார். காலையில் அவர் டீ சாப்பிடுவதில்லை. படுக்கையிலிருந்து எழுந்தாரோ இல்லையோ உடனே காலைப் பத்திரிகைகளை ஒரு தடவை பார்ப்பார். அவர் வழக்கமாகச் செய்துவரும் யோகாசனங்களை இப்போதெல்லாம் சிறிது நேரமே செய்ய முடிகிறது. அவசர அவசரமாகக் குளித்துவிட்டு உண வுண்ண வருவார்.

அதற்குள் கூடத்தில் அவரைப் பார்ப்பதற்குப் பலர் வந்து நிரம்பி விடுவார்கள்; தாழ்வாரத்திலும் புல் வெளியிலும் கூடியிருப்பார்கள். இருபது முதல் நூறு பேர்வரையில் இப்படிக் காத்திருப்பார்கள். நான் போன அன்று 65 பேருக்குமேல் இருந்தார்கள். எல்லாரும் அவரைப் பார்க்க வந்தவர்களே. அவர்களுக்குள் சம்ஸ்தானங்களின் பிரதம மந்திரிகள் இருப்பார்கள்; அரசாங்க அதிகாரிகளில் உயர்ந்தவரும் தாழ்ந்தவரும் இருப்பார்கள்; காங்கிரஸ் தலைவர்களில் பெரியவர்களும் சிறியவர்களும் இருப்பார்கள்; காங்கிரஸ் ஊழியர், அகதிகள், பத்திரிகைக்காரர், போட்டோக்காரர், முறையிட வந்தவர், விண்ணப்பம் கொண்டுவந்தவர், கண்டனக்காரர், வேலைக்கு மனுப் போடுபவர், யோசனை கேட்க வந்தவர், பேட்டி காண வந்தவர், வெறுந்தரிசனத்துக்கு வந்தவர் — இப்படிப் பல விதம்.

ஒரு மனிதனைப் பார்த்தேன். கறுத்த உடம்பு; வாடிய முகம்; அவன் ஏழையென்பதை அவன் உடம்பு சொல்லியது. நைஜாம் சம்ஸ்தானத்திலிருந்து அகதியாக வந்த ஹரிஜனன். கையில் ஒரு காசும் இல்லாமல் டெல்லிக்கு வந்தவன். அகதிகளின் பாளையங்களுக்குப் போனான். அங்கே போனால் இங்கே தள்ளினார்கள்; இங்கே போனால் அங்கே தள்ளினார்கள். இப்படியாக அவஸ்தைப்பட்டுக் குளிர் நடுக்கும் ராத்திரியில் படுக்க இடமின்றித் திண்டாடினான். கடைசியில் பிரதம மந்திரியின் இருப்பிடத்துக்கு வந்துவிடத் தீர்மானித்தான். இங்கே நிச்சயம் உதவி கிடைக்குமென்று அவன் நம்பினான்.

சாப்பிட்டுச் சில நிமிஷம் இளைப்பாறுவதற்குள், கூட்டத்திலிருந்து அஞ்சாறு பேர்களைத்தான் அவர் கண்டு பேச முடிகிறது. முன் ஏற்பாடு இல்லாமலே வந்து கூடியிருப்பவர்களில் சிலரை அவசியத்தையும் முக்கியத்தையும் கவனித்துப் பொறுக்கி யெடுத்து உள்ளே அனுப்புவதற்குள், பிரதம மந்திரியின் காரியதரிசிகள் திண்டாடிப் போக வேண்டியிருக்கிறது. பதவியில் இருப்பவர்கள், பணக்காரர்கள் என்ற சலுகைக்கு இங்கே இடம் இல்லை. உதாரணம் பாருங்கள்: ஒரு சம்ஸ்தானத்து வர்த்தகக் கமிஷனர், தாடிவாலாவான தேசிய முஸ்லிம் ஒருவருடைய தலைமையில் வந்த காங்கிரஸ் தொண்டர் கோஷ்டி, ஐக்கிய மாகாணச் சட்டசபை அங்கத்தினர் ஒருவர், காஷ்மீரத்திலிருந்து திரும்பி வந்த பத்திரிகைக்காரர் ஒருவர், முன்னாலே சொன்ன அகதி இவர்களோடு ஜவாஹர் சில சில நிமிஷங்கள் பேசினார். நான் நேரில் பார்த்தேன். அவருடைய விருந்தினர்களாக வந்திருந்த காஷ்மீர் தலைவர் ஷேக் அப்துல்லா, இந்தோனேசியாவிலிருந்து வந்த டாக்டர் ஷாரியர் இவர்களுடன் சிறிது பேசினார். இவர்களுக்கு அப்போதுதான் அவருடன் பேச

நேரம் கிடைத்தது போல் தோன்றுகிறது. பிரதம மந்திரியின் நெருங்கிய உறவினர் ஒருவர் அவரைப் பார்த்துப் பேச ஏற்பாடு செய்ய வேண்டுமென்று காரிய தரிசியை வேண்டிக் கொண்டார். காரியதரிசி, "என்னுல் ஆனவரைக்கும் பார்க்கிறேன். உங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் நான் விஷயத்தைத் தெரிவிக்க அநுகூலமாக இருக்கும்" என்ருர். உறவினர், "நான் அவர் வீட்டில் தான் இருக்கிறேன்!" என்று பதிலளித்தாராம். நான்கு நாட்கள் வரையில் பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேச அந்த உறவினருக்கு நேரம் கிடைக்கவில்லையாம்!

பிரதம மந்திரியின் காரியாலய வேலைநேரம் காலையில் 9-30-முதல் 1-30-மணி வரையில். அப்பால் ஒரு மணி உணவுக்காக இடைவேளை. அப்போது வீட்டுக்கு ஓட வேண்டும். பல சமயம் அப்படிப் போவதே இல்லை. ஏனென்ருல், அப்போதும் முக்கியமான யாராவது வந்துவிடுவார்கள். வீட்டுக்குப் போன நாட்களில் உணவுக்குப் பின் காரியாலயத்துக்கு வந்தால், பேட்டியும் மந்திரி சபை ஆலோசனையும் கமிட்டிக் கூட்டமும் கையெழுத்துப் போடுவதும் கட்டுக்களைப் பரிசீலனை செய்வதுமாக நேரம் போகும். ஆபீஸ் கச்சிதமாக இருக்கும். ஒரு பெரிய சாய்வு மேஜை. அதன் மேல் கட்டுக்களோ காகிதங்களோ இரா. மேஜைக்கருகில் காஷ்மீரின் படம் போன்ற தேசப் படங்கள் பல இருக்கும். ஒரு தெர்மாஸ் பிளாஸ்கில் தண்ணீர், பக்கத்தில் சின்னப் பெட்டி, கையிலே கொம்பு விளிம்பையுடைய மூக்குக் கண்ணடி இவை இருக்கும்.

மாலை ஏழு மணிக்குக் குறைந்து ஆபீஸை விட்டு அவர் நகரமுடியாது; ஆனுல், அந்த ஏழு மணியோடுதான் வேலை முடியுமா? அதுவும் இல்லை. மிகவும் முக்கியமான மனிதர்கள் சாப்பாட்டு நேரத்திலோ பிறகோ வந்து சேர்வார்கள். பதினெரு மணிக்குக் குறைந்து தம் அறைக்கு அவர் போக முடியாது. அங்கே போய் விட்டால் இரண்டு மணி நேரமோ மூன்று மணி நேரமோ சில வேளைகளில் நாலு மணி நேரங் கூடத்தான் அமைதியாக இடையூறின்றி வேலை நடக்கும். அவருக்கு ஆறு காரியதரிசிகள் இருக்கிருர்கள். எல்லோருக்கும் வேலை நெட்டிவாங்கும். ஆயிரம் கிடைத்தாலும் அந்த வேலையை விட்டுவிட அவர்களுக்குப் பிரியம் இல்லை.

இந்தியாவின் சங்கடமான காலத்தில் இந்திய ஆட்சியின் தலைமையை வகிக்கிறவர் நேரு; வெளிநாட்டு மந்திரியும், விஞ்ஞான ஆராய்ச்சித்துறை மந்திரியும் அவரே. ஆகவே அரசியல் நிர்ணய சபைக் கூட்டமானுலும் சரி, இந்தியப் பார்லிமெண்டின் கூட்டமானுலும் சரி, அவருக்கு மேலும் அதிக வேலை வந்துவிடும். வாழ்வு முழுதும் புரட்சி செய்தவர், லட்சியவாதி, பல கனவுகளைக் காண்பவர், அறிஞர், எழுத்தாளர், இனிய கவிதையிலும் நல்ல புத்தகங்களிலும் பனித்திரை போர்த்த மலைகளிலும் உள்ளத்தைப் பறி கொடுப்பவர் - இந்த மனிதர் எப்படித் தான் இந்த நிர்வாக பாரத்தைப் பொறுத்துச் சமாளிக்கிருரோ? விஷமிகள் சிலர் கிசுகிசுவென்று சில வம்புகளைக் கிளப்பிவிட்டிருக்கிருர்கள். 'நேரு கவைக்குதவாத லட்சியவாதி. நேரு பலஹீனமான

வர். இந்த மாதிரியான கடுமையான காலத்துக்கு இவ்வளவு மிருதுவான சுபாவமுள்ளவர் பிரயோசனம் இல்லை. நேரு விலக வேண்டும்' என்றெல்லாம் அவர்கள் புரளி கிளப்பியிருக்கிறார்கள். அப்படியானால் ஒரு நல்ல மனிதரைத் தகாத இடத்தில் நாம் வைத்திருக்கிறோமா? கவிஞரொருவரைச் சிங்காதனத்தில் அமர்த்தி யிருக்கிறோமா? எதற்கும் மசியாத ஒரு வல்லாள கண்டன் இருக்க வேண்டிய இடத்தில் கற்பனையுலகக்காரரை வைத்துவிட்டோமா?

இதே கேள்வியை நான் அநுபவம் மிகுந்த செக்ரடேரியட் உத்தியோகஸ்தர் ஒருவரிடம் கேட்டேன். முதல் மந்திரி வேலை செய்யும் போது பக்கத்திலே இருந்து கவனிக்கும் நிலையிலிருப்பவர் அவர். "இந்த மூன்று மாதங்களில் நேரு செய்துள்ள காரியத்தை இந்தியாவிலுள்ள அரசியல்வாதிகள் அத்தனை பேரும் சேர்ந்தாலும் செய்ய முடியாது" என்று அவர் சொன்னார். கவிதைக் காதல் இருக்கட்டும்; தம் வாழ்க்கையில் பெரும் பகுதியைச் சிறையிலே புத்தகம் எழுதிப் போக்கினவராக இருக்கட்டும்; அவை எப்படியானாலும், நேரு முதல்தரமான நிர்வாக ஆற்றலுடையவர் என்பது அந்த உத்தியோகஸ்தரின் கருத்து. "சென்ற மூன்று மாதங்களில் நேர்ந்த மிகவும் சிக்கலான நிர்வாகப் பிரச்னை எது?" என்று அவர் கேட்டார். "பஞ்சாபில் ஜாதித் துவேஷத்தால் நடந்த படுகொலைகளும் இரண்டு பக்கங்களிலும் ஏற்பட்ட ஜனத்தொகை மாற்றமும் என்று சொல்லலாம்" என்று நான் சொன்னேன். "நீங்கள் சொன்னது சரி. வேறு யாராக இருந்தாலும், அந்தப் பிரச்னை அவரைத் திக்குமுக்காடச் செய்திருக்கும். மிகவும் அநுபவசாலியாக உள்ள நிர்வாகஸ்தர்களுக்குக்கூட அது பெரிய பூதமாகவே இருந்தது. ஒன்றின்மேல் ஒன்றாக நிகழ்ந்த பயங்கர சம்பவங்களைக் கண்டு அவர்கள் அருண்டுபோய் விட்டார்கள். வேறு யாராக இருந்தாலும் அவருக்குப் பொறுமை போயிருக்கும்; உணர்ச்சி மீறிப் போயிருக்கும். நேருவோ அப்படியாகவில்லை. பல விதமான மனிதர்களை ஒன்றுபடுத்தி எப்படியோ காரியத்தைச் சாதித்துவிட்டார். பஞ்சாப் விஷயத்தில் அவர் செய்த வேலை பெருமைக்குரிய நிர்வாக வெற்றி என்பதே என் அபிப்பிராயம்" என்று அந்த உத்தியோகஸ்தர் சொன்னார்.

உண்மையில் வெற்றி பெறக்கூடிய நிர்வாகிக்கு மூன்று காரியங்களைச் செய்யும் திறமை வேண்டும். ஒன்று, நிலைமையை நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும்; அதை எப்படி நன்றாகச் சமாளிக்கலாமென்பதைத் தீர்மானிக்க வேண்டும். பிறகு காரியத்தை நிறைவேற்றும் ஆற்றல் வேண்டும்; அதாவது விஷயத்தை விரைவில் உணர்ந்து விரைவாக முடிவு பண்ணித் தாமதமின்றி அந்த முடிவுகளைக் காரியத்தில் நிறைவேற்றவேண்டும். இந்தத் துறைகளில் நேரு தலைசிறந்து நிற்கிறார் - இந்த விஷயங்களை அந்த உத்தியோகஸ்தரே என்னிடம் சொன்னார். நேரு எந்தப் 'பேப்ப'ரையும் தங்க வைப்பதில்லை. அவர் பார்வையிலுள்ள இலாகாக்களிலிருந்து எந்த விஷயம் வந்தாலும் உடனே அதைக் கவனித்துத் தெளிவான உத்தரவு கொடுத்துவிடுகிறார். எந்தக் கட்டும் அவரிடம் காத்திருப்பதில்லை. 'குறிப்பிட்ட கட்டு மந்திரியிடம்

முடிவை எதிர் நோக்கிக் காத்திருக்கிறது' என்ற பழைய பல்லவியை அவருடைய இலாகாக்களில் கேட்கவே முடியாது.

நேரு வெறும் ஆற்றல் மிக்க நிர்வாகி மாத்திரந்தானு? இல்லை இல்லை; அதற்கும் மேலே போனவர். ஜீவனில்லாதவை அரசாங்க வேலைகள் என்று சொல்வது வழக்கம். அங்கே பொறுப்பையும் உணர்ச்சியையும் அன்பையும் உதயமாகும்படி செய்திருக்கிருர் நேரு. கோடிக் கணக்கான மக்கள் அவரை விரும்புவதற்குக் காரணமே இந்த இயல்புகள் அல்லவா? இப்போதெல்லாம் கவிதையில் ஈடுபட அவருக்கு நேரமில்லை; குன்றத்தின் மீதே குலாவி உலாவப் போது இல்லை; இந்த நாட்டின் பழைய சரித்திரத்திலே ஆழ்வதற்கு ஒய்வு இல்லை; புதிதாக நூல் எழுத அவகாசமே கிடையாது. அவருடைய முகத்தில் வேதனையும் கவலையும் படர்ந்துள்ளன; நாட்டினர் அத்தனை பேருடைய துயரக்குறியும் அவை. ஆயினும் அவருடைய உள்ளத்தே கலைஞனுடைய ஜீவன் இன்னும் இருக்கிறது. பாரமுலாவில் நடைபெற்ற படுகொலையினிடையே, உணர்ச்சியற்ற அழிவு வேலைக்கிடையே கூட, அவர் மலர்ச்சோலை கண்டு உவகை பூத்தார்; ஒரு கொத்துப் பொன்னிற மலரைப் பறித்துக் கொண்டு டெல்லிக்கு வந்து காந்தியடிகளின் அடிமலரில் வைத்து, "பாரமுலாவில் நான் நயமான அழகிய பொருளாகக் கண்ட பொருள் ஒன்று; அது இதுவே" என்ருர். முன்பெல்லாம் கையெழுத்து வாங்க வருபவர்களுடைய புத்தகங்களில் 'அபாயத்துக் கிடையே வாழ்' என்று எழுதுவது அவருக்குப் பிரியம். அவர் தம் வாழ்க்கையில் அப்படியே இன்னும் நடத்திக் காட்டுகிருர்; கலகம் சூழ்ந்த டெல்லிப் பிரதேசத்தில் துணையின்றித் துணிவோடு சென்று வந்தாரே, அப்போது ஒரு விஷமியின் கையிலிருந்த கத்தியை அவர் பறித்துக் கொண்டார்; கலகக்காரர்களிடமிருந்து இரண்டு முஸ்லிம் மாதரைக் காப்பாற்றினர். அரசியல்வாதி என்ற முறையில் அப்படிச் செய்யவில்லை; அவரிடம் இயற்கையிலுள்ள கருணைதான் அப்படிச் செய்தது. இன்னும் அவருக்குக் கூட்டமென்ருல் பிரியந்தான்; ஜனக்கூட்டத்துக் கிடையே இருக்கும்போது அவருக்கு உத்சாகம் ஏற்படுகிறது.

கல்கத்தாவில் பத்து லட்சம் பேர் கூடிய கூட்டத்தில் அவர் பேச ஏற்பாடாயிற்று. சந்தடியை அடக்க முடியாமற் போனபடியால் அவர் பேசவில்லை. அவருடைய காரியதரிசி ஒருவர் கூட்டத்தில் அகப்பட்டு நசுக்குண்டு தத்தளித்துப் போனுர். பத்திரிகைக்காரர்களின் கூட்டத்தில் நேருவை ஒரு நிருபர், "கூட்டத்தில் நீங்கள் இடிபட்டுக் கஷ்டப்பட்டீர்களா?" என்று கேட்டார். உடனே அவர் தம் சட்டையில் செருகியிருந்த ரோஜாப் பூவைக் காட்டி, "இன்று காலையில் தான் அலாகாபாத் ஆனந்த பவனத்தில் இதைப் பறித்து வைத்துக் கொண்டேன். அது அப்படியே கசங்காமல் இருக்கிறதே!" என்று பதில் அளித்தார்.

ரோஜாப்பூவைப் பற்றி அவர் சொன்னது அவர் விஷயத்திலும் பொருத்தமானது. அவருங்கூட ஆனந்த பவனத்து ரோஜாமலர் தானே? அந்த மலர் புது டெல்லியின் நிர்வாக மோதலுக்கிடையே நசுங்காமல் கசங்காமல் மலர்ச்சியும் மணமும் உடையதாகவே விளங்குகிறது.

**லஞ்சம் என்பது வேறே; இனம் என்பது வேறே. இரண்டையும் ஒன்றென்று மயங்குவது தவறு. ரசமான சில உதாரணங்களைப் பாருங்கள்.**

# லஞ்சமும் இனமும்

**ஸ்ரீவத்ஸன்**

கூலிக்காரனுக்கு நான் காலணா அதிகமாகக் கொடுத்துவிட்டேன். இது என் நண்பனுக்குப் பொறுக்கவில்லை. "இப்போ என்னடா அவன் கேட்டானா? இப்படித்தான் எல்லாத்தையும் நாமே சொல்லிக் கொடுத்துவிடுகிறோம். அப்புறம் லஞ்சம் லஞ்சம்னு அடிச்சுண்டா என்ன புண்ணியம்?" என்று அவன் கத்தினான்.

எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. "லஞ்சம்னா என்னன்னு தெரியுமாடா உனக்கு?" என்றேன்.

அவனுக்குக் கோபம் தலைக்கு மேலே பொத்துக்கொண்டு வந்துவிட்டது. "ஆமாண்டா! உன் ஒருவனுக்குத்தான் எல்லாம் தெரியும்! கையிலே காசு இருக்குன்னா இப்படியா காலியா அடிக்கணும்?" என்று தொடங்கி, லஞ்சத்தையும் சட்டங்களையும் பற்றி ஒரு பெரிய பிரசங்கம் செய்துவிட்டான். மேலும் இதைப்பற்றி எழுத எனக்கு ஒரு சந்தர்ப்பமும் கிடைத்தது லாபந்தான்.

நான் அநேக இடங்கள் பார்த்திருக்கிறேன். பிரயாணம் செய்திருக்கிறேன். லஞ்சமும் 'டிப்பிங்'கும் இல்லாத இடமே எனக்குத் தெரியவில்லை. 'டிப்பிங்' என்பது ஆங்கில வார்த்தை; தமிழில் அதை இனம் என்பார்கள்.

லஞ்சம் என்பது ஒருவிதச் சூறை. அது சட்ட விரோதம் என்று தெரிந்தும், வேறு வழியில்லாமல் நிர்ப்பந்தமாகவே ஒருவருக்குக் கொடுக்கப்படுவது. சட்டப்படி அதனால் கொடுப்பவனுக்கும் கேடு விளையலாம்; வாங்குபவனுக்கும் கேடு விளையலாம். லஞ்சத்தை ஒழிப்பதற்குக் கடுமையான நடவடிக்கைகளை அரசாங்கத்தார் எடுத்துக்கொள்ள வேண்டும். இன்றைய உலகத்தில் லஞ்சத்துக்கும் இனமுக்கும் உள்ள வேற்றுமை நமக்குச் சரியாக விளங்குவதில்லை.

'இனம் என்பது கண்டிக்கத் தக்கதல்ல. அதற்கு எவ்விதச் சட்டங்களும் வேண்டாம். ஏதாவது ஒரு வேலையைப் பொறுப்பாக நமக்கு அநுகூலமாகும்படி எவராவது நடத்திக் கொடுத்தால் நாம் திருப்தியடைகிறோம்; சந்தோஷமடைகிறோம். இந்த அநுகூலம் செய்தவரிடம் நம்மை அறியாமல் நமக்கு நன்றி உண்டாகிறது. அதற்கு அடையாளமாக நாம் பல்லைக் காண்பிக்கிறோம். அவரும் தமது பல்லை நமக்குத் திருப்பிக் காட்டுகிறார். அவருக்குக் கூலி அரை ரூபாய் என்று பேசி இருந்தோமானால், இன்னும் இரண்டு அணாவைச் சேர்த்துத் தாராளமாக அவருக்குக் கொடுக்கிறோம். இது நமது சந்தோஷம்,

காப்பிரைட்: விச்வ கர்நாடக வீக்லி (கன்னடம், 16—11—'47),
85, பளேபேட் ஸ்கொயர், பெங்களூர் ஸிட்டி.

திருப்தி, நன்றி எல்லாவற்றையும் காட்டும் அடையாளம். நாமும் கஷ்டத்துடன் கொடுப்பதில்லை; வாங்குபவரும் நம்மை மோசம் செய்வதற்காகவோ மறைவாய் ஒரு காரியத்தைச் செய்வதற்காகவோ வாங்குவதில்லை. நமக்கும் தெரியும்; அவருக்கும் தெரியும்; பார்ப்பவருக்கும் தெரியும். விஷயம் பகிரங்கமானது. இந்த மாதிரி 'டிப்பிங்' என்பது எங்கேயும் சர்வ சகஜம். இது கச்சேரிகளில் மகா சாதாரணம். மேல் அதிகாரியைச் சீக்கிரம் பார்க்க வேண்டுமானால், நம்முடைய கடிதமோ மனுவோ சீக்கிரம் கவனிக்கப்பட வேண்டுமானால், காத்திருக்கும் நம்மைச் சீக்கிரமாக அனுப்பும்படி செய்யும் ஆளுக்கு இரண்டு அணுவோ நான்கு அணுவோ கொடுக்கிறோம். வேலையை அவன் சீக்கிரம் முடித்து வைத்ததற்காக நமது நன்றியின் அறிகுறியே ஒழிய, இந்த இனம் பணத்தால் வேறு கெடுதல் ஒன்றுமில்லை. கால தேச வர்த்தமானத்தை ஒட்டிப் பழக்கத்திலிருக்கும் நாணயம், பண்டம், துணி, தின்பண்டம் இந்த ஏதாவது ஒன்று சமயத்துக்குத் தக்கபடி கைமாறுகிறது.

முக்கியமாக இனம் என்பது சிற்றுண்டிச் சாலைகளிலும் பிரயாணிகள் தங்கும் இடங்களிலும் அதிகம். அந்த இடங்களில் எந்தத் தேசத்தாரும் ஜாதியினரும் வந்து தங்குகிறார்கள். தங்குவோரின் வழக்கத்துக்கு இணங்க, மணிப்பிரகாரம் எல்லா வசதிகளும் சித்தமாக வேண்டும். க்ஷவரம் செய்துகொள்ள வெந்நீரும், நல்ல சிற்றுண்டிகளும் கிடைக்கும் இடங்களைத்தான் எல்லோரும் விரும்புகிறார்கள். இவற்றைச் சித்தம் செய்து தரத்தக்க ஆள் வசதி இருக்குமிடங்களில் ஏகக் கூட்டம்; நல்ல வருமானம். இப்படித் தங்குமிடங்களில் நம்மைக் கவனித்துக் கொள்ளுகிறவர்களுக்கு நம் நன்றியைக் காட்டிக்கொள்ளாமல் இருந்துவிடுவோமா? இப்படி இனம் கொடுப்பதில் எவ்வளவோ விதங்கள் உண்டு.

ஜப்பானில் பெரிய பெரிய சிற்றுண்டிச்சாலைகள் இருக்கின்றன. உள்ளுக்குள் அலங்காரமும் விளக்குகளும் அற்புதமாக இருக்கும். கவனிப்பும் வெகு விமரிசை. சிற்றுண்டி அருந்த மட்டுமே வருவோரும் உண்டு. தங்குவோரும் உண்டு. தங்கிவிட்டுப் போகிறவர், கடைசியில் தங்களுடைய வாடகைக் கணக்கைத் தீர்ப்பார்கள். அப்போது தங்கள் வாடகைப் பணத்தை ஒரு பொட்டலமாகக் கட்டுவார்கள். தங்களைக் கவனித்துக் கொண்ட சிப்பந்திகளுக் கென்று பிரத்தியேகமாக ஓர் இனம் பணப் பொட்டலமும் கட்டுவார்கள். இந்த இரண்டு பொட்டலங்களையும் முதலாளியிடம் கொடுப்பார்கள். சிப்பந்திகளுக்குக் கொடுத்த பணம் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு ஓட்டலின் மதிப்பு உயரும். இப்படிப்பட்ட ஓட்டலில் தான் முதலாளிக்கு வியாபாரம் சீராக நடந்துவருகிறது. அங்கே சிப்பந்திகள் எல்லோரும் சரிவர வேலை செய்கிறார்கள் என்பது கருத்து. சிப்பந்திகளுக்கு வரும் இனம் குறைவதைக் கண்டால், உடனே முதலாளி தக்க முயற்சி எடுத்துக்கொண்டு வியாபாரத்தைச் சீர்திருத்திவிடலாம் அல்லவா? வந்து தங்கியவர் ஒன்றுமே கொடுக்காமலும் போகலாம். கொடுக்க வேண்டுமென்ற விதி ஒன்றுமில்லை. தங்கியவர் அப்படிக் கொடுக்காமல் போனால், முதலாளிக்குக் கொஞ்சம் கலவரந்தான்.

பர்மாவில் ஒரு வழக்கம் உண்டு. திருப்தியாக வேலைசெய்த வேலையாளுக்கு முழுசாக மூன்று சிகரெட்டுகள் கொடுப்பார்கள். அதுதான் உயர்ந்த பரிசு. அதைப் பெற்றவர்களுக்குத் தனிக் கௌரவம். அந்தச் சிப்பந்திகள் எந்த இடத்துக்கு மாறினாலும் அவர்களுக்குத் தனி மதிப்பு, பெருமை, சம்மானம் எல்லாம் கிடைக்கும். இந்தப் பரிசை அளிப்பவருக்கும் அபரிமிதமான சந்தோஷம்.

மாஸ்கோவிலும் இந்தப் பரிசு உண்டு. அது ஒரு விதம். தங்குவோர் க்ஷவரம் செய்துகொள்ளும் ரேஸர் பிளேடுகளையே மாஸ்கோ சிப்பந்திகள் மிக உயர்ந்த பரிசாக மதித்துப் பெற்றுக்கொள்கிறார்கள்.

ஆப்பிரிக்காவின் சில பாகங்களில் பெரிய பெரிய சோழிகளை ஓட்டல் சிப்பந்திகள் வெகுமானமாகப் பெறுகிறார்கள். வேறு சில பாகங்களில் பழந்துணிகளைப் பரிசு பெறும் வழக்கம் இருந்துவருகிறது. இப்படிப் பழந்துணிகளைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு அபார திருப்தி. உடனேயே அதை அவர்கள் எடுத்து உடுத்துக்கொண்டு, தங்கள் மகிழ்ச்சியைத் தெரியப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் துணி வழங்கியவருக்கு அவமதிப்பு. சின்ன வேலைகள் எவையேனும் இருந்தால், சிப்பந்திகள் தங்கள் குழந்தைகளை அனுப்பி வைப்பார்கள். அவை வந்து அந்த வேலைகளைச் செய்யும். குழந்தைகளுக்குத் தின்பண்டம் கொடுப்பது தான் சாதாரணமான வழக்கம்; காசு கொடுத்தால் அவர்கள் திருப்தியடைய மாட்டார்கள்.

இங்கிலாந்தில் 'இனாம்' என்பதற்கு ஓர் எல்லையே கிடையாது. இனாம் கொடுப்பதும் அதைப் பெறுவதும் அங்கே மிதமிஞ்சிப் போய் விட்டது. அரசாங்கத்தார் இந்த 'இனாம்' வருமானத்துக் கென்றே ஒரு வருமான வரிகூட விதித்து விட்டார்கள்.

அமெரிக்காவிலும் இப்படித்தான். எதற்கெடுத்தாலும் 'இனாம்' கொடுக்க வேண்டியிருப்பதால், சிலருக்கு அங்கே வசிப்பதே கஷ்டமாயிருக்கிறது. தேவையான சௌகரியங்கள் உண்டாக உண்டாக, அப்படி உண்டாகும் இடத்துக்குமதிப்பு அதிகம்; அங்கே வாழ 'டிப்பிங்'கும் அதிகம்.

கால தேச வர்த்தமானங்களைப் பொறுத்தது 'டிப்பிங்' அல்லது இனாம். அது லஞ்சம் அல்ல. அதிகப் பணம் நடமாடும் இடத்தில், அதுவும் செழித்து நிற்கும். இல்லாத இடத்தில், அதற்கும் நலிவு தான். லஞ்சத்தை ஒழிக்கச் சட்டம் தேவை; இதற்குத் தேவை இல்லை. இதனால் பல நன்மைகளும் உண்டு.

### மெலிந்தோரின் பார்வை

**மெலிந்தோரை நீ ஹிம்ஸிக்காதே. வெறுந்தோலால் ஆக்கப்பட்ட துருத்தியினின்று வரும் காற்று இரும்பையே சாம்பல் ஆக்குவது போல, அவர்களுடைய பார்வை எரிக்கும் சக்தி உடையது.**

—கபீர்

# ஆயி பாடல்

## பிரபுல்லதத்த கோஸ்வாமி

பெரியம்மையின் உக்கிரம் தாங்காமல் அதைத் தெய்வமென்றே பயபக்தியுடன் பாவித்து நடப்பது தமிழ் நாடு மாத்திரமல்ல; அஸ்ஸாமும் அப்படித்தான். ஆயி என்றுதான் அங்கும் மகமாயியை அழைக்கிருர்கள். ஆயி புகழைப் பாடும் இந்த 'ஆயி நாம்' எத்தகைய அரிய வர்ணனை? இதைப்பற்றி எழுதும் ஆசிரியர் அஸ்ஸாமின் தலைசிறந்த ஓர் எழுத்தாளர்.

மகமாயி என்ருல், அஸ்ஸாம் மாகாணப் பெண்களுக்கு மகா பயம். மகமாயித் தாய்க்கு உவப்பான பெயர்களைச் சொல்லி அவளைப் புகழ்வார்கள். குளிர்ச்சியானவளே என்று பொருள் கொண்ட சீதளா என்ற பெயரையும் தாயே என்று பொருள் கொண்ட ஆயி என்ற பெயரையும் அவளுக்கு அவர்கள் சூட்டியிருக்கிருர்கள். நீர்க்குளுவானே அல்லது வேறு அம்மைகளோ ஒரு குழந்தைக்கு வார்த்துவிட்டால், குழந்தை மீது 'ஆயி' தோன்றி யிருப்பதாகவும் பூச்சொரிந்திருப்பதாகவுமே அஸ்ஸாமியப் பெண்கள் சொல்வார்கள். ஆயி பாடல் பாடி, மகமாயியை மனமிரங்கச் செய்வது அங்கே பெண்களின் வேலை. பெண்கள் கூடிக் கைகொட்டி 'ஆயி நாம்' என்ற பாடலைப் பாடுவார்கள்.

ஆயிக்கு ஏழு தங்கைமார் இருக்கிருர்கள். மைசூரில் ஆயிக்கு மாரியம்மன் என்று பெயர். இங்கேயும் அவளுக்கு ஏழு தங்கைமார் உண்டு. தங்கைமாரெல்லாம் தங்கள் தமக்கையை விட அன்பானவர்கள். தமக்கைதான் கடுமையானவள்.

ஆயி நாம் பாடல்கள் இனிமையும் நயமும் பொருந்தி யிருக்கின்றன. மேலும், அவற்றிலே பய பக்தியும் நிறைந்திருக்கிறது. அந்தப் பாடல்களில் சில தாலாட்டுப் போல் அமைந்திருக்கின்றன. இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. குழந்தைகளின் க்ஷேமத்தைக் கோரித்தானே அந்தப் பாடல்கள் தோன்றியுள்ளன. கீழே ஓர் அழகான பாடல் வருகிறது. உருவக அலங்காரத்துக்கு ஓர் அரிய உதாரணம் போல் அது விளங்குவதைப் பாருங்கள் :

ஆயி இங்கு வாராளே!
  ஆயி இங்கு வாராளே!
அவளோடு வாராரே!
  ஆறேழு தங்கைமார்.

ஏழுமலை தாம்கடந்து
  எல்லோரும் வாராரே!
வழியெங்கும் கண்டவர்கள்
  வணங்கியடி பணிந்திடுருர்.

புல்லும்பூச் சொரிகொடியும்
  பூரித்த பெருமரமும்
எல்லாமே தலைபணிய
  எம்ஆயி வாராளே!

**காப்பிரைட்: திரிவேணி (ஆங்கிலம் - டிசம்பர் '47), மல்லேசுவரம், பெங்களூர்.**

சொன்னநிறப் பொன்வண்டு
சுழன்றாடி வட்டமிட
வன்னமாய் ஊர்பார்க்க
வாராளே எம்ஆயி!

"ஊர்பார்க்க வரும்உன்னை
உயிர்ப்பிச்சை கேட்கின்றோம்.
உண்மையினை அறியாமல்
உன்வனத்தை மிதித்துவிட்டோம்

அரும்புகளை எடுத்துவிட்டோம்.
அறியாமற் பிழைசெய்தோம்.
அத்தனையும் பொறுத்தருள்வாய்,
ஆயி பவானிஅம்மே!

உன்காலில் விழுந்திடுறோம்.
உளமிரங்கி யருள்புரிவாய்"
என்றவளைக் கெஞ்சுகிறோம்.
எம்மைஅவள் காத்திடுவாள்.

ஏழையெங்கள் வீட்டுக்கு
எழுந்தருளி விட்டாளே!
என்னத்தைக் காணிக்கை
ஏழைகள்நாம் வைத்திடுவோம்?

தாளில்உற்ற தூசியினைத்
தலைமயிரால் துவட்டிடுவோம்.
மெல்லடிக்கு நடைவிரிப்பாய்
மேனியையே சார்த்திடுவோம்.

ஆயி வந்து சேர்ந்ததுமே
அவள்பாதம் பற்றிநின்று
அழுதுவிம்மிச் சோருகின்றாள்.
அவள்அடிமைப் பெண் இங்கே!

"ஏன்அழுறே, என்மகளே?"
என்றுசொல்லி எம்ஆயி
புன்சிரிப்புப் பூத்திடுவாள்
புகழ்ந்திடுவோம் அவள்பெருமை.

பெரியம்மை வார்த்துப் பிழைத்த குழந்தையை விசேஷ அதிருஷ்ட முள்ளதாக, அஸ்ஸாமியத் தாய் மார் எண்ணுகிறார்கள். காசி, ஜெயிந் தியா என்ற குன்றுகளின் சில பகுதி களில் வசிக்கும் வின்டெங்ஸ் என்ற வகுப்பார், தங்கள் குழந்தைகளைப் பெரியம்மை தொற்றிக் கொள்ளும் படி செய்யத் தாங்களாகவேகூட முயற்சி செய்கிறார்கள்.

## எது சரி?

1. நாண்டகவேந்தர்: (அ) பாண் டிய மன்னர் பெயர் (ஆ) திரு நாவுக்கரசர் (இ) குறுநில மன்னர் களின் வேறு பெயர் (ஈ) ஒரு சாதிப் பெயர்.

2. விடத்தேர்: (அ) சோழ மன்னனுடைய ரதம் (ஆ) ஏர் வகைகளில் ஒன்று (இ) ஒரு முள்ளுச்செடி (ஈ) கொங்கு நாட் டில் ஓர் ஊர்.

3. ஐயவி: (அ) சங்ககாலத்தில் வாழ்ந்திருந்த ஒரு பெண் புலவர் (ஆ) மத்திய மாகாணத்தில் உள்ள ஒரு குகை (இ) குமரித் தீர்த்தத் துக்கு அருகில் உள்ள வாவி (ஈ) வெள்ளைக் கடுகு.

4. மத்யார்ஜுனம்: (அ) அர் ஜுனன் உறங்கின இடம் (ஆ) மருதமரப் பட்டை (இ) திரு விடைமருதூர் (ஈ) நரகங்களில் ஒன்று.

5. கீழ்க்கணக்கு: (அ) பின்ன வாய்பாடு (ஆ) சோழர் காலத் தில் இருந்த உத்தியோகம் (இ) தமிழ் நூல் வரிசைகளில் ஒன்று (ஈ) குறைவான மதிப்பு.

6. டாக்டர் ஜி. யு. போப்: (அ) மகாத்மா காந்திக்குச் சஸ்திர சிகிச்சை செய்தவர் (ஆ) கொலம் பியா யூனிவர்ஸிடியில் பேராசிரி யர் (இ) லண்டன் நகரில் உள்ள பிரசித்த வைத்தியர் (ஈ) திருக் குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த் தவர்.

7. ஹரித்ரா நதி: (அ) இமா சலத்தில் உள்ள ஒரு நதி (ஆ) மன்னார்குடிக்கு அருகில் உள்ள குளம் (இ) ராமாயணத்தில் குறிக்கப்படும் ஆறு (ஈ) மஞ்சள் ஆற்றின் வேறொரு பெயர்.

[விடையை 40-ஆம் பக்கத்தில் பார்க்க.]

பிசாசு என்பது மன நோய்தான். ஆனால், அதைப் பட்டர் விரட்டுவதும் உண்மையே, அது எப்படி?

# பிசாசு ஓட்டிய பட்டர்

விப்ரா

தென்னிந்தியாவில் உள்ள கோயில்கள் எண்ணில் அடங்காதவை. அவற்றிலே பல கோயில்கள் பிசாசு ஓட்டும் சக்தி வாய்ந்தவையாயிருக்கின்றன. இவை தெரிந்தவருக்குத்தான் தெரியும்; மற்றவர் அறியார்.

பல நூற்றாண்டுகளாய் வழங்கி வரும் ஐதிகங்கள் இந்தக் கோயில்களை ஒட்டிக்கொண்டிருக்கின்றன. தங்களை ஏதோ பிசாசு பிடித்திருப்பதாக மனப்பிராந்தி கொண்டிருக்கும் துர்ப்பாக்கியசாலிகளுக்கு இந்தக் கோயில்கள் புகல் அளிக்கின்றன. இம்மாதிரி பிசாசு ஓட்டும் பிரபல கோயில்களில் ஒன்று தேவர ஹோஸஹள்ளி என்ற இடத்தில் உள்ள ஆஞ்சநேயர் ஆலயம். இந்த இடம் மைசூர் சமஸ்தானத்தில் இருக்கிறது.

தென்னிந்தியாவின் பற்பல பகுதிகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான மக்கள் இந்தக் கோவிலுக்கு வருகிறார்கள். தங்களைப் பிடித்துத் தொல்லை செய்யும் பிசாசை விரட்டி விடுதலை பெறுவதற்காகவே அவர்கள் அப்படி வருகிறார்கள். கோயிலுக்குள்ளே நடக்கும் கிரியைகளெல்லாம் மகா சிக்கலான மந்திர தந்திரங்கள் நிறைந்திருக்கின்றன. அத்தனையும் பிறர் அறியாமல் வெகு ரகஸ்யமாய்க் காப்பாற்றப்படுகின்றன. இப்படிப்பட்ட கோயிலின் கர்ப்பக் கிருகத்துக்குள்ளே அனுமதிபெற்றுப் புகுந்து, உள்ளே நடக்கும் காட்சிகளை நேரிலே கண்டு, பளிச்சென்று ஒளி வீசும் விளக்குகளின் உதவி கொண்டு போட்டோப் படங்களும் நான் எடுத்து வந்து விட்டேன். இது ஏதோ என் அதிருஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.

கோயிலுக்கு வர அனுமதி



காப்பிரைட்: பம்பாய் கிரானிக்கிள் (ஆங்கிலம்; 28-12-'47), பார்ஸி பஜார் தெரு, பம்பாய்.

கோரிப் பல பேர் மனுச் செய்து கொண்டு காத்திருக்கிறார்கள். அவர்களில் பத்துப் பன்னிரண்டு பேரை மந்திரவாதி பொறுக்கிக் கொள்கிறார். இந்த மந்திரவாதியே கோயிலின் தலைமைப் பட்டருமாவார். பிசாசு பிடித்த துர்ப்பாக்கிய சாலிகளும் அவர்களுடைய உற்றார் உறவினரும் ஒவ்வொரு நாளும் உச்சி வேளையில் கோயிலுக்கு வருகிறார்கள். பிசாசு பிடித்தவர்களில் சிலர் அப்போது சாதாரணமாகவே இருக்கிறார்கள். அவர்களை எப்போதாவதுதான் பிசாசு வேதனை செய்கிறதாம். மற்றவரோ மகா மோசமாயிருக்கிறார்கள். ஆடி விழுந்து கொண்டும், அர்த்தமில்லாமல் ஏதோ பிதற்றிக்கொண்டும் வருகிறார்கள்.

வெளி உபத்திரவம் ஏதுமில்லாமல், கோயிலுக்குள்ளே இந்தத் துர்ப்பாக்கியசாலிகள் பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்ததும், பிசாசு ஓட்டும் வேலை ஆரம்பமாகிறது. முதலில் சுருக்கமாக ஆஞ்சநேய பூஜை நடைபெறுகிறது. பிசாசு பிடித்தவர்களெல்லாம் பின்பு சம்மணமிட்டுக் கீழே உட்கார்ந்து கொள்கிறார்கள். அவர்களுக்கு முன்னால், தலைமைப் பட்டர் குந்தி உட்கார்ந்து கொள்கிறார். கையிலே தம்பூராவைப் பிடித்துச் சுருதி மீட்டிக்கொண்டு பாடத் தொடங்குகிறார். ஆஞ்சநேய பகவானைத் துதிக்கும் ஸ்தோத்திரப் பாட்டு ஒன்றை மிகவும் மெல்லிய குரலில் இனிமை ததும்ப, பட்டர் பாடுகிறார்.



அவர் பாட ஆரம்பித்ததுமே, அந்தத் துர்ப்பாக்கியசாலிகளிடம் ஒரு மாறுதல் உண்டாவது தென்படுகிறது. அவர்களுடைய கண் இமைகள் தம்மிச்சையாக மூடிக் கொள்கின்றன. அவர்கள் இழுத்து இழுத்துப் பெருமூச்சு விடுகிறார்கள். அவர்களுடைய பெருமூச்சின் சப்தம் வரவர அதிகரித்துக் கொண்டே போய், கரகரத்து, வனவிலங்கு உறுமும் உறுமலைப் போல் வலுத்துவிடுகிறது. சுமார் பதினைந்து நிமிஷ நேரம் அவர்கள் இதே நிலையில் இருக்கிறார்கள். பட்டர் பாடிக்கொண்டேயிருக்கிறார்.

பிசாசு பிடித்தவர்கள் பிறகு தலை சுற்றி ஆடத் தொடங்குகிறார்கள். அவர்களின் இடை மட்டில் தரையிலே பதிந்து உட்கார்ந்தபடி அசையாமல் இருக்கிறது. தோள்கள் கூனுகின்றன. இடைக்கு மேலே உடம்பு முழுவதும் வளைந்து சுழன்றாடி வட்டமிடுகிறது. முதலில் இந்தச் சுழற்சி மெல்ல மெல்ல நடக்கிறது. சில நிமிஷ நேரம் சென்றதும், தலையும் உடலும் இயங்கும் இயக்கமே நம் கண்ணுக்குத் தெரியாதபடி, ஒரே சுழலும் வட்டமாகிறது.

பல மணி நேரம் இந்தப் பேயாட்டம் நடக்கிறது. "இத்தனை ஆட்டம் ஆடுகிறதே; இந்தக் கழுத்து எப்படித்தான் சுளுக்கிக் கொள்ளாதிருக்கிறதோ?" என்று ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது. பிசாசு பிடித்தோர் மிக்க வாலிபமாயிருப்பார்கள்; மனோ வியாதியால் எலும்புந்தோலுமாய் இளைத்திருப்பார்கள்.

சாதாரண நிலையில் ஒரு நிமிஷங்கூட அவர்களால் இந்த ஆட்டத்தைத் தாங்க முடியாது. அவர்களுமே இந்த வேதனைக்குப் பிறகு துளியும் கலங்காதிருக்கிறார்கள். இந்த அதிசயத்துக்குச் சுலபமாகக் காரணம் சொல்லலாம். பிசாசு பிடித்தவர்களைப் பட்டர் மனோவசியம் செய்துவிடுகிறார். வசமிழந்த அந்த நிலையில் அவர்களுக்கு வலி தெரியாமல் போகிறது. இதுவே ஒரு வேளை அந்தக் காரணமாக இருக்கலாம்.

கோயிலின் தெய்விகச் சூழலும், அங்கே நிலவும் நிச்சப்தமும், விக்கிரகத்தின் திருமுகமும், பட்டரின் பாட்டினிமையும், அவர் உறுத்து விழிக்கும் பார்வையும் தத்தம் வேலையைப் புரிந்து விடுகின்றன. பிசாசு பிடித்தவர்கள் இப்போது முற்றும் பட்டர் ஆட்டி வைத்தபடி யெல்லாம் ஆடும் பொம்மைகளாகிறார்கள். அவர்களை அவர் முதலிலே தலை விரித்து ஆடவிடுகிறார். இந்த ஆட்டமுடிவில் அவர்கள் சோர்ந்து போன நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலையில் பட்டரின் கட்டளைப்படி யெல்லாம் நடக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

பேயாட்டம் நடந்துகொண்டேயிருக்கும்போது, ஆடுவோரில் ஒருத்தியைப் பட்டர் சட்டென்று நிமிர்ந்து பார்க்கிறார். அவ்வளவு போதும். உடனே அந்த ஒருத்தி மட்டும் தன் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டு பட்டரை நோக்கித் திரும்புகிறாள். ஆனால், இன்னும் அவளுடைய கண்கள் கனவு காண்பதுபோல் பாதி மூடியபடியே இருக்கின்றன.

அவளைப் பட்டர் கேள்விகள் கேட்கத் தொடங்குகிறார். "உன்னைத் துன்பப்படுத்துவது எந்தப் பிசாசு?" என்பதே பட்டரின் முதல் கேள்வி. அவர் கேள்விகளை மிகவும் நயந்தே கேட்கிறார். உடனுக்குடனே பதில்



கள் வராவிட்டால், பட்டர் வரவரக் கோபமாகக் குரலை உயர்த்துகிறார். கடைசியில் கோயிலே அதிரும்படி அவர் கர்ஜிக்கத் தொடங்குகிறார்.

பீடித்த பிசாசு எந்தப் பிசாசு என்ற விஷயம் தெரிந்த பின்பு, அது பீடித்த காரணம் என்ன என்பதைப் பட்டர் விசாரிக்கிறார். முன் மாதிரியே நயமாகவும் பயமுறுத்தியும் கேட்டு இதற்கும் பட்டர் விடை பெறுகிறார். என்ன செய்தால் பிசாசு திருப்தியடையும் என்பது தான் அடுத்த கேள்வி. இந்தக் கேள்விக்கும் பெண் பதில் தருகிறாள்.

கேள்வி - பதில் முடிகிறது. பிசாசு திருப்தியடைய என்ன என்ன செய்ய வேண்டுமென்று பெண் சொன்னாளோ அதையெல்லாம் குறைவில்லாமல் செய்து முடிப்பதாக, பிசாசுக்குப் பட்டர் உறுதி கூறுகிறார். இதைத் தவிர, பிசாசுக்கு வேறு ஏதாவது விருப்பம் உண்டா என்று மீண்டும் அவர் கேட்கிறார். "இவ்வளவு போதும்" என்கிறாள் பெண். "உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்வோம்" என்று மீண்டும் ஒரு முறை பிசாசுக்குப் பட்டர்

உறுதி கூறுகிறார். இந்தப் பெண்ணிடம் பட்டரின் விசாரணை இதோடு முடிகிறது.

இந்தச் சம்பாஷணை முழுவதிலும், பிசாசின் சார்பாகப் பெண்ணே பதில் சொல்லுகிறாள். தன் வசமிழந்த மனோவசிய நிலையிலிருக்கும் இந்தப் பெண்ணைப் பின்பு பட்டர் சுயப்பிரஞ்ஞை அடையும்படி செய்கிறார். "உன்னைப் பீடித்த பிசாசு ஒரு வாக்குறுதி பெற்றுக் கொண்டது. பிசாசைத் திருப்தி செய்ய, நீ அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். கண்டிப்பாய் நிறைவேற்ற வேண்டும். நிறைவேற்றினாயானால், இனி உன்னை அந்தப் பிசாசு வேதனை செய்யாது" என்று அவளுக்கு அவர் உறுதி கூறுகிறார். பிசாசு பிடித்தவர்கள் பெரும்பாலும் பட்டரின் யோசனைப்படியே நடக்கிறார்கள். பிசாசுக்குப் பட்டர் கொடுத்த வாக்குறுதியை அவர்கள் நிறைவேற்றுகிறார்கள். பீடையொழிந்து சுகமடைகிறார்கள்.

பட்டர் ஒரு பெண்ணைக் குணப்படுத்திய வரலாற்றை இங்கே கூறுகிறேன். இது நான் நேரே கண்ட சங்கதி. பிசாசு பிடித்த அந்தப் பெண்ணைப் பட்டரிடம் அழைத்து வந்தார்கள். பட்டர் விசாரித்தார். தன் புருஷனின் முதல் மனைவி செத்துப் போய் விட்டதாகவும், அந்த முதல் மனைவியின் ஆவியே தன்னைப் பீடித்திருப்பதாகவும் பெண் சொன்னாள். முதல் மனைவிக்கு ஒரு சிறு மகன் இருக்கிறானும். அந்தத் தாயில்லாச் சிறுவனை, இந்தச் சிற்றன்னை கொடுமையாய் நடத்துகிறாளாம். அதனால்தான் முதல் மனைவியின் ஆவி கோபமூண்டு இவளைப் பீடித்திருக்கிறதாம்.

அந்தச் சிறுவனை இவள் நன்றாய்க் கவனித்துக் கொண்டால், பிசாசு திருப்தியடைந்து விடுமாம். பட்டரின் விசாரணையில், இந்த விஷயம் வெளியாயிற்று.

"உன் மகனை ராஜாமாதிரி இனிமேல் வளர்க்கிறோம்" என்று பிசாசுக்கு உறுதி கொடுத்தார் பட்டர். மனோவசிய நிலையிலிருந்து விடுபட்டுப் பெண் சுயப் பிரஞ்ஞை அடைந்ததும், "உன் மூத்தாளின் மகனை நீ கொடுமையாய் நடத்துகிறாய். அதனால்தான் அவள் கோபமடைந்து உன்னைப் பீடித்திருக்கிறாள். அந்தச் சிறுவனை இனி நீ கொடுமையாய் நடத்தக் கூடாது" என்று பட்டர் சொன்னார். "சிறுவனை இனிச் சரியாய் நடத்துகிறேன்" என்று பெண்ணும் வாக்குக் கொடுத்தாள். பெண் பின்பு வீட்டுக்குத் திரும்பினாள். மூன்று மாதமாகியும் அவள் எவ்வித உபத்திரவமுமில்லாமல் முற்றும் சுகமாயிருப்பதாகச் செய்தி கிடைத்தது. சிறுவனை அவள் மிகவும் அன்போடு நடத்துகிறாளாம். அதுதான் இந்த அதிசயத்தை நிகழ்த்திவிட்டது.

பிசாசு பிடித்தோர் இந்த மந்திர தந்திரங்களால் எப்படிக் குணமடைகிறார்கள்? இதற்கு ஒரு விளக்கம் தேவையே இல்லை. பிசாசு என்பது நோயாளியின் மனக் கற்பனையும் பீதியுமேயாகும். சாதாரண மனத்தத்துவ ரீதியிலேயே சிகிச்சை நடக்கிறது. குறிப்பிட்ட சில கடமைகளை வழுவாமல் செய்தால், பிசாசு இனித் துன்புறுத்தாது என்று மனநோயாளிக்கு உறுதி கூறுகிறார் பட்டர். அவர் செய்யும் மீதிக் காரியமெல்லாம் வெறும் மனோவசியமே. மந்திர தந்திரங்களெல்லாம் மர்மமான முறையில் நடப்பதால், மனோவசியத்தில் கட்டுண்ட நோயாளியின் மனம், பட்டரின் புத்திமதியைக் கேட்டு அதன்படி நடக்கத் தயாராகி விடுகிறது. இதுதான் சூட்சுமம்.

எத்தனையோ விதமான பத்திரிகைகள் உண்டு. அத்தனையைப் பதிப்பிப்பவர்களும் ஆசிரியர்கள்தாம். அநுபவமும் எல்லாருக்கும் ஒன்றே.

# யார் பத்திரிகாசிரியர்?

## டி. கே. ராம மேனேன்

படிப்பில்லாத ஒரு நாட்டுப்புறத்தானை, "பத்திரிகாசிரியர் என்றால் யார்?" என்று கேட்போம். அதற்கு அவன் என்ன பதில் சொல்லுவான்? "உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கலகத்தைக் கிளப்பிவிட்டுப் பல தொல்லைகளை விளைவிக்கும் மனிதர்தாம் பத்திரிகாசிரியர்" என்று யோசியாமல் சொல்லுவான். இப்படிப்பட்ட அபிப்பிராயங்களால் கலங்குகிறவரா பத்திரிகாசிரியர்!

படித்த பட்டணத்து மனிதர் ஒருவரை இதே கேள்வி கேட்டால், "பத்திரிகாசிரியர் என்பவர் பொது மக்களுடைய உருவெடுத்த வாக்கு. மக்களின் உள்ளத்தை ஒளியாமல் எடுத்துரைக்கும் பிரதிநிதி" என்று அழகாய்ப் புகழ்ந்து கூறுவார்.

பத்திரிகாலயத்தில் அரியணையில் வீற்றிருக்கும் ராஜாதி ராஜன் அவர் என்றால் மிகையாகாது. அவருடைய ஆட்சி எங்கே தொடங்கி எங்கே முடிவடைகிறது என்பதை எவராலும் தீர்மானிக்க முடியவில்லை. அவருக்கு ஆளக் கிடைத்திருக்கும் உலகம் அவ்வளவு பெரியது. அமெரிக்க ஜனாதிபதிக்கும் சீனக் குடியரசுத் தலைவருக்கும் பிரிட்டிஷ் மன்னருக்கும் ஜப்பான் சக்கரவர்த்திக்கும் தளபதி பிராங்கோவுக்கும் ஸோவியத் ஸ்டாலினுக்கும் கிடைத்திருக்கும் அதிகாரத்துக்கு எல்லையுண்டு. நம்முடைய பத்திரிகாசிரியருக்கோ இந்தப் பெரியோர்களெல்லாமே தலை பணியவேண்டும். அவர்கள் அப்படித் தலைபணியச் செய்யும் சக்தி பத்திரிகாசிரியருக்கு உண்டு.

ஒவ்வொரு பத்திரிகாசிரியருக்கும் ஒரு தனிப்பட்ட நோக்கமும் அதை அடைய அவருக்கே உரித்தான அலாதி முறை ஒன்றும் உண்டு. அவற்றை உணரவேண்டுமானால், அவர்களுடைய பத்திரிகைகளை நாம் விடாமுயற்சியுடன் படிப்பதுதான் சிறந்த வழி. சில பத்திரிகைகள், அரசாங்கத்தின் வலது கையாக இருந்துகொண்டு தம் வாழ்நாளைக் கடத்தி வரும். வேறு சில பத்திரிகைகள், முதலாளிகளின் செல்வத்துக்கு ஊட்டம் அளிப்பவையாக இருந்து வரும். இன்னும் சில பத்திரிகைகள், தொழிலாளிகளின் உணர்ச்சிகளையும் ஆசைகளையும் தூண்டிவிட்டுக்கொண்டு நிற்கும். மதங்களுக்கு வக்காலத்து வாங்கி வாதாடிவரும் பத்திரிகைகளும் சில உண்டு. விளம்பரத்துக்கென்றே வாழ்ந்து வரும் பத்திரிகைகள் சிலவற்றையும் காணலாம். இப்படிப்பட்ட பத்திரிகைகளை நடத்துவோர் அனைவருக்கும் 'பத்திரிகாசிரியர்' என்ற ஒரே பட்டப்பெயர்தான்.

அளவற்ற சக்தி உருவெடுத்த

காப்பிரைட்: ஜயகேரளம் (மலையாளம்: 27-12-'47), ராயப்பேட்டை, சென்னை.

உருவே பத்திரிகாசிரியர். தம் சக்தியைச் சுருக்கவும் பெருக்கவும் எப்படி வேண்டுமானாலும் செய்து கொள்ள அவரால் முடியும். நாட்டில் கலகமூட்டுபவர் என்று பத்திரிகாசிரியரைச் சிலர் குறை கூறுவார்கள். கலகத்தை அடக்கவும் அதே பத்திரிகாசிரியருக்குத் திறமை உண்டு என்பதை அவர்கள் உணரவேண்டும். முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையே பொங்கி நிற்கும் கடலை, ஒரே கணத்தில் வறளச் செய்யக்கூடியவர் பத்திரிகாசிரியரே. வேண்டுமென்றால் அதே கொந்தளித்த கடலைப் பல மடங்கு பெருகச் செய்யவும் அவரால் முடியும். மனிதர்களை மரப்பாச்சிகளாய் வைத்து விளையாடுவார்; மரப்பாச்சிகளை மேதாவிகளாகக் காட்டி வித்தை பண்ணுவார் - இப்பேர்ப்பட்ட திறமை பத்திரிகாசிரியரிடம் குடிகொண்டிருப்பதை நம் நாட்டில் சிலரே அறிந்திருக்கிறார்கள்.

பத்திரிகாசிரியரின் ஆட்சியைப் போலவே அவருடைய அறிவுக்கும் எல்லையில்லை. உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் சிருஷ்டியாகும் புதுப்புது இலக்கியங்களையும் நூதன ராஜதந்திரங்களையும் பல நூல்களின் மூலம் ஒரு நொடியில் அவர் அறிந்து கொள்வார். அதோடு நிற்காமல் அவற்றை மனதில் பதித்து அவைபற்றிச் சிந்தனையும் புரிவார். அந்தச் சிந்தனையின் முடிவைத் தாமதமின்றிப் பத்திரிகையில் ஏற்றி, நமக்கு வழங்கிவிடுவார்.

பத்திரிகாசிரியர் பகைவர் இல்லாத அஜாதசத்ரு என்று நினைக்க வேண்டாம். அவருக்குப் பகைவர் பல்லாயிரம் பேர் உண்டு. ஆனால் அந்தப் பகைவர்களுக்கு அவரை அணுகத் தைரியம் உண்டாவதில்லை.

ஊணை விட்டு உறக்கத்தைத் துறந்து அல்லும் பகலும் உலகத்துக்காக உழைக்கும் பத்திரிகாசிரியருக்குச் சுகம் எங்கே கிடைக்கப் போகிறது? பாவம்! அப்படியிருந்தும் இந்நாள் எழுத்தாளர் அனைவரும் பத்திரிகாசிரியப் பதவி பெறப் போட்டியிட்டு, விடா முயற்சி செய்து வருவதுதான் அதிசயம். பெரும்பாலும் அவர்களின் முயற்சி வீணாய்த்தான் போகிறது. பயனை எண்ணாமல் செயலிலேயே ஈடுபட்டுக் கர்மயோகத்தை நிலை நாட்டிக் கொண்டு, மீண்டும் மீண்டும் முயல்வது அந்த எழுத்தாளர்களின் இயற்கையாயிருக்கிறது. இதுதான் இன்னும் பெரிய அதிசயம்.

பத்திரிகாசிரியருக்குக் கிடைக்கும் சம்பளம், எவ்வளவோ பாடுபட்டும் ஒரு மாதத்தின் எல்லையை எட்டிப் பிடிப்பதில்லை. அதற்காக அவர் வேலை நிறுத்தம் செய்வதில்லை. ஆனால் வேலைநிறுத்தம் செய்பவர்களுக்குச் சூத்திரதாரராக வேண்டுமானால் இருந்துகொண்டு தக்க உதவி புரிவார்.

## இதுதான் சரி

[34-ஆம் பக்கத்துக் கேள்விகளுக்கு விடை]

1—ஆ; 3—ஈ; 5—இ;
2—இ; 4—இ; 6—ஈ;
7—ஆ.

**ஹிந்து மதத்தை மதித்து நடந்தார்கள் முஸலிம மன்னர்கள். இன்றைய இந்திய முஸ்லிம் மக்கள் அந்த உதாரணத்தைப் பின்பற்றுவார்களா?**

# பசுவைக் காத்த மொகலாயர்

ஆஞ்ஜலோ மோஸஸ்

பசுக்களைக் காக்கும் விஷயத்தில் முஸ்லிம் அரசர்கள் சிறந்த கவனம் செலுத்தினர்கள். சரித்திரத்தை ஆராய்ந்தால் இது தெரிய வரும். இஸ்லாமிய மதம் பசுக்களைக் கொலை செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. இதை முஸ்லிம் அரசர்கள் நன்ருய் உணர்ந்திருந்தார்கள்.

முதலாவது மொகலாய அரசராகிய பாபர், கோசம்ரக்ஷணத்தின் அவசியத்தை உணர்ந்தவர். அவர் பசு மாமிசத்தைச் சாப்பிட்டதே இல்லை. அவருடைய சுயசரித்திரக் குறிப்புக்கள் அடங்கிய 'நினைவுகளை' முழுதும் படித்துப் பாருங்கள். ஓர் இடத்திலாவது அவர் பசு மாமிசத்தை உண்டதாகக் காண முடியாது.

பாபர் மரணவஸ்தையில் இருந்த போது, மகன் ஹுமாயூனை அழைத்தார். உணர்ச்சி பொங்கச் சில புத்திமதிகள் சொன்னர்.

"மகனே, இந்தியாவில் பல மதங்கள் இருக்கின்றன. இந்த நாட்டை ஆளும் உரிமை கடவுள் அருளால் உனக்குக் கிடைத்திருக்கிறது. உன் உள்ளத்தில் எந்த மதத்தினிடத்தும் பகையுணர்ச்சி கடுகளவுகூட இல்லாமல் துடைத்து விட வேண்டும். அந்த அந்த மதத்துக்கு ஏற்ற முறையில் நீதி வழங்க வேண்டும். முக்கியமாகப் பசுவதையை நிறுத்திவிடு. பசுவதை நடந்தால், இந்திய மக்களை நீ வசப்படுத்த முடியாது" என்று அவர் சொன்னர்.

அவருக்கு மாமிசம் என்றால், அருவருப்பு. இதற்குக் காரணம் ஜைன மதத்தினரிடம் பழகிய பழக்கமோ, அல்லது உயிரைக் கொல்வதைக் காணச் சகிக்காத இயற்கை உணர்வோ எது என்று தெரியவில்லை. "மன்னர்பிரானுக்கு மாமிசத்தில் அருவருப்பு இருந்தது. 'இயற்கையிலே மனிதனுக்கு உணவாகப் பலவகைப் பொருள்கள் இருக்கின்றன. ஆனல் அவன் அறியாமையால் பிராணிகளைக் கொன்று தன் குடலையே அவற்றின் இடுகாடாக்கிக்கொள்கிருன். நான் மாத்திரம் அரசனுக இல்லாதிருந்தால், உடனே மாமிச உணவை நீக்கியிருப்பேன்; இப்போதும் சிறிது சிறிதாக நிறுத்திவிட உத்தேசித்திருக்கிறேன்' என்று அவர் சொல்வார்" - இப்படி ஐனி அக்பரி சொல்கிறது.

அக்பருடைய அரசாட்சியில் சட்ட ரீதியாகப் பசுக்களுக்குப் பாதுகாப்பு ஏற்பட்டது. முஸ்லிம் அரசாட்சியில் மிகப் பழங்காலம் முதலே கால்நடைகளைக் கொல்வதற்கு வரி ஏற்பட்டிருந்தது.

காப்பிரைட்: ஓரியண்ட் (ஆங்கிலம்: 14—12—'47), 93-ஏ, தரம்தோலா தெரு, கல்கத்தா.

அவற்றின் பாதுகாப்பை உத்தேசித்தே அந்த வரி விதித்தார்கள். இதைப்பற்றி டாக்டர் ஸையத் முகம்மத் பின்வருமாறு எழுதுகிறார்: "முஸ்லிம் அரசாட்சியின் ஆரம்பகாலம் முதலே, பசுவைக் கொல்லும் கசாப்புக் கடைக்காரர்களுக்குத் தனியே வரி ஏற்பட்டது. ஒரு பசுவுக்கு 12 ஜேதால் வரையிலும் அந்த வரி இருந்தது. பிரோஸ் ஷாவின் அரசாட்சியில் கசாப்புக் கடைக்காரர்கள் இந்த வரி கூடாதென்று விண்ணப்பித்துக் கொள்ளவே, அரசர் அதை நீக்கினர். இந்த வரியைப் பற்றிய விவகாரங்களைச் சரித்திரப் புத்தகங்களில் காணவில்லை. ஆனல் பசுக் கொலையைத் தடுப்பதே வரி விதித்ததன் நோக்கமாக இருந்திருக்க வேண்டும். அந்த வரி இந்தியாவில் முஸ்லிம் அரசு ஏற்பட்டது முதல் பிரோஸ்ஷா துக்லக் காலம் வரையில் 200 வருஷங்கள் இருந்து வந்தது. பசுக்கொலையை நேரடியாகத் தடுப்பதற்குப் பதிலாக, முஸ்லிம் அரசர்கள் இந்த முறையை மேற்கொண்டார்கள். இந்த வரிக்கு 'ஜாஸ்ரி' என்று பெயர். ஸுல்தான் நாஸிர் உத்தீன் குஷ்ரோ என்ற அரசர் காலத்தில் ஹிந்துக்களுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. அரசர் தமது ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசத்தில் பசுக்கொலையை ஒழித்தார். பிரோஸ்ஷா துக்லக் நீக்கின ஜாஸ்ரி வரியை மீண்டும் குஷ்ரோ போட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது; ஏனென்றல், பின்னல் வந்த அக்பர் அந்த வரியை எடுத்துவிட்டார் என்று சரித்திரப் புத்தகங்கள் கூறுகின்றன. அக்பர் பசுக்கொலையை முற்றும் ஒழிக்கக் கட்டளையிட்டார். பசுக் கொலை நிற்கவே, வரி போட வேண்டிய அவசியம் இல்லாமற் போயிற்று. அதுதான் வரியை அக்பர் எடுத்ததற்குக் காரணமாக இருக்க வேண்டும்."

ஹீராவிஜய சூரி, விஜயசேன சூரி, பானுசந்திர உபாத்தியாயர் என்ற மூன்று ஜைன ஆசாரியர்களுக்கு அக்பரிடத்தில் செல்வாக்கு இருந்தது. பொதுவாக மிருக வதைக்கும் சிறப்பாகப் பசுஹத்திக்கும் தூக்குத்தண்டனை கிடைக்கும் என்பதாக அக்பர் ஓர் உத்தரவு பிறப்பிக்கும்படி அவர்கள் செய்தார்கள். இந்த உத்தரவைச் சத்ருஞ்ஜய மலையில் ஆதீசுவரர் கோவில் சுவர்களில் பொதிந்துவிட்டார்கள். காட்டியாவாடில் பாலிதாண சம்ஸ்தானத்தில் இருக்கிறது இந்த மலை.

ஜி. கே. நரிமன் இந்தச் சாஸனங்களை ஆராய்ச்சி செய்து ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக மொகலாய அரசர்கள் என்ன என்ன காரியம் செய்தார்கள் என்பதைச் சொல்கிறார்: "முதலாவது சாஸனம் ஜலால் உத்தீன் முகம்மத் அக்பருடையது. அவருடைய ராஜ்யம் முழுவதும் ஜைனர்கள் தங்கள் வழிபாட்டு முறையையும் மதக்கோட்பாடுகளையும் தடையின்றிப் பின்பற்றலாமென்றும், அதற்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்கப்படுமென்றும் அது கூறுகிறது. அந்த மலை, கோயில் இவற்றின் மேலோ, அடியிலோ, அருகிலோ யாரும் எந்தப் பிராணியையும் கொல்லக்கூடாது. இரண்டாவது சாஸனம் சக்கரவர்த்தி ஜஹாங்கீருடையது. அதுவும் இத்தகையதே. மூன்றவது சாசனம் ஷாஜஹானுடையது. அதுவும் மேலே சொன்ன பாதுகாப்பை அளிக்கிறது. அந்த மன்னருடைய வேறொரு சாசனமும் இருக்கிறது. அது பின்னும் அதிக மத சுதந்தரத்தை அளிக்கிறது."

இவற்றல் பசுக்களின் பாதுகாப்பில் அக்பர் எத்தனை அக்கறை

உடையவராக இருந்தாரென்பது விளங்கும். அவர் மாமிச உணவை வெறுத்தார். ஹிந்துக் குடிகளுடைய உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுத்தார். ஜைனர்களுடைய பழக்கம் அவருக்கு இருந்தது. இந்தக் காரணங்களால் தம் ராஜ்யத்தில் பசுக் கொலையை அவர் தடுத்தார். தேசத்தின் பொருளாதார விஷயத்தில் பசுவைப் பாதுகாப்பது எவ்வளவு நன்மையாக இருக்கும் என்பதைக் கூட அவர் தெரிந்துகொண் டிருந்திருக்கலாம்.

அக்பருக்குப் பின் வந்த ஜஹாங்கீரும் ஔரங்கஜீப்புங்கூடப் பசுக்களைப் பாதுகாத்தார்கள். ஜஹாங்கீர் ஞாயிற்றுக்கிழமையிலும் வியாழக்கிழமையிலும் உயிர்க்கொலையையும் வேட்டையையும் தடுத்திருந்தார். ஞாயிற்றுக்கிழமை அக்பரின் பிறந்த தினம்; வியாழன் ஜஹாங்கீர் சிங்காதனம் ஏறிய நாள்.

பிற்காலத்தில் வந்த மொகலாய அரசர்களும் கோசம்ரக்ஷணத்துக்குரிய முயற்சிகளைச் செய்தார்கள். முகம்மத் ஷா காலத்தில் பசுக்கொலை நின்றிருந்தது; ஷா ஆலம் என்னும் மன்னரும் அதை நிறுத்தினர்.

ஆகவே, இந்தியாவை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள் பிராணிகளைப் பாதுகாக்கவேண்டுமென்றும் சிறப்பாகப் பசுவின் உயிர் மிகவும் மதிப்புடையதென்றும் உணர்த்தி வந்தார்களென்று தெரிகிறது. இந்தச் சரித்திர உண்மையை இந்தியாவிலுள்ள முஸ்லிம் மக்கள் உணர்ந்தார்களானல், இங்கே பசுக்களின் பாதுகாப்பு மிக எளிதிலே நிறைவேறிவிடும்.

## வேம்பும் அரசும்

**வேம்பத்தூர்ப் பிச்சுவையர் சிலேடைப் புலி என்ற பட்டம் பெற்றவர். ராமநாதபுரம் பாஸ்கர சேதுபதியவர்களின் ஆஸ்தான வித்துவான்.**

**அரசர் ஒரு சமயத்தில் புலவர் சபை ஒன்று கூட்டினர். வேம்பத்தூர்ப் புலவர் வரவில்லை. எல்லா ஆசனங்களிலும் வேறு புலவர்கள் அமர்ந்திருந்தார்கள். கடைசியில் வேம்பத்தூர்ப் புலவர் வந்தார். அப்போது சேதுபதி வேடிக்கையாக, "வேம்புக்கு இங்கே இடம் இல்லையே!" என்றார். புலவர் உடனே, "அரசுக்கருகில் இருக்கலாமே" என்று சொல்லிச் சேதுபதிக்கருகில் இருந்த ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.**

## சிறுகதை அல்ல—செய்தியே

**ஒரு வாலிபப் பெண், லண்டன் ரோடில் உள்ள ஒரு பாங்கிக்குச் சென்றுவிட்டு, கடற்கரைக்குப் போய்க்கொண்டிருந்தாள். ஒரு கார் திடீரென்று வந்தது. அதிலிருந்து ஒருவன் கீழே குதித்தான். பெண்ணின் கையிலிருந்த ஒரு பையை லபக்கென்று பறித்தான். மீண்டும் காரில் ஏறி அதை வேகமாய் ஓட்டிச் சென்றுவிட்டான். பையில் இருந்தது பாங்கியில் மாற்றிய பணம் அல்ல; மூன்று பூனைக்குட்டிகளின் சவங்களே! அவற்றை அவள் கடலில் எறியவே போனாள்.**

**—டைம்ஸ், (லண்டன்)**



# காந்தி

● **அக்கிரமமான உவமை:** காந்திஜியை ஒரு நிருபர் கேட்ட கேள்வி: "முஸ்லிம்களைச் சகோதரர்கள் போல் நடத்த வேண்டும் என்கிறீர்களே! பனியில் குளிரால் வழியிலே விறைத்துக் கிடந்த ஒரு பாம்பை ஒரு மனிதன் கண்டான். பரிதாபம் கொண்டான். பாம்புக்கு உஷ்ணமூட்ட விரும்பி, அதை எடுத்துத் தன் சட்டைப் பையில் போட்டுக்கொண்டான். பாம்புக்கு உஷ்ணம் பட்டு, விறைப்பு நீங்கியது. உடனே அது முதலில் செய்த காரியம் என்ன தெரியுமா? தன் விஷப் பற்களைத் தன் ரட்சகன் மீது பாய்ச்சி அவனைக் கொன்று விட்டது."

இதற்குக் காந்திஜியின் பதில் வருமாறு: "கோபத்தால் நிருபர் இந்த அக்கிரமமான உவமையைக் கூறுகிறார். எவ்வளவுதான் கேவலமான மனிதனையும் பாம்புக்கு ஒப்பிடுவதும், ஆகவே அவனுக்கு மனிதத் தன்மையற்ற குரூரம் இழைக்கலாம் என்று நியாயம் கூறுவதும் மகா கேவலமாகும். ஒரு மனிதன் நம்பிக்கைத் துரோகமாய் நடக்கக் கூடும் என்று பயந்து கொண்டு, அவனையும் அவன் குடும்பத்தாரையும் கொல்வது வெறும் கோழைத்தனம். பாம்பைப்பற்றி நிருபர் பிரஸ்தாபித்தாரே; இது பற்றி ஒரு விஷயம். பாம்புகளைப் பற்றிப் பொதுவாய் எல்லாரும் ஒரு தப்பபிப்பிராயம் வைத்திருக்கிறார்கள். அதைத் திருத்த விரும்புகிறேன். நூற்றில் எண்பது பாம்புகள் துளியும் தீங்கு செய்யாதவை. இயற்கையிலே அவை உபயோகமான சேவையும் புரிகின்றன."

—ஹரிஜன்

● **மனைவியா தாயா?**—இலங்கைச் சுற்றுப் பிரயாணத்தில் நிகழ்ந்த ஒரு தமாஷை ஸ்ரீ தேசாய் 'ஸிலோனில் காந்திஜியுடன்' என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார்:

கஸ்தூர் பாவைக் காந்திஜியின் தாய் என்று ஓரிடத்தில் சிலர் எண்ணிவிட்டார்கள். ஓர் ஆங்கிலச் சீமாட்டியும் இப்படியே நினைத்தாள். காந்திஜிக்கு இது வேடிக்கையாக இருந்தது. அவர் களிப்புடன், "ஆம்; அவள் என் தாய்தான்" என்றார். அடுத்த நாள் கூட்டத்தில் கஸ்தூர் பா வராதது கண்டு, "தாய் ஏன் வரவில்லை?" என்று ஜனங்கள் கேட்டார்கள். "நேற்றிரவு அவளைத் தாய் என்று ஒருவர் தவறாய் நினைத்துவிட்டார். ஆனால், இந்தத் தவறு நல்லதுதான். பரஸ்பர சம்மதத்தின் மேல், அவள் பல வருஷ காலமாகவே என் மனைவி ஸ்தானத்தை விட்டுவிட்டாள். நான் தாயில்லாக் குழந்தையாகிச்

# வாழ்வும் வாக்கும்

நினைப்பதைச் சொல்லுவார், சொல்லுவதைச் செய்கையில் காட்டுவார் காந்திஜி. அவர் வாழ்வு நமக்கு வழிகாட்டி. அவர் சொல் நமக்கு அமுதம்.

சுமார் நாற்பது வருஷமாகி விட்டது. முப்பது வருஷமாக அவள் என் தாயின் ஸ்தானத்தை வகிக்கிருள். அவள் என் தாயும் தோழியும் தாதியும் சமையல்காரியும் துணி துவைப்பவளுமாயிருந்துவருகிருள். எனக்கு நடக்கும் கௌரவங்களில் பங்கு கொள்ள அதிகாலையிலே அவளும் வந்து விடுவாளாஞல், என் துணி துவைக்கவோ என் உணவு முதலியன தயாரிக்கவோ யாரும் இருக்க மாட்டார்கள். ஆகையால் நாங்கள் எங்களுக்குள் யுக்தமானதோர் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிரேும். அதாவது, கௌரவமெல்லாம் என்னைச் சேர்ந்தது; மாடுபோல் உழைப்பதெல்லாம் அவளைச் சேர்ந்தது. நீங்கள் அவளைப் பற்றிச் சொன்ன அன்பு மொழிகளையெல்லாம் என் சகாக்கள் அவளுக்குத் தெரிவிப்பார்கள் என்று மட்டில் உங்களுக்கு நான் உறுதி சொல்லுகிறேன்."

● **'எங்கள் கடவுள்'**: 1927-ஆம் ஞு நவம்பர் மாதத்தில் மகாத்மா காந்தி இலங்கைத் தேயிலைத் தோட்டங்களுக்கு விஜயம் செய்தார். சமுத்திரம் போல் தொழிலாளர்கள் வந்து குவிந்தார்கள். மகாத்மாவின் தரிசனத்துக்காக அவர்கள் முட்டி மோதிக்கொண்டு சிரமப்பட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு கோஷ்டி தொழிலாளருடன், தாம் செய்த ஒரு சம்பாஷணையை ஸ்ரீ மகாதேவ தேசாய் 'விலோனில் காந்தியுடன்' என்ற தமது புத்தகத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"நீங்கள் ஏன் இங்கே வந்திருக்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

இது என்ன மூடத்தனமான கேள்வி என்று ஒரு ஸ்திரீ கோபம் கொண்டாள். அவள் ஒரு பதில் கேள்வி கேட்டாள்: "நீர் ஏன் இங்கே வந்திருக்கிறீர்? அதைச் சொல்லும்" என்ருள்.

இதற்குள் இன்னெருவன் குறுக்கிட்டான்: "உமக்குத் தெரியாதா? நாங்கள் எங்கள் கடவுளைத் தரிசிக்கவே வந்திருக்கிரேும்."

"உங்கள் கடவுளையா! அவரை உங்களுக்குத் தெரியுமா?"

"நன்ருய்த் தெரியும்; காந்திதாம்."

"அவரது பணமுடிப்புக்கு நீ ஏதாவது பணம் கொடுத்தாயா?"

"ஆஹா! எனக்கு ஒரு நாள் கூலியாகக் கிடைத்த 45 சதத்தையும் கொடுத்துவிட்டேன்."

"அந்தப் பணத்தை அவர் எப்படி உபயோகிக்கப் போகிருர் என்று உனக்குத் தெரியுமா?"

"தெரியாது. ஏதாவது நல்ல காரியத்தைத்தான் உத்தேசித்திருப்பார்."

அரசியல்வாதி கதை சொல்லுகிறன். கவிஞனைப்போல் வர்ணித்துச் சொல்லுகிறன். என்ன கதை? பொருள் புரிகிறதா?

# இரட்டைக் குழந்தைகள்

எஸ்கே

நண்பனுக்கு ஒரு சிகரெட் கொடுத்துவிட்டு, என் சுருட்டைப் பற்ற வைத்தேன். நடு ராத்திரி நேரம். பகல் முழுவதும் தாரை தாரையாய்க் கொட்டிய மழை மாலையில்தான் நின்றது. வெளியே எங்கள் சாளரக் கண்ணுடிக் கதவு உடைந்த ஓட்டையின் வழியே புகுந்தது. எங்களைச் சுற்றிலும் எல்லோரும் தூங்கிக்கொண் டிருந்தார்கள். தூரத்திலே கடலலைகளின் பேரிரைச்சலையும், ரெயில்வேப் பாலத்தடியில் உள்ள பிச்சைக்காரன் குழலூதும் சப்தத்தையும் தவிர, மற்றப்படி ஒரே நிச்சப்தந்தான் நிலவியது.

நாங்கள் இருவரும் நெடு நேரம் வரையில் மௌனமாக உட்கார்ந்திருந்தோம். இப்படி அமைதி சூழ்ந்த நள்ளிரவு நேரத்திலே விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தால், யாருக்கும் வேதாந்த சிந்தனைதான் உண்டாகும் என்பது உங்களுக்குத் தெரியாதா? என் நண்பனே முதலில் பேசத் தொடங்கினன்.

"கவிஞரே, இங்கே பாரும். உமக்கு ஒரு கதை சொல்லட்டுமா? உண்மைக் கதை; காதல் கதை."

"காதல் கதையா! அரசியல் வாதிக்குக் காதல் கதை என்ன தெரியும்? புதுமையா யிருக்கிறதே! சொல்லு பார்ப்போம். கேட்கிறேன்"

"முன்னெரு காலத்தில் நவீன நாகரிக நகரங்களுக்கெல்லாம் வெகு தூரத்துக்கு அப்பால் ஏழை நாட்டுப்புறக் குடிசை ஒன்று இருந்தது. அதிலே ஓர் அழகான கன்னிப் பெண் வசித்தாள். அவளுடைய பெற்றோர் செல்வம் நிறைந்தவர்கள். அவளோ அழகும் குணமும் மிகுந்தவள். ஆகையால், கிராமத்து மக்கள் அனைவரும் அவளை ராஜாத்தி என்றே கொண்டாடினர்கள். அறியாமையின் ஆனந்தத்திலே அவள் வாழ்ந்தாள். தந்தையின் பண்ணைக்கும் அதற்கடுத்த மலைகளுக்கும் அப்பால் என்ன இருக்கிறதென்றே அவள் அறியாள். தங்கள் கிராமத்தினூடே செல்லும் சாலை எங்கே போகிறது என்று அவள் யோசித்ததே யில்லை. எல்லா நாட்டுப்புற வாசிகளையும் போலவே அவளும் நகர நாகரிகத்தையும் நகர மக்களையும் கண்டாலே நடுங்கி வெறுத்தாள்.

"ஆண்டுகள் சென்றன. நம் குடியானவக் கன்னிப் பெண், வளர்ந்து பருவ மங்கையானுள். கிராமம் முழுவதும் அவளைப் பற்றியே பேச்சு எழுந்தது. தூரத்து நகரங்களிலிருந்தெல்லாம் பல துரைமார்கள் வந்து அவள் பேச்சைக் கேட்டார்கள். துணிச்சலுள்ள பல வாலிபர் உல்லாசமாய்ப் பொழுது கழிக்க வருவது போல் பாசாங்கு செய்து

காப்பிரைட்: ஸவுண்ட் (ஆங்கிலம்: நவம்பர், டிசம்பர் '47), ஸர் பி. எம். ரோட், பம்பாய்.

கொண்டு, அவளைக் காணக் கூடினார்கள். இப்படி வந்த வாலிபர்களுக்குள்ளே அழகும் தந்திரமும் மிகுந்த ஒரு வாலிபனும் இருந்தான். அவன் நகரத்து நாகரிகக் குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவன். துணிச்சலான இந்த வாலிபன் பற்பல நாடுகளுக்குச் சென்றவனும்; இவன் கதை ஒரு பெருங் கதையாம்.

"வாலிபன் கிராமத்துக்கு வந்தான். குடியானவனின் மகளைக் காண விரும்பினான். இவனை அவளும் தங்கை போல் வரவேற்றாள். அவளை இவன் கண்ட கணத்திலே அவளது அற்புத எழிலிலே அப்படியே சொக்கிப் போய்விட்டான். இவன் எத்தனையோ காதல் மொழிகளைச் சொல்லி அவளிடம் பசப்பிப் பார்த்தான். மங்கையின் உறுதிக்கு முன்னே அவை பலிக்கவில்லை. நகரத்து அந்நியனை அவள் அடியோடு வெறுத்தாள். என்றாலும், அவன் விடவில்லை. அடிக்கடி அவள் வீட்டுக்கு அவன் வந்துகொண்டேயிருந்தான். அப்படி வரும் ஒவ்வொரு தடவையும் அவன் பட்டணத்திலிருந்து புதிது புதிதாக எதாவது சாமானைக் கொண்டு வந்து தருவான்."

இதற்குள்ளே என் நண்பனின் சிகரெட் காலியாகி விட்டது. ஆகவே, அவனுக்கு மற்றொரு சிகரெட் கொடுத்தேன். நானோ கதையின் சுவாரஸ்யத்திலே ஆழ்ந்தவனாய் என் மரச் சுங்கானைப் பலமாக ஓர் இழுப்பு இழுத்தேன். அவன் மிக்க நிதானமாகத் தன் கதையைத் தொடர்ந்தான்.

"கடைசியாக, அந்தப் பட்டணத்து வாலிபன் இந்தக் கிராமத்துப் பெண்ணை மணந்துவிட்டான். அது எப்படி என்பதுபற்றி வாதப் பிரதிவாதங்கள் பலமாகிவிட்டன. ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். பெண் வீட்டாருக்கு இந்த விஷயம் அடியோடு பிடிக்கவில்லை. அவர்கள் வெறுப்படைந்தார்கள். என்றாலும், பெண்ணும் பிள்ளையும் தம்பதிகளாகிவிட்டார்கள். அதை எல்லாரும் ஒப்புக்கொண்டு தீரவேண்டியதாயிற்று. இப்போது அந்த நகரத்து வாலிபன் தன் காதல் கிழத்திக்கு நாகரிகம் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினான். அவளுக்குப் பாடமெல்லாம் போதிக்க முயன்றான். நகரத்து ஆடையலங்காரங்களையெல்லாம் அவளுக்குப் பரிசுகளாகக் கொடுத்தான். நவீன நாகரிக வாழ்க்கை முறைகளையெல்லாம் அவளுக்குக் கற்றுக் கொடுத்தான்.

"கிராமத்துக் குடியானவர்களோ மூட நம்பிக்கை நிறைந்த வெகுளிகள். பட்டணத்து வாலிபனின் கெட்டிக்காரத்தனத்துக்கு எதிரே அவர்களால் ஒன்றும் சாயவில்லை. பட்டணத்தான் மெல்ல மெல்லத் தன் மாமனின் பணப் பெட்டியிலே கை வைத்துவிட்டான். தன் குடும்பத்தை நாகரிகப் படுத்துவதாகப் பாசாங்கு செய்துகொண்டு குடும்பத்தின் செல்வத்தையே பட்டணத்தான் பறித்துக்கொண்டு போவதை, அந்த ஏழைக் குடியானவன் அறியவில்லை. உண்மையிலே குடும்பம் ஓட்டாண்டியாகிவிட்டது.

"பல ஆண்டுகள் கழிந்தன. தம்பதிகள் மிக்க சிறப்போடு வாழ்ந்தார்களாம். இதற்கு இடையிலே கிராமத்துக்கட்டழகி கர்ப்பிணியாகிவிட்டாள். அவள் வயிறு பெருத்தது. இது மிகச் சிக்கலான கர்ப்பம் என்று ஒரு வதந்தி கிளம்பியது. பிரசவம் எப்படி முடியப் போகிறதோ என்று எல்லாரும் ஆவலோடு கவனிக்கத் தொடங்கினார்கள். கடைசியிலே, ஒரு நாள் போது

விடிந்ததும் பெண் பிரசவித்துவிட்டாள். பரம வேதனைக்குப் பிறகு பிரசவம் நடந்தது. அதில் ஆச்சரியம் என்னவென்றால், பிறந்தவை இரட்டைக் குழந்தைகள். அன்று மாலையே பட்டணத்து வாலிபன் ஓடி மறைந்து விட்டான் என்று ஜனங்களெல்லாம் பேசிக் கொண்டார்கள்!''

கதை திடுதிப்பென்று முடிந்தது போலத் தோன்றியது. நண்பன் சில நிமிஷ நேரம் மௌனமாய் உட்கார்ந்திருந்தான். பின்பு, ஒரு பெருமூச்சு விட்டான். அதன் பிறகு, தனக்கே உரிய அழுத்தமான குரலில், கேலியும் துக்கமும் தொனிக்க, மெல்ல மெல்ல அவன் சொன்னான்:

"அந்த இரட்டைக் குழந்தைகள் பிறந்த தேதி என்ன தெரியுமோ? அதுதான் ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி.''

நான் என்ன சொல்லப் போகிறேனே என்று எதிர்பார்த்தவனாய் நண்பன் புன்சிரிப்புப் பூத்தான். என் வழக்கமான முறையில், மெதுவாக நான் பேசத் தொடங்கினேன்:

"இங்கே பார், நண்பா. உன்னை வெறும் அரசியல்வாதி என்று ஜனங்கள் சொல்லுகிறார்களே? என்ன முட்டாள்தனம்! நீ ஒரு பெரிய கவிஞனுமாக அல்லவா இருக்கிறாய்!''

## ஆடையலங்காரி

எங்கள் காலேஜில் ஒரு பெண்மணி புரொபஸராக இருந்தாள்.

ஆங்கிலத்தில் வெகு ஜோராய்ப் பேசுவாள். பாடம் சொல்வதில் கெட்டிக்காரி. வகுப்பு நேரங் கழித்து மாணவர் வந்தால் வெளியே நிறுத்திவிடுவாள். அவள் வகுப்பில் பையன்கள் வாலைச் சுருட்டி வைத்துக்கொண்டு பாடங் கேட்பார்கள்.

அவளிடமுள்ள ஒரு பலவீனத்தை மெதுவாகப் பையன்கள் கண்டுபிடித்தார்கள். அவளுக்கு விவாகமாகவில்லை; சில சமயம் விசித்திரமான அலங்காரங்கள் செய்துகொள்வாள். கஸ்தூரி நிறமுள்ள அந்தப் பெண்மணி கறுப்புப் பட்டுப் புடைவைகள் உடுத்துவாள். கழுத்தில் மணிமாலை அணிந்து காலேஜுக்கு ஒரு நாள் வந்தாள். கறுப்புப் பட்டில் கோத்த நாவற்பழங்கள் போன்ற மணிகள்! அன்று அவள் வெளியே நிறுத்தி வைத்த மாணவர்கள், அவளுக்குக் கேட்கக்கூடிய குரலில், "பச்சைமணி பவளமணி வாங்கலையோ ஆயா!'' என்று கூவினார்கள்.

புரொபசர் குபுக்கென்று சிரித்தாள். மாணவர்கள் வகுப்பில் நுழைந்தனர்.

—புரொபஸர் மாடே (வஸந்த்)

## உதவிக்கு வந்த கீரி

கிழக்கிந்தியத் தீவுகளில், தோட்டத்துக் கரும்பை எலி அழித்தது. எலியைத் தொலைக்க, கீரியைக் கொண்டுவந்து விட்டார்கள். கீரி முதலில் எலியை ஒழித்தது. அப்புறம் முறையே குருவி, கோழி, ஆட்டுக்குட்டி, கன்று எல்லாவற்றையும் ஒழித்தது. கடைசியில் கரும்பையே ஒழிக்கத் தொடங்கிவிட்டது.

—ஸ்டிராண்டு

ஞாபக மறதியால் எத்தனையோ தொல்லைகள் விளைகின்றன. ஆனாலும், இந்த அநுபவம் சற்று விசித்திரமாய்த்தான் இருக்கிறது.

# மறதி விபரீதம்

★

எந்த டாக்டரை வேண்டுமானாலும் கேளுங்கள். ஞாபகமறதி என்பது ஒரு நோய் அல்ல என்றுதான் அவர்கள் சொல்லுவார்கள். ஆனால், வாழ்க்கையிலே எந்தக் கொடிய நோயையும் விடப் பெருங் கேட்டை விளைவிப்பது ஞாபகமறதியே.

இந்த ஞாபகமறதி என்னவோ எனக்குக் கொஞ்சம் அதிகந்தான். இந்த விஷயத்தில் என்னைவிட மேல் என்கிறாள் என் மனைவி. அநுபவத்தைப் பார்க்கும் போது, அவள் ஒன்றும் இதில் எனக்குச் சளைத்தவள் அல்ல என்றே தெரிகிறது. ஞாபகமறதி விஷயத்தில் என்னுடன் சரிசமானமாக அவள் போட்டியிடுகிறாள். ஞாபகமறதியில்தான் நமக்கு என்ன ஆனந்தம்! நிஷ்கவலையாய்ப் பல விஷயங்களையும் மறப்பது ஆனந்தமே அல்லவா?

இரண்டு மணி நேரத்துக்குள்ளே நடந்தது ஒரு சம்பவம். அதைப் பார்த்தால் தெரியும், இந்த ஞாபகமறதியால் எவ்வளவு தொல்லை நேரிடுகிறது என்று.

திருப்பதியில் நடந்த ஒரு கல்யாணத்துக்கு நாங்கள் போகவேண்டியிருந்தது. என் குடும்பத்தோடு செண்டிரல் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கேதான் உபத்திரவமும் தொடங்கியது.

தெர்மாஸ் பிளாஸ்கை எடுத்து என் சின்ன மகன் நீட்டிய போதுதான் எங்களுக்கு ஒரு விஷயம் ஞாபகம் வந்தது; அது வரையில் வரவில்லை. நாங்கள் எங்கள் ஒரு வயதுச் சின்னக் குழந்தையை, காலி வீட்டுக்குள்ளே போட்டுப் பூட்டிவைத்து வந்துவிட்டோம். குழந்தைக்குப் புகட்ட வேண்டிய சூடான பாலைத் தெர்மாஸ் பிளாஸ்கில் ஊற்றிப் பத்திரமாகக் கொண்டுவந்து விட்டோம்; ஆனால் குழந்தையைத்தான் கொண்டுவரவில்லை!

எங்களுக்கு ஏற்பட்ட கலவரத்தைக் கேட்க வேண்டுமா? என் மனைவி விம்மியழ ஆரம்பித்துவிட்டாள். குழந்தையை வீட்டிலே விட்டுப் பத்திரமாய்க் கதவைப் பூட்டி வந்ததில், எனக்குமே திகில் உண்டாகிவிட்டது.

இன்னொரு விஷயம் இதைவிட மோசமாய்ப் போயிற்று. வீட்டுச் சாவியைக் காணோம். வீட்டைப் பூட்டிவந்தவள் என் மனைவிதான். ஆனால், அவளைச் சொல்லிப் பயனில்லை. சாவியை ஒவ்வொரு பெட்டியிலும் அவள் தேடினாள். வீட்டுச் சாவி அகப்படவேயில்லை.

"எந்தப் பூட்டைப் போட்டுப் பூட்டினாய்?" என்று நான் கேட்டேன்.

காப்பிரைட்: பிக்சர் போஸ்ட் (ஆங்கிலம்; 15—12—'47),
75, தியாகராய ரோடு, டி. நகர், சென்னை.

"நம் கலியாணத்தின் போது எங்கள் அப்பா எனக்கு ஒருவில் பூட்டுக் கொடுத்தாரே; அதைப் போட்டுப் பூட்டினேன்" என்று மனைவி சொன்னாள்.

ஆமாம். எனக்கு ஞாபகம் வருகிறது. வீட்டைப் பூட்ட அவளிடம் நான் கொடுத்தது அந்தப் பூட்டைத்தான். சாவியை என் ஜேபியில் தேடினேன். பயனில்லை. தலையைச் சொரிந்து கொண்டேன். பூட்டு வில்பூட்டு. அதை மாட்டி வீட்டைப் பூட்டுமுன்பு, சாவியைக் கையிலே எடுத்து வைத்துக் கொள்ள மறந்துவிட்டேன். விஷயம் என்னவென்றால், குழந்தை, சாவி இரண்டையுமே வீட்டுக்குள்ளே பத்திரமாய் வைத்து, வீட்டைப் பூட்டி வந்துவிட்டோம்.

உடனே ஒரு டாக்ஸிகாரரை அமர்த்திக் கொண்டு, வீட்டுக்கு ஓடினேன். வழியிலே பூட்டு ரிபேர் செய்யும் ஓர் ஆளையும் அழைத்துக் கொண்டு, வீடுபோய்ச் சேர்ந்தேன். பூட்டை உடைத்தோம். உள்ளே புகுந்தோம். தன் ஆசைத் தாயும் தகப்பனும் தனக்கு இழைத்த தீங்கு எதையும் அறியாமல், குழந்தை நிஷ்களங்கமாகத் தொட்டிலிலே படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது. குழந்தையை எடுத்துக் கொண்டேன். வீட்டை மற்றொரு பூட்டுப் போட்டுப் பூட்டினேன். வில் பூட்டு அல்ல; வேறு பூட்டு. அதை ஜாக்கிரதையாய்க் கவனித்துக்கொண்டேன். ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தேன்.

குழந்தை வந்து சேர்ந்ததும் குடும்பத்தார் அனைவருக்கும் சந்தோஷம் பொங்கியது. இத்தனைக்கும் எங்கள் குறைதான் - சனியன் பிடித்த எங்கள் ஞாபக மறதிதான் காரணம் என்பதையே நாங்கள் மறந்தோம்.

இந்தக் கூத்தில் நெடு நேரம் வீணாய்ப் போயிற்று. எங்கள் எக்ஸ்பிரஸ் வண்டி தப்பிவிட்டது. ஆமைபோல் ஆடி யாடிக்கொண்டு போகும் அடுத்த பாஸஞ்சர் வண்டிக்கு நாங்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று.

யாருமில்லாத காலி வீட்டில் கிடந்த குழந்தையை மீட்டுக் கொண்டு வந்த எங்கள் சந்தோஷம் தீர்வதற்குள், போர்ட்டர் கூலிக்குக் கை ஏந்தினான்.

என் மணிபர்ஸைத் தேடினேன். அதைக் காணோம். அந்த இழவை எங்கே வைத்தேனோ! அது ஞாபகம் இல்லை. ஸ்டேஷனுக்கும் வீட்டுக்கும் ஓடிய ஓட்டத்தில், அதை எங்கேயோ வைத்துவிட்டேன்.

அவசர சந்தர்ப்பங்களுக்கு இருக்கட்டுமென்று என் பெட்டியில் தனியே வைத்திருந்த பணத்தை எடுத்துப் போர்ட்டருக்கு ஒருவாறு கூலி கொடுத்து விட்டேன். ஆனால், காணமற்போன அந்த மணிபர்ஸ் விஷயம் என் மனசை உறுத்திக் கொண்டே யிருந்தது. கலியாணத்துக்குப் போய்த் திரும்பிவரும் அளவும் அது அப்படி உறுத்திக் கொண்டிருந்தது.

மணிபர்ஸ் அகப்பட்டு விட்டது. எங்கே கிடந்தது என்று நினைக்கிறீர்கள்? குழந்தையின் தொட்டில் இல்லையா, அதிலே படுத்துச் சுகமாகத் தூங்கிக்கொண் டிருந்தது என் மணிபர்ஸ். குழந்தையை எடுத்துக் கொண்டபோது இந்த மணிபர்ஸைக் குழந்தைக்குப் பதிலாகத் தொட்டிலில் விட்டுவிட்டு வந்திருக்கிறேன்.

ஞாபகமறதியால் விளையும் விளைவுகள் இப்படி மங்களமாக முடிந்தால் பரவாயில்லை. ஆனால், அது எப்போதும் இப்படி முடிவதில்லையே!



# குழந்தைகள் குறும்பு

**கு**ழந்தைகளின் சில ரசமான பேச்சு, செயல்களை இங்கே தந்திருக்கிறோம். இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்கப்படாதவை திருப்பி அனுப்பப் படமாட்டா. அவை சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது. —ஆசிரியர்.

குழந்தை கோபுவை முதல் முதலாக விஜயதசமி யன்று பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார்கள்.

மாலையில் அவன் வீட்டுக்குத் திரும்பியதும் தாய் கேட்டாள்: "கோபுக் கண்ணு, இன்னிக்கி வாத்தியார் உனக்கு என்ன சொல்லிக் கொடுத்தார்?"

குழந்தை மிக்க அசிரத்தையாக, "ஒண்ணுமே சொல்லிக் கொடுக்கக் காணும். நாளைக்குந்தான் பள்ளிக்கூடத்துக்குப் போகணும் போலே இருக்கு, அம்மா" என்றான்.

* *

என் குழந்தை மகள் ஒரு நாள் நகம் கடித்துக் கொண்டிருந்தாள். இந்தக் கெட்ட பழக்கத்தை நான் திருத்த விரும்பினேன். "இதோ பார், பாப்பா. இப்படி நகம் கடிக்கக் கூடாது. உன் அண்ணன் கடிப்பதே யில்லை; அம்மா கடிப்பதில்லை; நான் கடிப்பதில்லை. உன்னைத் தவிர வேறே யாராவது நம் வீட்டிலே நகம் கடிக்கிறார்களா?" என்றேன்.

ஆறு வயது நிறையாத என் மகள் சொன்ன பதிலாவது: "எனக்கிருக்கிற கவலை உங்களுக்கெல்லாம் இல்லை. அதனால்தான் நீங்களெல்லாம் நகம் கடிக்கவில்லை."

—ஒரு தந்தை

* *



சிறுவனிடம் சாமியார் இரண்டு மாம்பழம் கொடுத்தார். ஒன்று பெரிய மாம்பழம்; இன்னொன்று சிறிய மாம்பழம்.

"இதோ பார், இந்த இரண்டு பழங்களில் ஒன்றை நீ அடுத்த வீட்டுப் பையனுக்குக் கொண்டுபோய்க் கொடுக்க வேண்டும்; மற்றதை நீ சாப்பிடலாம். இப்போது நீ எதை அடுத்த

வீட்டுப் பையனுக்குக் கொடுப்பாய்? அதைச் சொல் பார்க்கலாம்'' என்றார் சாமியார்.

சிறுவன் சிறிது யோசித்தான். பிறகு, ''யாருக்கு? மேலண்டை வீட்டிலே இருக்கிற குண்டனுக்கா? கீழண்டை வீட்டிலே இருக்கிற சோனிக்கா?'' என்று சந்தேகம் கேட்டான்!

* *

கூடத்திலே தாயார் ஏதோ வேலை செய்துகொண்டிருக்கையில், சிறுவன் படுக்கை யறையிலிருந்து வெளியே வந்துகொண்டிருந்தான். அவன் கோலத்தைக் கண்டு தாய் பிரமித்துப் போய்விட்டாள். முதுகிலே ஒரு தலையணையையும் மார்பிலே ஒரு தலையணையையும் அவன் கட்டிக்கொண்டிருந்தான்.

''இதென்னடா வேஷம்?'' என்று கேட்டாள் தாய்.

''ரேழி ரூமிலே அப்பா இருக்கார். அவரைப் பார்க்கப் போறேன்'' என்றான் பையன்.

''அதுக்கு இந்த அலங்காரம் எதுக்கு?'' என்றாள் தாய்.

''அப்பாகிட்ட என் பரீட்சை மார்க் சொல்லப் போறேன். அதுக்குத்தான்'' என்றான் சிறுவன்.

—கஸ்தூரி, சேலம்.

* *





பாட்டு வாத்தியார் தினந்தோறும் வந்து என் மகளுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுப்பார். அப்போதெல்லாம் அவளுடைய அண்ணன் கண்ணனும் கூடவே இருந்து, பாட்டைக் கேட்டுக்கொண்டிருப்பான்.

வீட்டு ஏணிப் படியின்மேல் ஒரு நாள் கண்ணன் ஏறி உட்கார்ந்து ஏதோ பாடிக்கொண்டிருந்தான்.

''மேலே ஏறிக்கொண்டு என்னடா பாட்டு வேண்டிக்கிடக்கு?'' என்று நான் அதட்டினேன்.

''அங்கச்சியின் பாட்டு வாத்தியாரைக் கேளு; தெரியும்'' என்றான் சிறுவன்.

''அவரை என்னடா கேள்வி?'' என்றேன் நான்.

''அவர்தாம் சொன்னார், இந்தப் பாட்டைப் பாடறப்போ மேலேயே சஞ்சரிக்கணும்னு'' என்றான் சிறுவன்!

—எஸ். விஜயராகவன், மாடுங்கா.

* *

குழந்தை சோமுவைத் தொட்டிலிலே போட்டுத் தாலாட்டுப் பாடி ஆட்டினாள் தாய்.

''அம்மா, கொஞ்சம் பாடாமெ ஆட்டேன்'' என்றான் குழந்தை.

# கருடனும் அஹிம்ஸையும்

ஹர்ஷன்

மகாத்மா காந்தியின் அஹிம்சா தர்மம் ஏதோ புதிய தத்துவம் அல்ல. ஆயிரம் வருஷங்களுக்கு முந்தி வாழ்ந்த ஹர்ஷ சக்கரவர்த்தி இயற்றியுள்ள 'நாகானந்தம்' என்ற அரிய சம்ஸ்கிருத நாடகத்திலே வரும் இந்தக் காட்சியைப் பாருங்கள். அஹிம்சா தர்மத்தை மேற்கொண்ட தியாகி முன்பு, கருடனே பணிந்துவிடுவதைக் காணலாம்.

[வித்யாதர ராஜகுமாரனான ஜீமூதவாகனனுக்கும், சித்த ராஜகுமாரியான மலயவதிக்கும் திருமணம் நடந்து சில நாட்களே ஆயின. ஒரு நாள் ஜீமூதவாகனனும் அவனுடைய புது மைத்துனன் மித்ராவசுவும் கடற்கரையில் உலாவிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே ஏராளமாக எலும்புகள் மலைபோல் குவிந்து கிடப்பதை ஜீமூதவாகனன் காண்கிறான். அவற்றை அவன் மலைச்சிகரத்தில் உள்ள மேகங்கள் என்று எண்ணி மயங்குகிறான்.]

**ஜீமூதவாகனன்:** மித்ராவசு, இங்கே பார். சரத்காலம் வந்ததால் சோகை பிடித்த மேகபடலங்கள் இந்த மலய மலைச்சிகரங்களில் திரண்டிருப்பதைப் பார். இது இமயமலைச் சிகரத்தின் அழகைப்போல் இருக்கிறதல்லவா?

**மித்ராவசு:** அரசகுமாரா, இவை மலயமலையின் சிகரங்கள் அல்ல. நாகங்களின் எலும்புக் குவியல்களாகும்.

**ஜீமூத:** பாவம்! இவை ஏன் இப்படி ஒரே கூட்டமாய் மாண்டன?

**மித்ரா:** இல்லை, அரசகுமாரா! இவை ஒரே கூட்டமாய் மாளவில்லை. கருடன் தம் இறக்கையைப் பலமாய் வீசுவான். அதனால் உண்டாகும் காற்று, சமுத்திரஜலத்தை விலக்கிவிடும். பாதாளத்திலிருக்கும் பாம்புகளை உடனே எடுத்துத் தன் இஷ்டம்போல் கருடன் தின்பான். இதனால் நாகவம்சமே அழிந்துவிடும் என்று நாகராஜன் பயந்தான். அதன்மேல் அவன் கருடனிடம் சொன்னான்...

**ஜீமூத:** என்ன சொல்லியிருப்பான்? 'என்னைத் தின்றுவிடும்' என்றுதானே. இல்லையா?

**மித்ரா:** இல்லை, இல்லை.

**ஜீமூத:** பின்னே என்ன?

**மித்ரா:** அவன் சொன்னது இதுதான்: 'கருடா, நீர் வரும்போது உண்டாகும் அதிர்ச்சியால், குட்டிப் பாம்புகள் செத்துவிடுகின்றன. பெண் பாம்புகளின் கர்ப்பமும் அழிந்துவிடுகிறது. இப்படி எங்கள் நாக வம்சமே அழிந்தால் உமது காரியந்தான் கெடும். ஆகையால் நீர் கடற்கரையிலேயே இரும். நான் நாள்தோறும் உமது உணவுக்காக ஒவ்வொரு பாம்பை உம்மிடம் அனுப்புகிறேன்' என்றான். கருடனும் அதற்குச் சம்மதித்தான். இந்த ஒப்பந்தப்படி நாள்தோறும் கருடன் தின்ற பாம்புகளின் எலும்புகளே இப்படிக் குவிந்து கிடக்கின்றன.

**ஜீமூத:** ஐயோ! நாகராஜன் பாம்புகளை இப்படித்தானா காப்பாற்றினார்? அவர் இரண்டாயிரம் நாக்குகளைப் படைத்திருக்கிறாரே! அவற்றில் ஒரு நாக்குக்கூட, 'ஒரே

ஒரு பாம்பைக் காக்க இன்று நான் என் உடலையே பாம்புகளின் சத்ருவுக்குத் தத்தம் செய்கிறேன்' என்று சொல்லவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்! எல்லா விதமான அசுத்தத்துக்கும் இருப்பிடம் இந்த உடல். இதை எப்படிக் காத்தபோதிலும், இதற்குச் சிறிதும் நன்றி இல்லை. அழிவதே இதன் இயல்பு. இப்படிப்பட்ட உடலுக்காக, அறிவிலிகள் பாவங்களைக் கணக்கில்லாமல் செய்கிறார்கள். பாவம்! பாம்புகளுக்கு இது தீராத் துன்பம் அல்லவா? (தனக்குள்) என் உடலைக் கொடுத்து ஒரு பாம்பையாவது என்னால் காக்க முடியுமா?

(வேலையாள் வருகிறான்)

**வேலையாள்:** (மித்ராவசுவிடம்) அப்பா தங்களை அழைக்கிறார்.

**மித்ராவசு:** இதோ வந்துவிட்டேன். (வேலையாளுடன் போகிறான்.)

(இன்று சங்கசூடன் என்ற பாம்பின் முறை. அவன் வருகிறான். அவனுடைய கிழத் தாய் அவனைப் பின்தொடர்ந்து வருகிறாள். நாகராஜனின் வேலைக்காரன் இரண்டு சிவப்புத் துணிகளுடன் வருகிறான்.)

**கிழவி:** (கண்ணீர் வடித்துக்கொண்டு) ஐயோ! என் மகனே! உன்னைக் கருடன் கொல்வதை என் கண்ணால் பார்க்கவேண்டுமா? உன் மதிவதனமில்லாமல் பாதாளமே இருள் சூழ்ந்துவிடப் போகிறதே!

**சங்கசூடன்:** அம்மா, அழாதே. இதைக் கவனி! பிறந்தவுடன் எந்த ஜீவனையும் செவிலிபோல் அழிவுதான் முதலில் ஏந்திக்கொள்கிறது. பிறகே அந்தக் குழந்தையைத் தாய் எடுத்து அணைத்துக்கொள்கிறாள். ஆகவே இதில் வருத்தம் எதற்கு?

**கிழவி:** குழந்தையே, சற்று நில். உன் முகத்தைச் சிறிது பார்க்கிறேன்.

**வேலைக்காரன்:** சங்கசூடா, நட. பிள்ளையின் பேரில் உள்ள பாசத்தால், ராஜகாரியத்தை அவள் அறியவில்லை.

**சங்கசூடன்:** இதோ வந்துவிட்டேன்.

(இவர்களின் பேச்சைக் கேட்டவாறு ஜீமூதவாகனன் நிற்கிறான்.)

**வேலையாள்:** சங்கசூடா, இதோ சிவப்புத் துணி. இதைக் கட்டிக்கொண்டு இந்தக் கல்லின்மேல் நீ நிற்க வேண்டும். உன் துணியைக் கண்டு, கருடன் உன்னை அறிந்து எடுத்துக்கொள்வான். நான் போகிறேன். கருடன் வரும் வேளை வந்துவிட்டது. (போகிறான்.)

**ஜீமூத:** பந்துக்கள் இவனைக் கைவிட்டு விட்டார்கள். இவன் உயிரும் போகும் நிலைமையில் இருக்கிறது. இவனையாவது காக்காவிட்டால், என் உடலினால் என்ன பயன்? இவர்களுக்கு அருகே செல்கிறேன்.

**சங்கசூடன்:** அம்மா, மனசைத் தேற்றிக்கொள். வருந்தாதே.

**கிழவி:** குழந்தையே, எப்படியடா தேற்றிக்கொள்வேன்? பாதாள லோக அதிபனே உன்னைக் கைவிட்டு விட்டான். பின்னே யார் தாம் உன்னைக் காக்கப் போகிறார்?

**ஜீமூத:** இதோ நான் காப்பாற்றுகிறேன். (அவர்களின் எதிரில் செல்லுகிறான்.)

**கிழவி:** (துணியால் பிள்ளையை மூடிக்கொண்டு) கருடா, என்னைக் கொல். நாகராஜன் என்னைத்தான் உனக்கு ஆகாரமாக அனுப்பியிருக்கிறார்.

**ஜீமூத:** ஆஹா! பிள்ளையின்மேல் என்ன அன்பு? தாயே, பயப்படாதே. நான் கருடன் அல்ல. உன் பிள்ளையைக் காப்பதற்கே வந்திருக்கிறேன்.

**கிழவி:** (ஆனந்தம் பூரித்தவளாக) மகனே, நீ நீழி வாழ வேண்டும். மீண்டும் மீண்டும் நீ இந்த நல்ல வார்த்தையைச் சொல்லு.

**ஜீமூத:** தாயே, அந்தச் சிவப்புத் துணியை என்னிடம் கொடு. நான் அதைப் போர்த்துக்கொண்டு நிற்கிறேன். கருடன் என்னையே பாம்பென்று எண்ணித் தின்பான்.

**கிழவி:** (காதை மூடிக்கொண்டு) அநியாயம்! முடியாது! நீயும் சங்கசூடனைப்போல் என் மகன்தான். உண்மையில் அவனைவிட மேலான மகன் நீ என்றே சொல்ல வேண்டும். அவனுக்காக நீ உன் உயிரையே கொடுக்கத் தயாராக இருக்கிறாய் அல்லவா?

**சங்கசூடன்:** இந்த மகானுடைய செய்கை உலக இயல்புக்கே மாறுபட்டது. ஏனென்றால், விசுவாமித்திர முனி தம் உயிரைக் காக்கச் சண்டாளனைப்போல் நாய் மாமிசம் தின்றார். கௌதமர் தம் உயிரைக் காக்கத் தமக்கு உதவி செய்த நாடிஜங்கனையே கொன்றார். இந்தக் கருடன் பாம்புகளைத் தின்று தன் உயிரைக் காத்துக்கொள்கிறான். அதே போன்ற தன் உயிரைப் பிறருக்காகத் தயை கூர்ந்து இவன் துறந்துவிடச் சித்தமாயிருக்கிறானே. என்ன ஆச்சரியம்! (ஜீமூதவாகனனை நோக்கி) மகாத்மாவே, போதும். நீர் எனக்காக உயிர்விட வேண்டாம். என்னைப் போன்ற அல்பப் பிராணிகள் பிறந்து கொண்டும் இறந்து கொண்டும் இருக்கிறார்கள். பிறருக்காகத் தம்மையே அர்ப்பணம் செய்யும் உம்மைப் போன்ற மகான்கள் பிறப்பது அரிது.

**ஜீமூத:** வாலிபனே, எனக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தைக் கெடுத்துவிடாதே. அந்தச் சிவப்புத் துணியைக் கொடு. நீ இறந்தால் உன் தாய் உயிர்விட்டு விடுவாள். நீயுந்தான் இந்தக் கொடிய மயானத்தைப் பார்க்கவில்லையா? பாம்புகளின் எலும்பு இங்கே எப்படிக் குவிந்து கிடக்கிறது!

**சங்க:** நன்றாய்ப் பார்க்கிறேன். இதையெல்லாம் காண்பித்து என்னைப் பயமுறுத்த வேண்டாம். கருடன் வரும் நேரமாகிவிட்டது. போய் வாருங்கள். (தாயை நோக்கி) அம்மா, நான் எந்த ஜன்மம் எடுத்தாலும் நீயே எனக்குத் தாயாக வேண்டும். (இப்படிச் சொல்லித் தாயின் காலில் விழுகிறான்.)

**கிழவி:** குழந்தையே, உன்னை விட்டு என் கால் நகராது. நானும் உன்னுடன் வருகிறேன்.

**சங்கசூடன்:** கருடன் வருவதற்குள் அருகிலிருக்கும் கோகர்ணேசுவரனை வணங்கி வருகிறேன். (கிழவியும் சங்கசூடனும் போகிறார்கள்.)

**ஜீமூத:** என்ன தொல்லை! நம் விருப்பம் ஈடேறவில்லையே. என்ன செய்யலாம்? (அந்தப்புர வேலைக்காரன் இரண்டு சிவப்புத் துணிகளை எடுத்துக்கொண்டு வருகிறான்.)

**வேலைக்காரன்:** மங்களமான இந்த இரண்டு சிவப்புத் துணிகளையும் மித்ராவசுவின் தாய் தங்களுக்கு அனுப்பியிருக்கிறாள். அணிந்து கொள்ளுங்கள். (கல்யாணமாகிச் சில நாள் வரையில் வித்யாதர மாப்பிள்ளைகளுக்கு இவ்விதம் சிவப்புத் துணி கொடுப்பது வழக்கம்.)

**ஜீமூத:** கொடு. (வாங்கிக்கொண்டு, தனக்குள்) நான் மலயவதியை மணந்தது பலன் அளித்துவிட்டது. (வெளிப்படையாக) அம்மாளிடம் சொல்லு. (துணியை அணிந்து கொண்டு) ஜீமூதவாகனனின் நமஸ்காரத்தை ராணிக்குத் தெரிவி.

**வேலைக்காரன்:** அப்படியே. (போகிறான்.)

**ஜீமூத:** இந்த இரண்டு துணிகளும் எனக்குத் தகுந்த சமயத்தில் கிடைத்தன. மலைகளைக் குலுக்கிக்கொண்டு

காற்று வீசுவதைப் பார்த்தால், பட்சிராஜன் வந்துவிட்டார்போல் தோன்றுகிறது. ஆகவே, சங்க சூடன் வருவதற்கு முன்பே இந்தக் கல்லில் ஏறி நிற்கிறேன். (ஏறு கிறான்.) என் தாயின் மடியைவிட இந்தக் கல் பன்மடங்கு இன்பம் தரு கிறது. இதோ கருடன் வந்துவிட் டார். துணியால் சரியாக என்னை மூடிக்கொண்டு நிற்கிறேன்.

(கருடன் வந்து ஜீமூதவாகன னைப் பாம்பென்று நினைத்துப் பற் றித் தூக்குகிறான். ஆகாயத்தி லிருந்து மலர்மாரி பொழிகிறது.)

**கருடன்:** மலயமலையின் உச்சியில் ஏறி இந்தப் பாம்பை மெதுவாகத் தின்கிறேன்.

(ஜீமூதவாகனனைத் தூக்கிக் கொண்டபடியே மலயமலை உச்சிக் குப் பறக்கிறான்.)

**கருடன்:** நான் பிறந்தது முதல் பாம்புகளைத் தின்றுகொண்டே இருக்கிறேன். இந்த ஆச்சரியத்தை நான் இதுவரையிலும் கண்டதில்லை. என் மூக்கால் இவனைக் கொத்தி ரத் தத்தைக் குடிக்கும் பொழுது கூட, இவன் முகம் அன்பைப் பெருக்கு கிறது. தனக்கு நான் ஏதோ உதவி செய்ததுபோல் அல்லவா என்னை இவன் கோபமில்லாமல் பார்க்கி றான்! இவனுடைய தைரியத்தைக் கண்டு நான் வியப்படைகிறேன். இவன் யார் என்று நான் தெரிந்து கொள்ள வேண்டும். (சிறிது நேரம் பேசாமலிருக்கிறான்.)

**ஜீமூத:** (கருடன் பேசாமல் இருப்பதைப் பார்த்து) என் உடம் பிலே இன்னும் ரத்தம் பீரிடு கிறது. இன்னும் ஏராளமான மாமி சம் இருக்கிறது. உமக்கு இன்ன மும் பசி ஆறவில்லை போலிருக் கிறதே. பட்சிராஜா, ஏன் பேசாதி ருக்கிறீர்?

**கருடன்:** (தனக்குள்) ஆச்சரியம்! இந்த நிலையிலுங்கூட இவன் இவ் விதம் தைரியமாகப் பேசுகிறானே? (வெளிப்படையாக) நான் என் மூக்கால் உன் மார்பிலிருந்த ரத் தத்தை உறிஞ்சினேன். நீ இந்தத் தைரியத்தால் என் இருதயத் தையே உறிஞ்சிவிட்டாயே. நீ யார், சொல்.

**ஜீமூத:** பசியோடு கேட் பது சரியல்ல. என் மாமிசத்தையும் ரத்தத்தையும் உட்கொண்டு நீர் திருப்தியடைந்த பிறகு கேட்கலாம்.

**சங்கசூடன்:** (பிரவேசித்து) கொல்லவேண்டாம். இவன் பாம் பல்ல; வித்யாதர சக்கரவர்த்தி. வாசுகி என்னைத்தான் உங்களுக்கு ஆகாரமாக அனுப்பியிருக்கிறார்.

**ஜீமூத:** (சங்கசூடனைப் பார்த்து) அட பாவமே! என் எண்ணம் ஈடேறு முன்பே, சங்கசூடன் வந்துவிட் டானே!

**கருடன்:** (ஜீமூதவாகனனைப் பார்த்து) ஐயா! என்ன அபகீர்த்தி யில் முழுகிவிட்டேன்! இனிமேல் நான் இந்த உடலோடு இருப்பதை விடக் கடலிலிருக்கும் வடவைத் தீயில் விழுந்து இதை எரித்துவிடு வதே நல்லது. (கிளம்புகிறான்.)

**ஜீமூத:** பட்சிராஜனே, ஏன் இந்த முயற்சி? நீர் செய்த பாவத்துக்கு இது பிராயச்சித்தமாகாது.

**கருடன்:** (மண்டியிட்டுக் கை கூப்பிக்கொண்டு) அப்படியானால் நான் செய்த பாவத்துக்கு எது பிராயச்சித்தமோ, அதை உபதே சிக்க வேண்டும்.

**ஜீமூத:** ஒருபோதும் ஜீவ ஹிம்சை செய்யாதீர். முன் செய் ததைக் குறித்து வருந்தும் எல்லாப் பிராணிகளுக்கும் அபயமளியும். இப் படிச் செய்து வந்தால், இதுவரை யில் நீர் செய்த பாவமெல்லாம் சமுத்திரத்தில் கரைத்த பிடி உப் பைப் போல் மறைந்துவிடும்.

**தேசத்தின் ஐக்கியத்தைப் பலப்படுத்தி வளர்க்க ஒரு தேசீய பாஷை வேண்டும். அது எது என்பதுபற்றி மூன்று பிரமுகர்கள் மூன்று வித அபிப்பிராயம் தருகிருர்கள்.**

# எது தேசீய பாஷை?

---

## பாஷை - ஹிந்தி; எழுத்து - நாகரம்

கே. எம். முன்ஷி

---

**இன்று ஹைதராபாத்தில் இந்தியாவின் ஏஜெண்ட் ஜெனரலாக இருப்பவர் கே. எம். முன்ஷி. மகாத்மா காந்தியைப் பின்பற்றிப் பல முறை சிறை சென்றவர். 1937-'39 ஆண்டுகளில் பம்பாயில் காங்கிரஸ் மந்திரி சபையில் உள்நாட்டு மந்திரியாகப் பதவி வகித்தவர். சிறந்த நூலாசிரியர். 'அகண்ட இந்தியா' முதலிய நூல்களும், அரிய நாவல்களும், கட்டுரைகளும் எழுதியவர். நேற்றுவரையில் 'ஸோஷல் வெல்பேர்' என்று வழங்கியதும் இப்போது 'நியூ டெமொகிராட்' என்று வழங்குவதுமான வாரப் பத்திரிகையின் ஆசிரியர்.**

"ஹிந்தியே நமது தேசீய பாஷையாக இருக்கவேண்டும்; நாகரமே அதன் எழுத்தாக இருக்க வேண்டும்" என்று ஏன் நம்மில் சிலர் பெரிதும் விரும்புகிருேம்? அதற்கு இரண்டு காரணங்கள். முதலாவது, தேசீய ஐக்கியத்துக்கு அது அவசியம். இரண்டாவது, வேறு வழி இல்லை.

நாடு பிளவுபட்டதையும் அதனுல் பல பயங்கரங்கள் விளைந்ததையும் பார்ப்போம். இவை ஏன் நிகழ்ந்தன? 'நாம் அனைவரும் ஒரே தேசத்தினர்' என்ற உணர்ச்சி கொள்ளாமல், 'இரண்டு தேசத்தினர்' என்று இந்தியர் உணர்ச்சி கொண்டதாலேயே இவை நிகழ்ந்தன. மக்கள் அனைவரும் ஒரே மதத்தை அநுஷ்டிப்பதோ ஒரே குலத்தினராயிருப்பதோ, ஒரு தேசத்தின் தேசீய ஐக்கியத்துக்கு ஆதாரம் அல்ல. தேசத்தின் மக்களெல்லாம் தம்மிச்சையாகத் தாம் அனைவரும் ஒரே தேசத்தினர் என்ற உணர்ச்சி கொள்வதே தேசீய ஐக்கியத்துக்கு ஆதாரமாகும்.

பிரிட்டிஷார் ராணுவ பலத்தால் இந்தியாவை ஒரே தேசமாக வைத்திருந்தார்கள். இப்போது நாம் ஒரே தேசமாக இருக்க வேண்டுமானுல், அதற்கு ஒரு பலத்த தூண்டுதல் வேண்டும். குல உணர்ச்சி பயனில்லை. ஏனென்ருல், நமக்குள் எத்தனையோ குலத்தினர் கலந்திருக்கிருேம். மதமும் பயனில்லை. அது பழம் பசலியாகி விட்டது. மிஸ்டர் ஜின்னு மட்டிலுமே வேறு விதமாய் நினைக்கலாம். ஹிந்து மதமோ பரந்த நோக்கம்

காப்பிரைட்: ஸோஷல் வெல்பேர் (ஆங்கிலம்- 26-12-'47),
12, ஹோம்ஜி தெரு, பம்பாய்.

கொண்டது. அதற்கு வர்க்க உணர்ச்சி இல்லை. ராணுவத்தாலும் இந்திய ஐக்கியத்தை ஸ்தாபிக்க முடியாது. நமது ராணுவமே தேசிய ராணுவமாகும். தேசத்தாரின் தேசிய உணர்ச்சியே நம் ராணுவத்திலும் பிரதிபலிக்க வேண்டும். இப்படியாக, இந்தத் தேசிய உணர்ச்சியை, எந்தச் சாதனத்தைக் கொண்டு நாம் தூண்டுவது, வளர்ப்பது, பலப்படுத்துவது? இதுதான் கேள்வி.

மக்களின் மனோபாவம் காரணமாகப் பல கடுமையான சிக்கல்கள் இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கின்றன. மாகாண வேற்றுமை, சமூகப் பிரிவினை, இந்திய முஸ்லிம்களின் பாகிஸ்தான் பக்தி, படிப்பில்லாத பிற்போக்கான பாமர மக்களின் சோம்பல் இவை யெல்லாம் நம் சிக்கல்கள். ஆகவே, நாம் ஒரே தேசத்தினர் என்ற உணர்ச்சியைத் தூண்ட நமக்குள்ள சாதனம் ஒரே பாஷையும் ஒரே எழுத்துந்தான்.

ஐக்கிய அமெரிக்காவில் பலவகையான மக்கள் இருக்கிறார்கள். இருந்தும், ஆங்கில பாஷையாலேயே அது ஒரே தேசமாயிருக்கிறது. ஒருவன் அமெரிக்கப் பிரஜையாயிருக்க விரும்பினால், அவனுக்கு ஆங்கிலம் தெரிந்திருப்பது கட்டாயமாகும். அரசியல் ரீதியில் சீனா பல துண்டுகளாகச் சிதறியிருக்கிறது. என்றாலும், பொது எழுத்தினால், அதன் ஒற்றுமை நிலைத்திருக்கிறது. இந்தியாவில் தன்னிச்சையான ஐக்கியத்துக்கு ஆதாரமாயிருப்பது சம்ஸ்கிருதத்திலும் அதன் தொடர்பு கொண்ட பாஷைகளிலும் உள்ள கலைப் பண்பாடே.

ஒரு தேசிய பாஷையும் எழுத்தும் ஒரு தேசத்தில் இருப்பதனால், அந்தத் தேசத்தின் சிறு பான்மை வகுப்பினரின் உரிமைகளுக்குப் பாதகம் ஏற்பட்டுவிடாது. அந்தத் தேசிய பாஷையும் எழுத்தும் இன்னவையாய்த்தான் இருக்க வேண்டும் என்று சொல்லும் உரிமை சிறு பான்மையோருக்கு இல்லை. ஆனால், சிறு பான்மை வகுப்பினர் தங்கள் சொந்த விவகாரங்களில் தங்கள் பாஷையையும் எழுத்தையும் உபயோகித்துக்கொள்ள அவர்களுக்கு உரிமை உண்டு.

ஹிந்தியை எதிர்க்கும் நண்பர்கள், முஸ்லிம்களுக்காக மிகவும் கவலைப்படுகிறார்கள். இது தவறு. இந்தியாவில் உயர்ந்த பட்சம் நாலு கோடி முஸ்லிம்கள் இருப்பார்கள். மொத்த ஜனத் தொகையில் அவர்கள் நூற்றுக்குப் பன்னிரண்டு பேர் தாம். அவர்களிலும், சில லட்சம் பேர்தாம் - அதாவது உயர்ந்தபட்சம் நூற்றுக்கு ஒருவர்தாம் - உயர்தரமான உர்தூ பேசுகிறார்கள். முஸ்லிம்களில் மிகப் பெரும்பாலோர் அந்த அந்த மாகாண ஹிந்துக்கள் பேசும் பாஷையையே தாங்களும் பேசுகிறார்கள்.

ஹிந்துக்களுக்குச் சம்மதமான தேசிய பாஷையை, தேசிய ஐக்கியத்தை உத்தேசித்து முஸ்லிம்களும் அங்கீகரிப்பார்களானால், அவர்களுக்குத்தான் மிகவும் நல்லது. முஸ்லிம்கள் 'தாங்கள் வேறு தேசத்தினர்' என்ற தத்துவத்தை இன்னமும் கைவிடவில்லை என்று மற்றவர் கொண்டிருக்கும் சந்தேகம் அப்போது நீங்கிவிடும்.

கி. பி. பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பு, கிருஷ்ணாநதிக்கு வடக்கே வழங்கிய பாஷைகளெல்லாம் சம்ஸ்கிருதத்தின் செல்வாக்குக்கு உட்பட்

டிருந்தன. அமைப்பு, சொல், இலக்கியம் இந்த அனைத்திலும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டிருந்தன. பன்னிரண்டாம் நூற்றுண்டில், இந்தச் சம்ஸ்கிருத சம்பந்தமான பாஷைகளிலிருந்து 'ஹிந்தி' பிறந்தது. ஹிந்து முஸ்லிம் வகுப்புகளைச் சேர்ந்த கவிகளும், பக்தப் பெரியார்களும், சீக்கிய மத குருமாரும் அதை வளர்த்தார்கள். அதன் அமைப்பும் சொற்களும் பெரிதும் சம்ஸ்கிருதத்தை ஒட்டியே இருந்தன. பெர்ஷிய பாஷைச் சொற்களைமட்டும் தாராளமாகக் கடன் வாங்கி அதில் சேர்த்துக்கொண்டார்கள்.

இந்தியாவில் இப்போது நூற்றுக்கு 69 பேர் சம்ஸ்கிருதம் சம்பந்தமான பாஷைகள் பேசுவார்கள். அவர்களில் 45 பேர் ஹிந்தியும் 24 பேர் சம்ஸ்கிருதத் தொடர்பு கொண்ட இந்தோ - ஆர்ய பாஷைகளும் பேசுவார்கள். நூற்றுக்கு 52 இந்தியர் நாகர எழுத்தை உபயோகிக்கிறார்கள். இன்னும் பதினேழு பேருடைய எழுத்துக்கள் பெரிதும் நாகரத்தைப் போலவே இருக்கின்றன. மீதி 31 பேரில் 24 பேர் வேறுவித அமைப்புள்ள திராவிட பாஷைகளைப் பேசுவார்கள். அவர்களிலும் 16 பேர் பெரிதும் சம்ஸ்கிருதச் சொற்களைக் கொண்ட பாஷைகளைப் பேசுகிறார்கள். 8-பேர் ஓரளவு சம்ஸ்கிருதச் சொற்கள் கலந்த பாஷைகளைப் பேசுகிறார்கள். ஆகையால், குறைந்த பட்சம் நூற்றுக்குத் தொண்ணூறு இந்தியரின் மனோபாவம், பழக்கவழக்கம், இலக்கிய ஐதிகம் ஆகியவற்றை ஹிந்தி பிரதிபலிக்கிறது.

நவ இந்தியாவின் முதல் சிற்பியான தயானந்தரும் அவருடைய சீடர்களும் நாகர ஹிந்தியைத் தேசீய பாஷையாக அங்கீகரித்தார்கள். கேசவசந்திரரும் அதற்கே இந்தப் பெருமை கொடுத்தார். மாளவீயரும் அப்படியே மதித்து, ஹிந்தி ஸாஹித்ய சம்மேளனத்தை இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் தொடங்கினர். 1917-இல் காந்திஜியும் ஹிந்தியைத் தேசீய பாஷையாக அங்கீகரித்தார். தட்சிண பாரத ஹிந்திப் பிரசார சபையையும் காந்திஜி ஆரம்பித்தார். அந்தச் சபை லட்சத்துக்கு மேற்பட்ட தென்னிந்தியருக்கு ஹிந்தி கற்பித்திருக்கிறது. ஹிந்தி பேசாத வட இந்தியரில் மூன்றரை லட்சம் பேருக்கு மேல் ராஷ்ட்ர பாஷா ப்ரசார சமிதியிடம் ஹிந்தி கற்றிருக்கிறார்கள். நாட்டில் இரண்டாயிரம் சங்கங்களுக்கு மேல் ஹிந்தியைப் பரப்பிவருகின்றன. ஹிந்தி மூலமாகவும் கல்வி போதிக்கலாம் என்று பற்பல சர்வகலாசாலைகள் அங்கீகரித்திருக்கின்றன. மத்திய மாகாணத்தில் துரைத்தன பாஷைகள் இரண்டில் ஒன்றாகவும், பீஹாரில் நடை முறையில் துரைத்தன பாஷையாகவும் ஹிந்தி இடம் பெற்றிருக்கிறது. ராஜபுதனம், புந்தேல்கண்டு சம்ஸ்தானங்களிலும், கிழக்குப் பஞ்சாபிலும், ஐக்கிய மாகாணத்திலும் ஹிந்தியையே துரைத்தன பாஷையாய் அங்கீகரித்திருக்கிறார்கள். அரசியல் நிர்ணய சபையில் உள்ள காங்கிரஸ் கட்சியார் ஹிந்தியையே தேசீய பாஷையாகச் செய்வதென்று ஏற்கனவே தீர்மானித்துவிட்டார்கள்.

ஹிந்தியின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியாது. தேசீய ஐக்கியத்தை உத்தேசித்து, தேசீய பாஷை என்று அதிகாரபூர்வமாக ஹிந்தியை உடனே அங்கீகரிப்பது அவசியமாகும்.

## சம்ஸ்கிருதத்தின் உரிமை

டாக்டர் கே. என். காட்ஜூ

எழுத்து ஒரு புறம் இருக்கட்டும். இந்தியாவுக்கு ஹிந்தியே தக்க தேசிய பாஷை என்றுதான் இது வரையில் நானும் வாதித்து வந்திருக்கிறேன். வட இந்தியா முழுவதும், மத்திய மாகாணம், பீஹார் இவற்றின் சில பகுதிகளிலும் மக்கள் ஹிந்தி பேசிவருவது என் மனத்தைக் கவர்ந்தது. ஆனால், நான் ஒரிஸாவுக்கு வந்தது முதல் எனக்கு இந்த விஷயம் முன்போல் அவ்வளவு தெளிவாய்த் தோன்ற வில்லை. இங்கே ஒரிஸாவில் ஒரியா பாஷைதான் சர்வசாதாரணமாய் வழங்குகிறது. 'ராஷ்ட்ர பாஷா' என்ற ஒரு மாதப் பத்திரிகையைத் தவிர, பிற சுதேச பாஷைப் பத்திரிகைகளெல்லாம் ஒரியாவிலேயே வெளியாகின்றன. பேச்சு ஹிந்தியை நகரங்களிலுள்ள சில கடைக்காரர்கள் வேண்டுமானால் புரிந்து கொள்ளக் கூடும். அவர்கள் மிக மிகச் சிலரே. மற்றவரெல்லாம் ஹிந்தி பேசவேயில்லை. ஒரியா அல்லது ஆங்கிலமே துரைத்தன பாஷையாக இருக்கிறது. ஒரியாவைத் துரைத்தன பாஷையாக அறிக்கை செய்ய வேண்டுமென்று இப்போது ஒரு பலத்த கோரிக்கை எழுந்திருக்கிறது. சட்டசபையில் பெரும்பாலும் ஒரியாவிலேயே பேசுகிறார்கள். சில சமயம் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள். நாலு பேர் கூடும் விருந்து முதலியவற்றில் ஆங்கிலமோ அல்லது ஒரியாவோ பேசுகிறார்கள். காலக்கிரமத்தில் ஆங்கிலம் நலிந்து ஒரியாவே தலை தூக்கி நிற்கும். ஹிந்தி பேசாத தென்னிந்தியாவிலும், மைசூர், திருவாங்கூர் சம்ஸ்தானங்களிலும், வங்காளம், கூர்ஜரம், மகாராஷ்டிரம் இந்த மாகாணங்களிலும் இதே நிலைமை இருக்குமென்று நான் நினைக்கிறேன்.

**கைலாஸ்நாத் காட்ஜூ இன்று ஒரிஸா கவர்னராகப் பதவி வகிக்கிறார். 1921-ஆம் ஆண்டில் அலாஹாபாத் ஹைகோர்ட் வக்கீலாகப் பதிவானவர். 'அலாஹாபாது லா ஜர்னல்' லின் ஆசிரியராயிருந்தவர். ஐக்கிய மாகாணக் காங்கிரஸ் கமிட்டியில் பல வருஷகாலம் அங்கம் வகித்தவர். ஐக்கிய மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரி சபையில் 1937-'39-ஆம் ஆண்டுகளில் கைத்தொழில் மந்திரியாகப் பதவி வகித்தவர். சத்தியாக்கிரக இயக்கத்தில் ஈடுபட்டுப் பல முறை சிறைசென்றவர். 1940 - ஆம் ஆண்டு அ. இ. கா. கமிட்டியில் அங்கத்தினராக இருந்தவர். சட்டநுட்பங்களைப் பற்றிச் சில நூல்கள் எழுதியிருக்கிறார்.**

நாம் அனைவருமே இங்கிலீஷை வெறுக்கிறோம். அதைத் தேசிய பாஷையாய்க் கொள்ள எந்த இந்தியனும் தயாரில்லை. ஆனால், அதைச் சர்வதேச காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளுவோம். ஆனால், நமக்கு நம் சொந்தத் தேசிய பாஷை ஒன்று வேண்டும். என்றாலும், நூற்றைம்பது வருஷகாலம் இங்கிலீஷ்காரர் ஆண்டதிலிருந்து, பல லட்சக்கணக்கான இந்தியர் இங்கிலீஷ் கற்றுவிட்டார்கள். படித்தவருக்கெல்லாம் இங்கிலீஷ் தெரியும். பல மாகாணத்தவர் கூடும் விருந்து முதலியவற்றில் மட்டும் அல்ல; குடும்பத்துக்குள்ளும் வெளியிலும்

தினசரி வாழ்க்கையிலுங்கூட அவர்கள் இங்கிலீஷை உபயோகிக்கிறார்கள். மனைவிக்கும் சகோதரருக்கும் பிற உறவினர்களுக்குங்கூட இங்கிலீஷில் கடிதம் எழுதுவது நமக்குச் சுலபமாயிருக்கிறது. இந்தப் பலன் எப்படி உண்டாயிற்று? நம் குழந்தைகளுக்கு மிகச் சிறுவயதிலே இங்கிலீஷ் எழுத்தையும் பாஷையையும் கற்றுக்கொடுத்தோம். கோர்ட்டுகளிலும் சட்டசபையிலும் சர்க்காரின் உயர்தர இலாகாக்களிலும் துரைத்தன பாஷையாக இங்கிலீஷ் வழங்கியது. இவற்றாலேயே இங்கிலீஷ் இப்படிப் பரவியது.

நமது தேசிய பாஷைக்கு நாம் என்ன ஸ்தானம் அளிக்கப்போகிறோம்? இதுவே கேள்வி. ஒவ்வொரு மாகாணத்திலும் கலாசாலைகள், கல்லூரிகள், கோர்ட்டுகள், சர்க்கார் இலாகாக்கள், பத்திரிகைகள் இவையெல்லாம் அந்த அந்த மாகாண பாஷையிலேயே நடத்தப்பட்டால், தேசிய பாஷையை வளர்ப்பது கஷ்டமாகும். மாகாண பாஷைகளுக்குள் ஒன்றுக்கொன்று பொறாமை கொண்டு போராடும். ஹிந்தியையும் மாகாண பாஷைகளில் ஒன்றாகவே தென்னிந்தியரும் ஹிந்தி பேசாத பிற இடத்தினரும் நினைக்கிறார்கள். சொந்த மாகாண பாஷையிலேயே அவர்களெல்லாம் பேரன்பும் உத்ஸாகமும் கொண்டிருக்கிறார்கள். வங்காளி, குஜராத்தி, மராட்டி, ஒரியா ஆகிய பாஷைகளில் கலை, இலக்கியம், கவிதை, நாடகம் இவையெல்லாம் பிரமாதமாய் முன்னேறியிருக்கின்றன. வங்காளத்தில் ஹிந்திக்கு என்றாவது இடங்கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா?

எதற்காக நாம் தேசிய பாஷை வேண்டும் என்கிறோம்? சந்தைக் கடைகளில் கூடுவோர் ஒருவருக்கொருவர் சகஜமாய்ப் பேசிக் கொள்ள வேண்டும் என்பதற்காக அல்லவே. இந்தியா முழுவதும் பெருமைப்படத்தக்க ஒரு பாஷை அல்லவா நமக்கு வேண்டும்? மனிதனின் உன்னதக் கற்பனைகளையும் உணர்ச்சிகளையும் வெளியிடத்தக்க ஒரு பாஷையே - மிகவும் சிக்கலான தத்துவ ஆராய்ச்சிகள், நவீன ஸயின்ஸ், கலை, வைத்தியம், யந்திர நுட்பங்கள் முதலியவற்றையெல்லாம் போதிக்கக் கருவியான ஒரு பாஷையே - நமக்குத் தேசிய பாஷையாக வேண்டும். இது நமது நோக்கமானால், தெருவிலே ஒரு தமிழனோ தெலுங்கனோ ஒரியாக்காரனோ பேசிவிடத் தக்க ஹிந்தி நமக்குப் பயன்படாது.

இந்த விஷயத்தை நாம் வேறு முறையில் ஆலோசிப்போம். கொஞ்சம் கற்பனை செய்து பார்ப்போம். எந்த ஒரு குறிப்பிட்ட பாஷையையும் தேசிய பாஷையாகச் செய்ய மத்திய சர்க்காரோ மாகாண சர்க்கார்களோ எந்த விதமாகவும் துளியும் முயற்சி எடுக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். காலக்கிரமத்தில் நிகழ்ச்சிகளின் போக்கால் மக்கள் தாமாகவே தேசிய பாஷையை உருவாக்கிக் கொள்ள விட்டுவிடுவதாக நினைப்போம். அப்போது, வெறும் பேச்சுக்காகமட்டும் அல்லாமல் அகில இந்தியக் கல்வி ஸ்தாபனங்களில் கல்வி போதிக்கவும் பொதுவிலே உயர்ந்த விஷயங்களைச் சர்ச்சை செய்யவும் எந்தப் பாஷை வட நாட்டினருக்கும் தென்னாட்டினருக்கும் இயற்கையான நாகரிக இணைப்பாயிருக்கும்? பதில் தெளிவு. சம்ஸ்கிருதமே அந்த இணைப்பாக இருக்கும். சங்கராசாரியார் 1400 அல்லது 1500-வருஷங்களுக்கு

முன்பு இந்தியா முழுமையும் சுற்றுப் பிரயாணம் செய்து, எவரும் தம்மைப் புரிந்துகொள்ளும்படி உபதேசித்த பாஷை சம்ஸ்கிருதம். நமது புராதன இலக்கியமெல்லாம் சம்ஸ்கிருதத்தில்தான் இருக்கின்றன. நாடெங்கும் ஒவ்வொரு ஹிந்துவும் தன் தினசரி பூஜை, மதக் கிரியைகள் முதலியவற்றைச் சம்ஸ்கிருதத்தில்தான் செய்கிறான்.

சம்ஸ்கிருதத்துக்கு மாகாணப் பொறாமைகள் இல்லை. சகல மாகாண பாஷைகளும் சம்ஸ்கிருதத்தைத் தங்கள் தாயாக மதிக்கின்றன; சம்ஸ்கிருத பொக்கிஷத்திலிருந்து, சொற்களை ஏராளமாகக் கடன் வாங்கிக் கொள்கின்றன. இன்று ஹிந்தியுங் கூட, கலை, ஸயின்ஸ், யந்திர நுட்பங்களுக்குச் சம்ஸ்கிருதச் சொற்களைத் தழுவிக் கொள்கிறது.

சம்ஸ்கிருதம் இறந்த பாஷை என்கிறார்கள். இதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். வெகு சரளமாகச் சம்ஸ்கிருதம் பேசுபவரை நான் கண்டிருக்கிறேன். நம் அசட்டையாலும் அறியாமையாலும் அது துருப்பிடித்திருக்கிறது. அவ்வளவுதான். சம்ஸ்கிருத இலக்கியம் மிக்க எளியது; சாஸ்திரீயமானது. இங்கிலீஷைக் கற்க இந்தியச் சிறுவரும் சிறுமிகளும் செலவழித்த நேரத்தில் பாதியைச் செலவழித்தார்களானால் போதும்; சம்ஸ்கிருதம் மகா சுலபம் என்று அவர்கள் காண்பார்கள். சம்ஸ்கிருதத்திலே நம் தர்ம சாஸ்திரங்கள், மதிப்பரிய இலக்கியம், நாடகம், மகா தர்சனங்கள், சிற்பம், வான இயல், வைத்தியம், கணிதம் முதலிய அனைத்தும் இருக்கின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும், மாகாண பாஷையுடன் சம்ஸ்கிருதத்தையும் கற்பிக்கலாம். அவை இரண்டும் ஒன்றுக்கொன்று உதவிக் கொள்ளும். சம்ஸ்கிருதக் கல்வி பரவப் பரவ மாகாண பாஷையும் செழித்து வளம்பெறும். புராதனக் கலைச்செல்வங்களில் மக்களுக்குள்ள பெருமையால், சம்ஸ்கிருதத்தை அவர்கள் ஆவலோடு கற்பார்கள். பாமர மக்களுக்கு எக்காலத்திலும் சம்ஸ்கிருதம் போதிக்கப்படவில்லையே என்று ஆட்சேபிப்பது சரியல்ல. அவர்களுக்குக் கல்வியே போதிக்கப்படவில்லையே. ஆகையால், சென்ற காலத்தை உதாரணம் கொள்ளமுடியாது.

ஆனால், சம்ஸ்கிருதத்தை ஜீவ பாஷையாகச் செய்வது அவசியமாகும். தேசிய ஐக்கியத்தை உத்தேசித்து, மாகாணங்கள் ஒன்றுக்கொன்று வழங்க, சம்ஸ்கிருதத்தைத் துரைத்தன பாஷையாக அறிக்கை செய்ய வேண்டும். மத்தியச் சட்டசபைகள், உயர்தரக் கோர்ட்டுகள், உயர்தரச் சர்க்கார் இலாகாக்கள், சர்வகலாசாலைகள் இவற்றில் எல்லாம் அதை வழங்க வேண்டும். கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் அதைக் கட்டாய பாடம் ஆக்க வேண்டும். மாகாணச் சட்டசபைகளில், சம்ஸ்கிருதத்தை வழங்க உத்ஸாகமளிக்க வேண்டும். சுருங்கச் சொன்னால், இன்று இங்கிலீஷ் பெற்றிருக்கும் ஸ்தானத்தை அப்படியே முழுவதும் சம்ஸ்கிருதம் பெற்றுவிட வேண்டும்.

எழுத்திலும் கஷ்டமிராது. சம்ஸ்கிருதம் தேவநாகர எழுத்தில் இருப்பதை எல்லாரும் ஒப்புக் கொள்கிறார்கள். எந்தத் தமிழனும் தன் சொந்த எழுத்தில் சம்ஸ்கிருதத்தை எழுதுவதில்லை. இந்தியா முழுவதும் தேவநாகரத்தை ஏற்றுக்கொள்ளும்.

## ரோமன் ஹிந்துஸ்தானியே தேவை

ஏ. ஏ. ஏ. பைஜி

கட்டுரையாசிரியர் பம்பாய் பப்ளிக் ஸெர்விஸ் கமிஷனில் அங்கம் வகிப்பவர். பம்பாய் லா காலேஜில் சமீபகாலம் வரையில் பெர்ரி புரொபஸராக இருந்தவர். பம்பாய் ரோட்டரி கிளப் தலைவர். 'அஞ்சுமன்-ஈ-தரக்கீ-ஏ-உர்தூ' (உர்தூ வளர்ச்சிக் கழகம்) என்ற பம்பாய்ச் சங்கத்தின் தலைவர். இஸ்லாமியச் சட்டங்களில் நிபுணர்.

'ஹிந்துஸ்தானியே இந்திய யூனியனில் துரைத்தன பாஷையாயிருக்க வேண்டும். அதை இங்கிலீஷைப்போல ரோமன் எழுத்தில் எழுத வேண்டும்' என்று இந்திய அரசியல் நிர்ணய சபையில் பிராங்க் அந்தோணி ஒரு தீர்மானம் கொண்டுவரப்போவதாக அறிவித்திருக்கிறார். இதைச் சிரத்தையோடு ஆராயவேண்டும். ராணுவத்திலே ரோமன் எழுத்தில் எழுதும் உர்தூவே பெரிதும் புழங்கி வருகிறது. எழுதப்படிக்கத் தெரியாத சிப்பாய்களுக்கு அந்த உர்தூவை மிகவும் சுலபமாகக் கற்பித்துவிட்டார்கள்.

'ஹிந்தியையும் உர்தூவையும் ஆதாரமாகக் கொண்ட எளிய ஹிந்துஸ்தானியே இந்தியாவின் தேசீய பாஷையாக இருக்கவேண்டும். அதில் பெர்ஷிய வார்த்தைகளோ சம்ஸ்கிருத வார்த்தைகளோ அதிகமாய் இருக்கக்கூடாது. அதைத் தேவநாகரம், பெர்ஷியன் இரண்டு எழுத்துக்களிலும் எழுத வேண்டும்' என்று காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறது. என்றாலும் தேவநாகர எழுத்தில் எழுதும் ஹிந்தியே இந்திய யூனியனில் தேசீய பாஷையாயிருக்க வேண்டும் என்று விரும்புவோரும், இதே போலப் பெர்ஷிய எழுத்தில் எழுதும் உர்தூவே பாகிஸ்தானில் தேசீய பாஷையாக இருக்கவேண்டும் என்று விரும்புவோரும் இருக்கிறார்கள்.

அரசியல் விவாதங்களாலும் மதக் குரோதங்களாலும் இந்த இரு வகை அபிப்பிராயங்களுக்கும் இடையிலே பிளவு வரவர வலுத்துவிட்டது. ஆனாலும், இந்திய யூனியனிலும் சரி, பாகிஸ்தானிலும் சரி, நிதான புத்தியுள்ளவர்கள், 'சௌகரியமான எழுத்தில் சுலபமான ஒரு பாஷை வேண்டும்' என்றே விரும்புகிறார்கள். ரோமன் எழுத்தில் எழுதும் எளிய ஹிந்துஸ்தானியே இந்தப் பாஷை என்றும் அவர்கள் யோசனை கூறுகிறார்கள். இந்தப் பாஷையை ஏற்றுக்கொண்டால், முதலாவதாக இந்திய யூனியனுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே எழும்பியுள்ள தடைச் சுவர் விழுந்துவிடும். இரண்டாவதாக, எளிய ஹிந்துஸ்தானியைப் படைப்பது சுலபமாகும். மூன்றாவதாக, டைப் அடிப்பதும் அச்சிடுவதும் எளிதுபடும்.

ரோமன் எழுத்தை, காலஞ்சென்ற சுபாஷ் சந்திர போஸ் ஆதரித்தார் என்று தெரிகிறது. இப்போது மௌலானா அபுல்கலாம் ஆஜாதும் அதை ஆதரவோடு ஆலோசித்து வருகிறார். ஒரே பாஷையும் ஒரே எழுத்தும் இருந்தால், பாகிஸ்தான், இந்தியா இரண்டு டொமினியன்களின் மக்களுக்கும் எண்ணற்ற லாபங்கள் உண்டாகும்.

# பாபுராவ் பதில் சொல்லுகிறார்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச் சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிறார். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள் பற்றியும் அருமையாய்ப் பதில் தருகிறார்.

**கேள்வி:** 'பிலிமிண்டியா' வாசிப்பதனால் பிரயோசனம் என்ன?

**பதில்:** ஏஜெண்டுக்கு எட்டணாவும், அச்சாபீஸ்காரருக்கு ஒரு ரூபா எழணாவும் எனக்கு ஓரணாவும் கிடைக்கின்றன. வேறென்ன வேண்டும்?

*   *

**கே:** நீங்கள் அநேகமாக ஹிந்திப் படங்களையே கண்டித்து எழுதுகிறீர்கள். தமிழ்ப்படங்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் உங்களுக்கு இல்லைபோலிருக்கிறது. அப்படியானால் கடவுளுக்கு நன்றி.

**ப:** கடவுளுக்கு எதற்கு? எனக்குச் சந்தர்ப்பம் தராமல் தமிழிலேயே படத்தை எடுப்பவர்களுக்கு அல்லவா நன்றி கூறவேண்டும்?

*   *

**கே:** கடவுள் உண்மையில் நம் பிரார்த்தனைகளைக் கேட்கிறாரா?

**ப:** அவர் கேட்கிறாரோ இல்லையோ, கடவுளுடைய திருநாம சப்தம் மனிதனைச் சூழ இருக்கும் உலகத்தின் வேதனை முழக்கத்தை அவன் கேட்காதபடி ஆக்கி அவன் மனசுக்கு அமைதியைத் தருகிறது.

*   *

**கே:** அர்த்தராத்திரியில் குழந்தை அழ ஆரம்பித்தால் தாய் என்ன நினைக்கிறாள்?

**ப:** தன் பக்கத்தில் உறங்கும் முரடன் எழுந்துவிடப் போகிறானே என்று அஞ்சுகிறாள்.

*   *

**கே:** மரணத்தைக் கண்டால் எனக்குப் பயமாக இருக்கிறது. நான் என்ன செய்வது?

**ப:** சாவுதான் வழி. ஒரு முறை செத்துப் போனால் மறுபடியும் இப்படிப் பயப்பட இடமே இராது.

*   *

**கே:** முடிச்சு மாறுவது ஒரு கலையா?

**ப:** முடிச்சுமாறி பிடிபடாத வரையில் அது கலைதான்.

*   *

**கே:** பெண்ணை அழகியாக்குவது எது?

**ப:** அவள் இருதயத்திலுள்ள அன்பும் அந்த அன்பு இவன் கண்ணில் பிரதிபலிப்பதுமே.

*   *

**கே:** பண்டித நேருவின் முக்கியமான குறை யாது?

**ப:** அவருடைய இருதய பூர்வமான அன்பும் அதை மறைக்கும் உபாயம் தெரியாத தவிப்பும்.

*   *

**கே:** பிரம்மசாரியாகவும் கன்னியாகவும் வாழ்பவர்களை ஜனங்கள்

காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம்: டிசம்பர் '47 - ஜனவரி, '48), பம்பாய்.

சந்தேகக் கண்ணோடே பார்க்கிறார்கள்; ஆனால் கல்யாணமானவர்கள் எவ்வளவு தப்புப் பண்ணினாலும் ஒழுங்கானவர்களாகத் தோன்றுகிறார்கள். இதற்கு என்ன காரணம்?

ப: இன்னும் வீடு என்பது கோவிலாகத்தான் இருக்கிறது. அங்கே கணவன் சாமி; மனைவி தேவதாசி. ஆயிரக்கணக்கான வருஷங்களாக இதுதான் நம் வாழ்க்கையின் சூத்திரமாக இருந்துவருகிறது. இதுவே காரணம்.

* *

கே: இந்தியாவின் முடிசூடா மன்னர் யார்?

ப: காந்தி முடிசூடிய மன்னர்; வல்லபபாய் படேல் முடிசூடா மன்னர்.

* *

கே: கிழவனின் கனவுகளுக்கும் இளைஞனின் கனவுகளுக்கும் என்ன வித்தியாசம்?

ப: கிழவனின் கனவுகள் சென்றகால நினைவுகள்; இளைஞனின் கனவுகளோ வருங்காலக் கற்பனைகள்.

* *

கே: அழகுக்கு எப்போது மறைவு வேண்டும்?

ப: முரடர்கள் வேட்டையாடும் போது.

* *

கே: இந்தியப் பட டைரக்டர்கள் ஏன் இயற்கையிலே குருடராக இருக்கிறார்கள்?

ப: ஆசை என்பது கண்ணை மறைக்கும் படலம்; துறவிகளையன்றி ரணவைத்தியர்கள் அதை நீக்க முடியாது.

* *

கே: உலகத்தில் செல்வம், சக்தி, அழகு என்பவை அதிகமாக இருக்கும் நாடு - கிட்டத் தட்டச் சொர்க்க பூமி என்று சொல்லக்கூடிய தேசம் - எது?

ப: இன்றை இந்தியா அன்று; இந்தியாவை மாக்ஸ்முல்லர் ஒரு காலத்தில் அப்படிச் சொல்லியிருக்கிறார். இன்றை இந்தியாவில் வறுமையும் பட்டினியும் அரசியலும் தாண்டவமாடுகின்றன.

* *

கே: இந்தியாவில் எத்தனை பாஷைகளில் திரைப்படம் வந்திருக்கிறது?

ப: பன்னிரண்டு பாஷைகளில் - ஹிந்தி, உருது, மராட்டி, குஜராத்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம், பஞ்சாபி, வங்காளி, ஸிந்தி, இங்கிலீஷ், புஷ்டு இவற்றில். புஷ்டுவில் ஒரே ஒரு படம் வந்திருக்கிறது.*

[* மலையாளத்திலும் படம் வந்திருக்கிறது.—ஆ-ர்., மஞ்சரி.]

* *

கே: உங்கள் வெற்றியின் ரகசியம் எது? உண்மையை ஒளிக்காமல் சொல்லுங்கள்.

ப: ஓயாத படிப்பு, எதையும் நெருங்கிக் கவனித்தல், கடுமையான உழைப்பு, எல்லாவற்றிற்கும்மேல் அதிருஷ்டம் இவைதாம்.

* *

கே: 16 வயதுப் பெண்ணுக்கும் 60 வயதுக் கிழவனுக்கும் என்ன வித்தியாசம்?

ப: 44 வருஷ அநுபவம்.

* *

கே: ஒழுக்கத்துக்கும் நடத்தைக்கும் என்ன வித்தியாசம்?

ப: பிறரிடம் நாம் எதிர்பார்ப்பது ஒழுக்கம்; நாம் எதிர்பார்ப்பதை நிறைவேற்றிக் கொள்ளும் தோரணைக்கு நடத்தை என்று பேர்.




# யானைக் குஸ்தி

பானு சிர்தன்கர்

> காட்டிலே யானைகள் எப்படிக் குஸ்தி போடுமோ, அதை 'நாம் அறியோம். ஆனால், நாட்டிலே கோழிச் சண்டை போல யானைச் சண்டையும் போட விடுவதை இந்தக் கட்டுரையாளர் தத்ரூபமாய் வர்ணிக்கிறார்.

குஸ்தி அரங்கத்தைச் சுற்றி, மைதானம் முழுவதும், ஜனங்கள் குழுமி யிருந்தனர். வெளியே மோட்டார்கார்களும் ஜட்காவண்டிகளும் ஸைக்கிள்களும் வரிசை வரிசையாக நின்றிருந்தன. சுற்றிலும் அமைந்திருந்த மேடையில் கால் வைக்கக்கூட இடமில்லை.

அரங்கத்துக்குள் மலைபோன்ற மதயானை ஒன்றைக் கட்டியிருந்தனர். வெளியிலும் மற்றொரு மதயானையைச் சங்கிலி போட்டுப் பிணைத்திருந்தனர். அதன் அசைவுக்கு ஏற்றபடி அந்தச் சங்கிலியும் கிண் கிண் என்று ஒலித்தது. அவ்விரு மதயானைகளும் காலைக் கட்டியிருக்கும் சங்கிலிகளினின்றும் விடுபட்டு, தமக்குள் மோதிக் கொள்ள ஆத்திரத்தோடு நின்றன.

அரங்கத்தின் நடுவே பெரிய கல் மேடை. யானைக் கொட்டிலின் தலைவர், தம்முடைய இரண்டொரு துணைவர்களோடு, அந்த மேடையில் நின்றுகொண்டு, ஈட்டிகளும் அங்குசமும் ஏந்திய பாகர்களுக்கு உத்தரவுகள் விடுத்தவண்ணமாக இருந்தார். வெள்ளைவெளேரென்ற மஸ்லின் ஆடைகளும், கிச்சிலிப்பழ நிறத்தில் தலைப்பாகைகளும் அணிந்திருந்த பாகர்கள், "தா, தா, மல், அகத், தா" என்று கூச்சலிட்டுத் தங்கள் ஈட்டிகளைக் குறுக்கும் நெடுக்குமாக யானைகளை நோக்கிச் செலுத்தினர்.

பாண்டுவாத்தியக்காரர்கள் குஸ்தி ஆரம்பிக்கப் போகும் அடையாளமாக உரக்கக் குழலூதினர். பாகர்கள் ஈட்டிகளை ஓட்டிக்கொண்டே அவ்விரு மதயானைகளையும் குஸ்திக்குத் தாண்டிவந்தனர். சங்கிலிகளை அவிழ்த்துவிட்டதும், ஒன்று மற்றொன்றைப் பார்க்காதபடி, அவர்கள் அந்த யானைகளை மெதுவாக

காப்பிரைட்: கிர்லோஸ்கர் (மராட்டி - ஸெப்டம்பர் '47)
கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா ஜில்லா.

அரங்கத்தின் நடுவே கொண்டுவிட்டனர்.

இப்பொழுது இரண்டு யானைகளுக்கும் இடையே உள்ள தூரம் மிகக் குறைவு. அவை ஒன்றை ஒன்று பார்த்தன. துதிக்கைகளை மேலே தூக்கி, ஸூ ஸூ என்று சத்தமிட்டு மேலே பாய்ந்தன. அவற்றின் மத்தகத்தில் இரு புறமும் மதநீர் ஆறுகப் பெருகியது. கண்கள் செக்கச் செவேலென்று இருந்தன. நெற்றியிலும் துதிக்கையின் மேற்புறத்திலும் சிந்தூரம் பூசியிருந்ததனுல், அவற்றைப் பார்க்கப் பின்னும் பயங்கரமாக இருந்தது. வாலை வளைத்து உதறியும், துதிக்கையை வளைத்துக் குத்தியும் அவை ஒன்றன் மேல் ஒன்று பாய்ந்தன. மலையிலிருந்து குடுகுடு வென்று புரண்டு வரும் இரண்டு பெரும் பாறைகள் ஒன்றன்மேல் ஒன்று மோதுவதுபோல இருந்தது அந்தக் காட்சி.

அந்த யானைகள் முதலில் துதிக்கைகளை வளைத்துச் சலாம் செய்துகொண்டன. உடனே கழுத்தையும் துதிக்கையையும் தூக்கி எதிர்க்கலாயின. ஒரு யானை கழுத்தைக் குனியும்போது மற்றொன்று தன் தந்தத்தினுல் அழுத்தி அதன் கழுத்தைத் தலையால் உதைத்துத் தடாலென்று மேலே தூக்கி எறியும். கீழே விழுந்த யானை, தன் எதிரி தன்னை அப்படியே அழுத்திவிடக் கூடாதென்று கருதி, சடாலென்று குதித்து எழுந்து ஒதுங்கி நிற்கும். சில சமயம் அவை துதிக்கையைத் தூக்கி ஒன்றன்மேல் ஒன்று பாயும் பொழுது அவற்றின் மண்டைகளுக்குப் பதிலாக மார்புகள் மோதும்; அவற்றின் முன்னங்கால்கள் மேலே எழும்பிவிட்டதனுல் அவை பின்னங்கால்களால் நேராக நிற்கும். கோதாவில் இறங்கிக் குஸ்தி போடும் இரண்டு பயில்வான்களைப்போல அவ்விரு யானைகளும் மோதுகையில், அவற்றின் தந்தங்கள் உரய்ந்து, கடகட வென்ற சப்தம் அந்த மைதானத்துக்கு வெளியே வெகு தூரம்வரைக்கும் கேட்கும். அவற்றின் தந்தங்களை வெட்டி மழுங்கச் செய்திரா விட்டால், இந்தக் குஸ்தியிலே அந்த யானைகள் ரத்த ஸ்நானம் செய்திருக்கும்.

ஒரு யானை எதிரியின் முதுகை வாலால் அடிக்கிறது; உடனே அந்த எதிரியானை தன் வாலினுல் அதன் வாலைப் பற்றிக்கொண்டு கிர் கிர்ரென்று அதைச் சுழற்றுகிறது. வால்களால் அடிக்கும் போதும், மத்தகங்களை மோதிக் கொள்ளும்போதும் படார் படார், தடால் தடால் என்ற சப்தம் கேட்கிறது. இரண்டும் மல்யுத்தம் செய்யும்போது பயங்கரமாகப் பிளிறுவதைக் கேட்க உடல் நடுங்கும்.

நானூறு அடி நீளமும் இருநூறு அடி அகலமுமான குஸ்தி அரங்கம் அது. அதைச் சுற்றி நாலு புறத்திலும் பதினைந்து அடி உயரமும் அதே அகலமும் உள்ள மேடையை அமைத்திருக்கிறார்கள். பரோடாவில் கிழக்குப் புறத்து எல்லையில் இந்தக் குஸ்தி மைதானத்தை அமைத்திருக்கிறார்கள். வேறு எங்குமே காண முடியாத யானைக் குஸ்தி இங்கே வருஷந் தோறும் நடைபெறுகிறது.

இரண்டு மதயானைகள் சண்டையிடுவதுகூட அதிசயமல்ல; வெற்றியடைந்த யானையைப் பிறகு வசப்படுத்துவதுதான் அதிசயமான வேலை. இந்த யானையை வசப்படுத்தப் பாகர்களுக்கு நாலுமணி நேரம்

பிடிக்கிறது. இதற்கு நிரம்பத் துணிவும், ஜாக்கிரதையும், சாமர்த்தியமும் வேண்டும். சிறிது நேரம் விடுதலையை அநுபவித்து, எதிரியை வீழ்த்தித் தள்ளிய யானை மறுபடியும் சங்கிலிகளால் கட்டுப்பட இணங்குவதில்லை. தன் பின்னால் அங்குசமும் ஈட்டியும் ஏந்திப் பாகன் வருகிறான் என்று தெரிந்துவிட்டால் போதும் உடனே, அது அவனை ஒரே அறையாக அறைந்துவிடும். பாகனை எதிர்க்கும் அந்த யானைக்கும், யானையை ஏமாற்றி அதைச் சங்கிலியால் பிணைக்க முயலும் பாகனுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தைக் காணும்போது உள்ளம் துடிக்கும்.

யானையை ஈட்டியால் குத்தி, குஸ்திக்குத் தூண்டவிட்டுத் தப்பித்துக்கொள்வது சுலபமான வேலையல்ல. யானை ஓடும் வேகத்தையும், அதன் துதிக்கை எட்டக்கூடிய தூரத்தையும் கவனித்தாலே இது எவ்வளவு ஆபத்தான வேலை என்பது தெரியும். யானை தன்மேல் பாய வருவது தெரிந்தால், அதைத் தூண்டும் பாகன் நேரே ஓடமாட்டான்; பாம்புபோல வளைந்து வளைந்து ஓடுவான், வட்டமிட்டு ஓடுவான். யானையை ஓடவிடுவதில் அவனுடைய திறமையே அலாதி. அவன் நாலு தரம் யானையைச் சுற்றி அடித்து ஈட்டியால் குத்தினால் யானை தலை சுழன்று கீழே விழுந்துவிடும். யானையின் துதிக்கையினருகே சென்றுங்கூட அவன் துள்ளிக் குதித்துத் தப்பித்துக்கொள்வான்.

இந்த ஈட்டிக்காரப் பாகர்களின் திறமை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. முன்பெல்லாம், குஸ்தி போடும் யானைகளின் தந்தத்திலே ஒரு கடுதாசியைக் கட்டியிருப்பார்கள். அதில் பந்தயத் தொகை இவ்வளவென்று எழுதியிருக்கும். குஸ்தி போடும் அந்த யானைகளின் அருகில் சென்று எந்தப் பாகன் ஈட்டியினால் அந்தக் கடுதாசியை எடுத்து வருகிறானோ அவனுக்கு அந்தச் சீட்டிலே குறித்திருக்கும் தொகை பரிசாகக் கிடைக்கும். இம்மாதிரியான சாகசமுள்ள ஈட்டிக்காரப் பாகர்கள் இந்நாளிலே இல்லை.

யானை ஈட்டிக்காரப் பாகர்களைத் தொடர்ந்து ஓடி, இனி அவர்கள் உயிர் தப்ப முடியாது என்ற நிலை வந்துவிட்டால், பாணக்காரப் பாகர்கள் திடீரென்று வாணம் விடுவார்கள். இந்த வாணம் எரிந்தவுடனே யானையின் முன்னால் எங்கும் புகை சூழ்ந்துகொள்ளும். அது திசை தெரியாமல் விழிக்கும்போது, பாகர்கள் தப்பித்துக் கொள்வார்கள்.

இவ்வளவு ஏற்பாடுகள் யாவும் இருந்தும், எத்தனையோ ஈட்டிக்காரப் பாகர்களை யானை துதிக்கையால் தூக்கி எறிந்து, அவர்கள் துள்ளிக் குதித்துத் தப்புவதற்குள் காலால் மிதித்துவிட்டிருக்கிறது. யானைகளுக்குப் பாகர்களிடத்திலே அன்பும் கீழ்ப்படியும் தன்மையும் இருந்தாலுங்கூடச் சில சமயம் அவை தம் அரக்க வல்லமையைக் காண்பிக்காம விருப்பதில்லை.

ஈ என்று இரத்தல் இழிவானது; அதற்கெதிரே இல்லை என்பது அதனினும் இழிவானது.
கொள் என்று கொடுத்தல் உயர்ந்தது; கொடுத்தபோது வேண்டாமென்பது அதனினும் உயர்ந்தது. —புறநானூறு.

படாது. இந்த மான் மலைகளில் ஏறி வாசனைப் புல்பூண்டுகளை வேருடன் பிடுங்கி ஆவலுடன் நன்ருக மென்று தின்னும். இது தின்னும் ஆகாரமே இதன் உடம்பில் ஜீர்ணமாகிப் பிறகு கஸ்தூரியாகிறது என்கிருர்கள் சில ஆராய்ச்சியாளர். ஆனுல் ஆண் மான்களிடத்தில் மட்டுமே கஸ்தூரி உண்டாவதால், இப்படி அதன் ஆகாரந்தான் கஸ்தூரிக்குக் காரணம் என்று சொல்ல முடியவில்லை. கஸ்தூரி மான் எது என்று கண்டு பிடிக்க முடியாததால், கஸ்தூரி வேட்டைக்காரர்கள் ஆண், பெண் இரண்டையுமே வேட்டையாடிவிடுகிருர்கள்.

ஆண் மானின் பீஜ கோசத்தில் உண்டாகிறது கஸ்தூரி. இது மானின் வீர்யத்தையும் அதிகப்படுத்துகிறது. தன்னுடைய கஸ்தூரி வாசனையால் பெண் மானை ஆண் மான் மயக்குகிறது. மானின் உடலில் உண்டாகும் போது கஸ்தூரி கறுப்பும் சிவப்பும் கலந்த பழுப்பு நிற லேகியம் போல் இருக்கும். பல தோல்கள் மூடிய மெதுவான ஒரு பைக்குள் இது சேருகிறது. இந்தக் கஸ்தூரி கெட்டிப்பட்டுப் பொடியாகும் சமயத்தில், மானுக்கு மிகவும் சிரமமாக இருக்கும். உடல் அதிகமாக வேர்க்கும். கஸ்தூரிப் பையின் வாய் மிகவும் சிறியது. பை நிறைந்து விட்டாலும் கஸ்தூரி வெளியே வர முடியாது. வாசனை மட்டும் வீசும். அப்போது மான் தன் உடம்பை மரத்திலோ கல்லிலோ தேய்த்துக் கொள்ளும். பையில் நிரம்பிய கஸ்தூரி இப்போது வெளியே விழுந்துவிடும். இப்படி வெளியே விழும் கஸ்தூரியை மட்டும் பொறுக்கினுல், அதிகமான கஸ்தூரி எடுக்க முடியாது. வேட்டையாடித்தான் ஏராளமான கஸ்தூரியை எடுக்க முடியும்.

மானை வேட்டையாடிக் கஸ்தூரிப் பையைக் கத்தரித்து எடுத்துவிடுவான் வேட்டைக்காரன். இப்படிக் கத்தரித்து எடுத்த கஸ்தூரிப்பைகளை அப்படியே வைத்திருக்க முடியாது. வைத்திருந்தால் அழுகிவிடும். அதற்குப் பயந்து வேட்டைக்காரன் அந்தப் பைகளை உலர்த்துகிருன். நிறையக் கஸ்தூரியைச் சேர்த்துக் கொள்வதுடன், மான் தோல், கொம்புகள் இந்த எல்லாவற்றையுமே அவன் வியாபாரிகளிடம் எடுத்து வருகிருன்.

கஸ்தூரி மிகவும் சுத்தமாகக் கிடைப்பது கஷ்டம். முதலில் வேட்டைக்காரர்களே அளவைப் பெருக்குவதற்காகக் கஸ்தூரியுடன் மண், துரு, ரத்தம் முதலியவற்றைக் கலந்துவிடுகிருர்கள். தப்பித் தவறி அவர்கள் சுத்தமாகக் கொண்டு வந்தாலும், வியாபாரிகள் ஒரு கை பார்ப்பார்கள். சீனுவில் இந்த மோசடி மிகவும் அதிகம். அதற்காகச் சீன அரசாங்கமே கஸ்தூரி வியாபாரப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. கஸ்தூரியில் மோசடி செய்பவர்களுக்குச் சீன அரசாங்கம் கடுந்தண்டனை விதிக்கிறது. சீன அரசாங்கத்துக்குக் கஸ்தூரி வியாபாரத்தில் கோடிக் கணக்கான பணம் லாபம் கிடைக்கிறது.

०००0மு0०००

**தனக்கு ஒன்றும் தெரியாது என்று எண்ணுபவனுக்குக் கொஞ்சமாவது புத்தியுண்டு; தனக்கு எல்லாம் தெரியும் என்று இருப்பவன்தான் சுத்த முட்டாள்.**

—புத்தர்

# சொல் பொருந்துமா?

கீழுள்ள வார்த்தைகள் கிட்டத்தட்ட ஒரே கருத்தைச் சார்ந்தவை. ஆனாலும் ஒன்றுக்கொன்று வித்தியாசம் உண்டு. பின்னே வரும் வாக்கியங்களில் சரியான வார்த்தையைச் சரியான இடத்தில் பொருத்திப் பாருங்கள்:

வார்த்தைகள்:

1. சொரிதல்
2. சொறிதல்

பொருத்தவேண்டிய வாக்கியங்கள்;

(க) அரிக்கிறதென்று.......ந்தாலும் ஆழமாகச் ...ந்தால் புண்ணாகி விடும்.

(ங) மலர் ...ந்து வழிபடும் அடியவர்களிடம் கடவுளுக்கு அருள் பிறக்கிறது.

(ச) பட்ட வேதனைகளை நினைந்து கண்ணீர் ...யும் பேதைப் பெண்ணைக் கண்டால் பேயும் இரங்குமே.

3. அல்ல
4. இல்லை

(ஞ) கர்ணனுக்குப் பின் கொடை...கார்த்திகைக்குப் பின் மழை...

(ட) கேட்டுக் கொடுப்பது தானம்...

(ண) காக்கையின் நிறம் கறுப்பு...என்று சாதித்தால் அவனை என்னவென்று சொல்வது?

(த) அவன் சொன்னது உண்மையா...என்று யோசிக்காமல் தீர்மானம் செய்துவிடாதே.

5. எரித்தல்
6. எறித்தல்

(ந) உலகமெல்லாம் சுட்டு...தாலும் உன் கோபம் ஆறாதுபோல் இருக்கிறதே.

(ப) இரவெல்லாம்......தால் எண்ணெய் குறைவதற்குக் கேட்க வேண்டுமா?

(ம) காட்டில்...த நிலவுபோல் என் முயற்சி வீணாயிற்றே.

7. இறை
8. இரை

(ய) கிணற்று நீரை ...தால் தான் ஊறும்.

(ர) லொடலொடவென்று......கிறான்.

9. கரித்தல்
10. கறித்தல்

(ல) உப்புக் க...க்கிறது.

(வ) ஆடு தழையைக் க...த்துக்கொண்டே நின்றது.

(ழ) என்னைக் கண்டால் என் ...கிறாய்?

11. கரந்து
12. கறந்து

(ள) உதட்டிலே புண் என்றால் மாடு க...ந்து தரமுடியாதா?

(ற) கையிலே உள்ளதைக் ...து வைத்துக்கொள்பவனால் யாருக்கு என்ன லாபம்?

[விடை 79 – ஆம் பக்கத்தில்]

**ஹிந்து - முஸ்லிம் கலகங்களை நேரிலே கண்டறிந்த இந்த அமெரிக்கர், ஓர் உருக்கமான வரலாற்றைக் கூறுகிறார். கலகங்கள் எவ்வளவு மதியீனம் என்பதை இது காட்டும்.**

# இந்தியாவின் வேதனை

## வெல்டன் ஜேம்ஸ்

“பெரிய மனிதர்கள் கலகத்தைக் கிளப்பிவிடுகிறார்கள்; ஆனால் சிறிய மனிதர்களே எப்போதும் கொலையுண்டு சாகிறார்கள். ஏராளமான சிறிய மனிதர்கள் செத்த பிறகுதான் அமைதி உண்டாகும் போலிருக்கிறது!” என்று முகம்மத் அலி அபிநயத்தோடு சொன்னான். அவன் சாதுரியமுள்ள முஸ்லிம் கிழவன். நீள மீசைக்காரன். இந்தியாவில் என் வேலைக்காரன். மிகவும் ஆபத்தான கலக காலங்களில் எனக்குக் காவற்காரனாக இருந்து, கதவுக்கு வெளியிலே படுத்துத் தூங்குவான்.

இந்தியாவில் நடந்த கொடிய கலகத்தைப் பற்றிச் சொன்னால், ஐரோப்பியர் நம்பமாட்டார்கள். இந்தியாவில் பெரிய நகரங்களில் அங்கும் இங்கும் கலகம் சிதறுண்டிருக்கும். ஆனால், சிறிய நகரங்களிலோ வெளியிலிருந்து கலகக்காரர் கூட்டம் கூட்டமாக வந்து தாக்குவார்கள்; தீவைப்பார்கள்; அடிப்பார்கள். காஷ்மீரில் பாரமுலாவில் இப்படித்தான் நடந்தது. ஆனால் ஒவ்வொரு தடவையும் - முகம்மத் அலி சொல்வது போல - கஷ்டப்படுகிறவர்கள் சாமான்ய மனிதர்களே.

ஓர் இரவு அமெரிக்கப் பிரதிநிதியின் காரியாலயத்தைச் சேர்ந்த ஜான் தோமாஸன் என்பவருடன் கல்கத்தாவை நான் ஒரு சுற்றுச் சுற்றினேன். முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் இடையே இருந்த விசித்திரமான பேதநிலையைக் கண்டேன். ஹிந்துக்கள் வசித்த சில பகுதிகளில் ஊரடங்கு சட்டம் இல்லை; அங்கே தெருக்களில் வெளிச்சமும் வாசலுக்கு வாசல் ஜன நடமாட்டமும் இருந்தன. அதற்கப்பால் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கலந்து வசித்த பல பகுதிகளோ, ஒரே இருட்டாக ஜன சந்தடியின்றி இருந்தன; அங்கெல்லாம் போலீஸ்காரரும் சிப்பாய்களுமே இருந்தார்கள். பின்பு முஸ்லிம்கள் குடியிருந்த இடங்களைப் பார்த்தேன். அவற்றில் விளக்குகள் பிரகாசித்தன; குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தன. அடுத்தாற்போல் இருந்த பகுதியோ இருள் சூழ்ந்து கிடந்தது. அங்கே ஜனநடமாட்டமே இல்லை; எங்கும் கதவு அடைத்திருந்தது. இப்படியே இருளும் ஒளியும் அடுத்தடுத்து மாறி மாறி இருந்ததைப் பார்த்தேன்.

ஆனால் போக்குவரத்தே இல்லை. போலீஸ்காரர்கள்தாம் சஞ்சாரம் செய்துகொண் டிருந்தார்கள். அபூர்வமாக ஓர் அமெரிக்கருடைய காரோ ஐரோப்பியருடைய காரோ போகும். அவ்வளவுதான். “கார் போனால் சின்னக்குண்டுகளை வீசுகிறார்கள்”

**காப்பிரைட்: காலியர்ஸ் (ஆங்கிலம்: 20-12-'47), ஸ்பிரிங்பீல்டு, ஒஹியோ, ஐக்கிய அமெரிக்கா.**

என்று தோமாஸன் சொன்னார்: "அதிக வேகமாக நாம் போனால் போலீஸ்காரன் சுட்டுவிடுவான். ஆனால், ஜனங்களால் நமக்கு இங்கே அபாயமே இல்லை. இரண்டு வருஷகாலமாக ஹிந்து முஸ்லிம்களிடையே ஏற்பட்ட பிணக்கினால் நம்மைப் பற்றிக் கவலைப்பட அவர்களுக்கு நேரமில்லை. இதோ வெளிச்சம் தெரிகிறதே, இந்த இடங்களில் கூட எவனாவது நடந்துகொண்டிருக்கும் போதே திடீரென்று வயிற்றைப் பிடித்துக்கொள்வான்; சிறிது தூரம் தள்ளாடி நடப்பான்; பிறகு பிணமாக விழுந்து விடுவான். இதை நாம் பார்க்கலாம். ஆனால் ஒருவனை ஒருவன் கத்தியால் குத்தியதை நான் இதுவரையில் நேரில் கண்டதே இல்லை" என்று அவர் சொன்னார்.

மேற்குத் திசையில் நாகரிகம் முளைப்பதற்கு முன்னே அதைப் பெற்று வளர்த்த இந்திய நாட்டில் இத்தகைய அறிவற்ற சேதங்கள் ஏன் நடக்கின்றன? ஏன்?

இதற்கு விடை சொல்வது எளிதன்று. 1100 வருஷங்களுக்கு முன்னாலே தள்ளிப்பார்க்கவேண்டும். அப்போது மேற்கிலிருந்து வந்த முகம்மதியர்கள் இந்தியாவில் புகுந்தார்கள்; ஹிந்துக்களின் ஆலயங்களையும் விக்கிரகங்களையும் சிதைத்து, வாளைக் காட்டிப் பயமுறுத்தி ஹிந்துக்களை முஸ்லிம்களாக மதம் மாற்றினார்கள். அந்த வினை 1947-ஆம் வருஷம் வரைக்கும் வந்திருக்கிறது.

பிரிட்டிஷ்காரர்களை ஓட்டுவதென்ற கொள்கை தீவிரமாக இருந்த காலங்களில் இந்தியர்கள் ஒன்றுபட்டிருந்தார்கள். முதலாவது மகாயுத்தத்துக்குப் பிறகு சுதந்தரம் கிடைக்கலாமென்பதற்கு அறிகுறிகள் தோன்றியவுடன், இந்த ஒற்றுமை குலைந்தது; அடிமுதல் நுனிவரையில் வகுப்புப்பகை மூண்டது; சுதந்தரம் நெருங்குகிறதென்று தோன்றிய போதெல்லாம் இது கடுமையாயிற்று.

கிழக்குப் பஞ்சாபிலுள்ள சின்னஞ் சிறு கிராமங்களுக்கு நான் போனேன். நகரங்களிலிருந்து வெகுதூரம் தள்ளியிருப்பவை அந்தக் கிராமங்கள். அவற்றில் ரோட்டு வசதியே இல்லை. ஒட்டகங்களும் கட்டை வண்டியும் போகப் பேருக்கு ஒரு பாதை இருக்கும். அங்கே வசிக்கும் மக்களில் பலர் இதற்கு முன் பத்து மைலுக்கு மேல் பிரயாணமே செய்திருக்க மாட்டார்கள். இந்தப் பஞ்சாபிகளைப் போலத்தான் இந்தியாவில் பத்தில் ஒன்பது பங்கு பேர் வாழ்கிறார்கள்.

குர்கான் ஜில்லாவில் முஸ்லிம் கிராமமாகிய கைராத்பூர் பாஸ் இருக்கிறது. ஒரு மசூதியும் இருநூறு குடும்பங்களும் அடங்கிய ஊர் அது. ஹிந்துக்கள் வாழும் கிராமங்கள் மூன்று அதைச் சுற்றி இருக்கின்றன. அந்த மூன்றில் மிகவும் அருகில் இருப்பது திக்ளி.

குர்கான் கோதுமை விளையும் பூமி. கால்நடைகளும் மயிலும் கோழியும் வளரும் வளப்பமான நிலம். அங்கே வசிக்கும் மக்கள் அநாதிகாலமாக ஒரேமாதிரி பூமியை உழுது ஜீவித்து வருகிறார்கள். பெண்களும் பழைய காலத்தைப் போலவே கிணற்றுக்குப் போய்த் தண்ணீர் இழுத்து வம்பளந்துகொண்டிருக்கிறார்கள். காலத்தால் ஒரு மாறுபாடும் அங்கே நிகழவில்லை.

வீடுகளெல்லாம் செங்கல்லும் மரமும் வைத்துக் கட்டியவை; கூரை வேய்ந்தவை. சில வீடுகள் மாத்திரம் கல்கட்டடம். கிராமங்களிலெல்லாம் வேம்பும் அரசும் ஆலும் நிழல் தந்து நிற்கின்றன.

கைராத்பூர் முஸ்லிம்களும் திக்ளி ஹிந்துக்களும் நூற்றுக் கணக்கான வருஷங்களாகச் சமாதானமாகத் தான் வாழ்கிறார்கள்; ஆனால், ஒருவரோடு ஒருவர் சேராமல் பிரிந்து வாழ்கிறார்கள். முன்பு ஹிந்துக்களாக இருந்தவர்களே மதம் மாறியிருக்கிறார்கள் என்று முஸ்லிம்களைச் சற்று இழிவாக ஹிந்துக்கள் பேசுவார்கள். ஆனால் முஸ்லிம்களோ தங்களை நவாபுகளின் பரம்பரையினர் என்று எண்ணிக்கொண்டு ஹிந்துக்களை அவமதிப்பார்கள்.

ஒரு நாள் அலிமியூ என்ற ஊரிலிருந்து வந்த ஒரு முஸ்லிம், "அந்த ஊரை ஹிந்துக்கள் நிலமட்டமாக்கி விட்டார்கள்" என்று சொன்னான்; "ஆண் பெண் குழந்தைகள் அடங்கலும் கொலையுண்டு மாண்டார்கள். நான் ஒருவனே தப்பி ஓடிவந்தேன்" என்றும் கூறினான். முதல் நாள்தான் கைராத்பூரிலிருந்து போன இரண்டு மாட்டுக்காரப் பயல்களை யாரோ கொன்றுவிட்டார்கள். அந்தக் கொலையைச் செய்தவர்கள் திக்ளி ஹிந்துக்களே என்று கைராத்பூர் பாஸ் ஆசாமிகள் குமுறினார்கள். எல்லோரும் கூடிப் பழிவாங்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

ஊரிலுள்ள பஞ்சாயத்துக்காரர்களாகிய கிழவர்கள் "கலகம் வேண்டாம்" என்றார்கள்; "கொஞ்சம் பொறுத்திருங்கள்" என்றும் சொல்லிப் பார்த்தார்கள். முல்லாக்களும் அப்படியே சொன்னார்கள்.

யுத்தத்தில் சேவை செய்த இரண்டு ராணுவ வீரர்களும் வேறு இளவட்டங்களும் இதற்குச் சம்மதிக்கவில்லை. சண்டை செய்யத்தான் வேண்டுமென்றார்கள். ஊரிலுள்ள பெண்களையும் குழந்தைகளையும் பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பிவிட்டார்கள்.

வயல்களில் பக்கத்துக் கிராமவாசிகளைக் காணவில்லை. அதுகண்ட திக்ளி ஹிந்துக்கள் சந்தேகம் கொண்டார்கள். ஊரில் காவல் போட்டார்கள். நாலு பக்கமும் சுவருள்ள அடைப்பான ஓர் இடத்தில் பெண்களையும் குழந்தைகளையும் சேர்த்து வைத்தார்கள். கையில் அகப்பட்ட ஆயுதங்களை எடுத்துக் கொண்டார்கள். கத்தி, தடி, கோடரி முதலியவற்றை ஏந்தினார்கள். சிலருக்குத் துப்பாக்கிகளுங்கூடக் கிடைத்தன. வெள்யூர்களிலிருந்தும் பல மனிதர் வந்து சேர்ந்து கொண்டார்கள். கைராத்பூரில் உள்ள மக்களைக் காட்டிலும் அதிகக் கூட்டம் இங்கே சேர்ந்தது.

முஸ்லிம் தலைவர்கள் தந்திரமாகத் தங்கள் கூட்டத்தினரை அறுபது அறுபது பேர்களாக மூன்று பிரிவு பிரித்தார்கள். ஹிந்துக்கள் காத்திருந்த பாதை வழியாகப் போகாமல், குன்றுகளின் வழியே புகுந்து, திக்ளியை முஸ்லிம்கள் சூழ்ந்து கொண்டார்கள். சண்டை ஆரம்பித்தது. குத்தினார்கள்; சுட்டார்கள். ஹிந்துக்களும் கொலையுண்டார்கள்; முஸ்லிம்களும் கொலையுண்டார்கள். கோதுமை வயல் பற்றி எரிந்தது; கதவுகள் எரிந்தன; கூரைகள் எரிந்தன; மரங்கள் எரிந்தன. கல்லைத் தவிர மற்றவை எல்லாம் பிடி சாம்பலாயின. பெண்களும் குழந்தைகளும் இருந்த இடத்துக்குள்ளே புக முயன்ற முஸ்லிம்களில் பலர் செத்து மடிந்தார்கள்; பலர் படுகாயம் அடைந்தார்கள். உயிர்விடுவோரின் ஆரவாரமும் பெண்களின் ஓலமும் கலந்து ஒலித்தன. வெளியிடங்களிலிருந்து ஹிந்துக்கள் வந்துவிடுவார்களென்று முஸ்லிம்கள் பயந்தார்கள். திடீரென்று ஆரம்பித்த படுகொலை திடீரென்று நின்

றது. ஒரு கொம்பொலி கேட்டது; செத்தவர்களேயும் காயம்பட்டவர்களேயும் இரண்டு இளம் பெண்களேயும் தூக்கிக் கொண்டு முஸ்லிம்கள் மறைந்தார்கள். அடுத்த நாள் இரவு திக்ளி ஹிந்துக்கள் பக்கத்துக் கிராமங்களுக்குப் போய் முஸ்லிம்களேக் கொன்ருர்கள். பல முஸ்லிம்கள் ஓடி உயிர்தப்பினுர்கள். கைராத்பூர் பாஸ் தீக்கிரையாயிற்று. வீடுகளெல்லாம் நிர்த்தூளியாயின.

ராணுவம் வந்து இரண்டு ஊர்களுக்கும் நடுவிலே தங்கியது. அதற்கப்புறந்தான் சண்டை நின்றது. திக்ளிக்கும் கைராத்பூருக்கும் ஜனங்கள் மெல்ல மெல்ல ஒவ்வொரு குடும்பமாகத் திரும்பிவந்து வீடுகளேச் செப்பனிட்டு மறுபடியும் நிலங்களே உழுது பயிரிடத் தொடங்கினுர்கள். அப்படியும் ராணுவம் போகாத இடங்களில் கொலேயும் தீயும் பரவிக்கொண்டுதான் இருந்தன. மொத்தத்தில் 119 கிராமங்கள் சாம்பலாயின; ஆயிரக்கணக்கான பேர் இறந்தார்கள்.

குர்கான் நகரம் மாத்திரம் அழியவில்லே. அங்கே பலமான ராணுவம் இருந்தது. அந்த ராணுவத்திலிருந்து ஆறு முதல் முப்பது வரை வீரர்கள் கோஷ்டி கோஷ்டியாகச் சேர்ந்து கிராமங்களுக்குச் சென்ருர்கள். அவர்கள் போன இடங்களிலெல்லாம் சண்டை நின்றது. இந்த ராணுவத்தில் சிலர் ஹிந்துக்கள்; சிலர் முஸ்லிம்கள். எல்லேத் தொந்தரவுகள் நின்றவுடன் இந்த முஸ்லிம்கள் பாகிஸ்தானத்துக்குப் போகவேண்டியவர்கள். ஆனுல் எல்லோருமே நல்ல வீரர்கள். இந்தச் சண்டை நிற்கவேண்டுமென்று அவர்கள் உழைத்தார்கள். யாரிடமும் அவர்கள் பட்சபாதம் காட்டவில்லே.

அவர்களுடைய தலேவர் இங்கிலீஷ்காரர். அவர் ஜனங்களின் பழக்கவழக்கங்களும் பாஷையும் தெரிந்தவர்; கெட்டிக்காரர். தம்முடைய படைவீரர்களிடத்தில் நம்பிக்கை வைத்து, ஹிந்து கிராமங்களுக்கு முஸ்லிம் வீரர்களேயும் முஸ்லிம் கிராமங்களுக்கு ஹிந்து வீரர்களேயும் அனுப்பினுர். ஆயுதமொன்றும் வைத்துக் கொள்ளாமல், கிராமம் கிராமமாகத் தாமும் நேரிலே சென்று கிராமவாசிகளேச் சமாதானமாகவும் பொறுமையுடனும் இருக்கும்படி வேண்டிக்கொண்டார்.

கடைசியாக அந்தப் படைத்தலேவர் கைராத்பூர் முஸ்லிம்களே வழிக்குக் கொண்டுவந்தார். அவர்கள் எல்லோருமே பாகிஸ்தானுக்குப் போவது அசாத்தியமென்றும், தாங்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்த இடத்தில்தான் ஹிந்துக்களுடன் ஒற்றுமையாய் வாழவேண்டுமென்றும் வற்புறுத்தினுர். அவர்களும் இணங்கினுர்கள். பின்பு, திக்ளி ஹிந்துக்களேயும் கூப்பிட்டு இரு கிராமத்தாரும் சேர்ந்து ஒரு சமாதானக் கூட்டம் நடத்த அந்தப் படைத்தலேவர் ஏற்பாடு செய்தார்.

ஆனுல், மற்றவருடைய கிராமத்திலே கூட்டத்தை நடத்த இரு வகுப்பினரும் விரும்பவில்லே.

ஆகவே நெடுந்தூரத்திலுள்ள குளத்தங்கரையிலே திக்ளி ஹிந்துக்களும் கைராத்பூர் முஸ்லிம்களும் கூடினுர்கள். சிறிது தூரத்தில் சில படை வீரர்கள் எதற்கும் கையோடு காவலாக நின்ருர்கள். ஆனுல், கடைசியில் அவர்களுக்குத் தேவையே இல்லாமற் போயிற்று.

மணிக்கணக்காக ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பேசினுர்கள். ஒருவரை ஒருவர் குறை கூறினுர்கள். வயதான பெரியவர்களுடைய பேச்சுக்கு இப்போது செலாவணி ஏற்பட்டது. இரு கட்சியாரும் தங்கள் பிழையை உணர்ந்தார்

கள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அடியோடு ஒருவரை ஒருவர் கொன்றுவிட முடியாதென்று தெளிவாய்த் தெரிந்துகொண்டார்கள். மற்ற இடங்களில் என்ன நடந்தாலும் சரி, தாங்கள் மட்டும் பழி வாங்கும் மனப்பான்மையை மறந்து அமைதியாக வாழவேண்டுமென்று ஒருவருக்கு ஒருவர் சொல்லிக்கொண்டார்கள்.

திருடின மாடுகளைத் திருப்பிக் கொடுக்கவும், சமாதானத்தை நிலை நாட்டவும், யாராவது விஷமம் பண்ணினால் அவரைத் தண்டிக்கவும் அவர்கள் உடம்பட்டார்கள்.

திக்ளி ஹிந்துக்களும் கைராத்பூர் பாஸ் முஸ்லிம்களும் ஒன்றாக உட்கார்ந்து அமைதியாகப் புகை குடித்தபடியே ஒருவர் பேச்சை மற்றவர் கவனித்தார்கள். அந்தப் பேச்சினால் அவர்களுடைய கோபம் சிறிது சமனம் ஆயிற்று. பிறகு அந்தக் கர்னல் சுருக்கமாக அவர்களிடம் பேசினார்: "உங்கள் புத்திசாலித்தனத்தைப் பாராட்டுகிறேன். என் படைவீரர்களில் பெரும்பாலோர் முஸ்லிம்கள். ஆகையால், நான் பாகிஸ்தானுக்குப் போக வேண்டும். உங்களைப் பிரிந்து செல்ல வேண்டுமே என்று வருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனால் ஒன்று சொல்வேன்: என் படையில் இருப்பவர்களும் நீங்களும் தோழர்கள்; அவர்களை உங்களுக்கு எதிராகப் போரிடும்படி நான் ஒரு காலத்திலும் ஏவமாட்டேன்" என்று சொன்னார்.

"அவர்கள் தங்கள் வாக்கைக் காப்பாற்றுவார்கள்; சில காலம் அமைதியாக வாழ்வார்கள். அவர்கள் போக்கிலே விட்டால், எப்போதுமே அவர்கள் அப்படி வாழலாம். ஆனால் வேறிடங்களில் கலகம் ஏற்பட்டு, அங்கிருந்து ஓடிவரும் அகதிகள் பயங்கரக் கதைகளைச் சொல்லுவார்களானால், மறுபடியும் சண்டை மூண்டு விடுமே!" என்று அவர் பின்னால் கூடாரத்துக்கு வந்த போது சொன்னார்.

பெரிய மனிதர்கள் இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையிலே போரை விரும்பவில்லை. இந்தியா முழுவதும் உள்ள சிறிய மனிதர்களோ திக்ளியிலும் கைராத்பூரிலும் உள்ளவர்களைப் போலவே, ரத்தக் களரி கண்டு அலுத்துப் போய்விட்டார்கள். இன்னும் சில மாதங்களில் இரண்டு அரசாங்கத்தாரும் கலகத்தை அடக்கிச் சமாதானத்தை நிலை நாட்டக் கூடுமென்று அறிஞர்கள் எண்ணுகிறார்கள்.

அல்லது என்னுடைய துணைவன் முகம்மத் அலி சொன்னதுபோலப் போதுமான சிறிய மனிதர்கள் செத்த பிறகுதான் அமைதிவருமோ என்னவோ! அவனுடைய அபிப்பிராயப்படி, நாற்பது வருஷங்களுக்கு அப்புறந்தான் அந்த அமைதி வருமாம். ஜோசியன் அப்படித்தான் அவனுக்குச் சொல்லியிருக்கிறானாம்!

★

**பொருந்தும் சொல்**

**[ 74—ஆம் பக்கத்தில் உள்ள கேள்விக்கு விடை ]**

| | | |
|---|---|---|
| 1—ந,ச | 5—ந,ப | 9—ல,ழ |
| 2—க | 6—ம | 10—வ |
| 3—ட,ண,த | 7—ய | 11—ற |
| 4—ஞ | 8—ர | 12—ள |

சிறு கதை

# விருந்தாளி

ஜனமஞ்சி ராமகிருஷ்ண

★

பட்டாளத்தில் நான் ஹவில்தாராக இருந்தேன். அது யுத்தம் மும்முரமாக நடந்து கொண்டிருந்த காலம். அதிகாரிகள் என்னை வடமேற்கு எல்லைப்புற மாகாணத்துக்கு மாற்றினார்கள். நாட்டின் பல பிராந்தியங்களிலிருந்தும் வந்தவர்கள் எங்கள் படையில் இருந்தார்கள். நாங்கள் கூடாரத்தை விட்டு வெளியே போக வேண்டுமென்றால், பட்டாணியரை எங்கள் படைத்தலைவர் எங்களுக்குத் துணையாக அனுப்புவது வழக்கம். அது போன்ற ஒரு சந்தர்ப்பத்திலேயே எனக்குப் பதேகான் உற்ற நண்பன் ஆனான். எங்கள் இருவருடைய நோக்கமும் ஒன்றாயிருந்ததுதான் அதற்குக் காரணம் என்று நினைக்கிறேன்.

**காஷ்மீரத்தில் இன்று புகுந்து சகிக்க முடியாத கொடுமைகள் புரியும் பட்டாணியர்களைப்பற்றிக் கேட்கும்போது, இப்படியும் மக்கள் உண்டா என்று நாம் நினைக்கத் தோன்றுகிறது. ஆனால், இவர்கள் வழி தவறியதற்கு இவர்களின் இயல்பு காரணம் அல்ல. பட்டாணியர்களின் உண்மை இயல்பு - விருந்தாளிகளை அவர்கள் உபசரிக்கும் உபசாரம் - உலகத்துக்கே உதாரணமாகும். அதைச் சித்திரிப்பது இந்தக் கதை.**

ஒரு நாள் நாங்கள் உலாவப் போனபோது, மலையை அடுத்த ஒரு கிராமத்துக்குள் பிரவேசித்தோம். நடந்து கொண்டிருந்த பதேகான் சட்டென்று நின்று, "பாய்! அதோ அந்த இடத்தை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். பின்னால் அதைப் பற்றி உங்களுக்கு ஒரு நல்ல கதை சொல்லுகிறேன்" என்று ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டினான்.

"உங்கள் தேசமே கதைமயமாய் இருக்கிறதே! மூலை முடுக்குகளைப் பற்றியெல்லாம் கதைகள் வழங்குகின்றன! நன்றாயிருக்கிறது, பாய் ஸாப்!" என்று சிரித்துக்கொண்டே நான் சொன்னேன்.

"எங்கள் ஜாதியாரை இன்னும் இந்தப் பிரிட்டிஷ்காரர்கள் புரிந்து கொள்ளவில்லை. 'எல்லைப் புறத்தவர் நாகரிகம் அற்றவர்கள்; மனிதத்தன்மை அற்றவர்கள். அவர்களுக்கு மனச்சாட்சி என்பதே கிடையாது' என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நாகரிக அளவுகோலைக் கொண்டு எங்களுடைய நாகரிகத்தை அளக்கிறார்கள். அதன் பலனாக எங்கள் மீது விமானப் படையெடுப்பு நடத்துகிறார்கள். குண்டு மழையும் சொரிகிறார்கள், பாய்! எங்கள் பட்டாணியர் இருக்கிறார்களே, அவர்கள் சுதந்தரப் பிரியர்கள். சுயேச்சைக்காக, மனிதத்தன்மை

காப்பிரைட்: பாரதி (தெலுங்கு : 7-11-47), தம்புசெட்டி தெரு, சென்னை.

யையே வேண்டுமானாலும் இழந்து விடுவார்கள். அவர்களுடைய சுயேச்சையை மட்டில் பறிக்காதிருந்தால், அவர்கள் மாதிரி நல்ல மனசுக்காரர்களை வேறெங்குமே நீங்கள் காணமுடியாது. எங்கள் மனப்போக்கு விசித்திரமானது. நாங்கள் விருந்தாளிகளை உபசரிப்பதைப் பற்றிக் கேளுங்கள் - மனித ஜாதி முழுவதும் எங்களிடம் அதைக் கற்றுக்கொள்ள வேண்டும்!...... மேலே நான் காண்பித்த இடத்தில் நடந்த கதை இந்த மாதிரி ஒரு விருந்து உபசாரத்தைப் பற்றியது தான்'' என்றான் பதேகான்.

**நா**ங்கள் கூடாரத்துக்குத் திரும்பிவிட்டோம். என் கூடாரத்தில் நானும் பதேகானும் தனியே உட்கார்ந்திருக்கிறோம். இருட்டைக் கிழித்துக் கொண்டு, சிறிது நேரத்துக்கொருதரம் மலைக் குகைகளிலிருந்து மின்மினிப் பூச்சிகளைப்போல் துப்பாக்கிக் குண்டுகள் மின்னுகின்றன.

'பாரா உஷார்! பாரா உஷார்!' என்று காவல் சிப்பாய்கள் கூச்சலிட்டுக் கொண்டு ரோந்து சுற்றுகிறார்கள். பதேகான் ஹுக்காவை உறிஞ்சிக்கொண்டு ஒருமாதிரியாகச் சிரித்தபடி, ''பாய், நமக்கெல்லாம் இன்று தூக்கம் வரப்போவதில்லை. அதுதான் குண்டு போட்டுக்



கொண்டே இருக்கிறார்களே...... கேளுங்கள், பாய் ஸாப்! எங்கள் விருந்து உபசார வைபவத்தைப் பற்றிச் சொல்லுகிறேன்; கேளுங்கள்" என்றான். பிறகு, கதையைச் சொல்லத் தொடங்கினான் :

"அந்த மலைக் கிராமத்துக்கு ஒரு தலைவன் இருந்தான். அவன் பெயர் அஜ்ஜாம்கான். அவனுடைய பெயரைக் கேட்டாலே பிரிட்டிஷ்காரர்களுக்குக் குலைநடுக்கம்; சிம்ம சொப்பனம். அவனை வழிக்குக் கொண்டுவர நயமாகவும் பயமாகவும் அவர்கள் முயன்றார்கள்; ஒன்றும் பலிக்க வில்லை...... அஜ்ஜாம்கானுடைய வீட்டிலேதான் நான் சொல்லப் போகும் இந்தக் கதை நடந்தது.

"பாய், சரியாய்ப் பத்து வருஷங்களுக்கு முந்திய சமாசாரம் இது. அந்தக் கிராமத்து வாலிபர்கள் எல்லோரும் அஜ்ஜாம்கானுடைய பிள்ளை அமானுல்லாவின் தலைமையில் பிரிட்டிஷாரின் செயல்களுக்குப் பழி வாங்கிக்கொண்டிருந்தார்கள். அமானுல்லா ஆஜானுபாகு; அழகன்; உழைப்பாளி. ஒரு நாள் வாலிபர்கள் எல்லோரும் கள்ளுக்கடையில் கூடினார்கள். பக்கத்து ஊரிலிருந்து வரும் அட்டாகானை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அட்டாகானுடைய உடம்பில் துருக்கி ரத்தம் ஓடியது. அவனும் ஆஜானுபாகுதான். ஆனால், கறுப்பாய், முரடனாய், பார்க்கப் பயங்கரமாக இருப்பான். அமானுல்லாவின் கிராமத்தில் இருந்த அல்கா என்ற பெண் மீது அட்டாகான் பிரேமை வைத்தான்; அவளும் இவனிடம் மனத்தைப் பறிகொடுத்தாள். ஆனால் அமானுல்லாவுக்கு இது பிடிக்கவில்லை. அடுத்த ஊர்க்காரன் தன் ஊர்ப் பெண்ணைத் தன் சம்மதமோ சம்பந்தமோ இல்லாமல் காதலிப்பது அவனுக்கு இஷ்டமில்லை. ஒரு வேளை அமானுல்லாவுக்கும் அல்காவிடம் ஆசை விழுந்திருக்கலாம். அது எப்படியோ! அட்டாகானின் இன்பத்துக்கு மங்களம் பாடி விடவேண்டும் என்று அமானுல்லா தீர்மானித்தான். அட்டாகானின் வரவை எதிர்பார்த்தபடி அந்தக் கள்ளுக்கடையில் தன் கூட்டாளிகள் புடைசூழ அமானுல்லா காத்திருந்தான்.

"மலையிலிருந்து அட்டாகான் இறங்குவதை இந்த வாலிபர் கூட்டம் கவனித்தது. தன்னையே பலர் உற்று நோக்குவதை அட்டாகானும் கவனித்தான். என்றாலும் அவன் இதை லட்சியம் செய்யாமல் நேராக நடந்து வந்தான். அப்படி அவன் வந்தவுடனே இந்த வாலிபர்கள் அவனை வளைத்துக்கொண்டார்கள். அவனுக்கு எதிரே சென்று அமானுல்லா விறைப்பாக நின்று கொண்டான். பிறகு குனிந்து சலாம் செய்தான். 'தோழா, எங்களுடன் பர்ணசாலைக்கு வர வேண்டும்' என்று அட்டாகானை அழைத்தான்.

"அட்டாகான் சிறிது கோபத்துடன் 'நான் வரமுடியாது' என்று பதில் சொன்னான்.

"'என் அழைப்பை இப்படி மரியாதை இல்லாமல் மறுக்க வேண்டாம். விருந்துக்கு அழைத்தால், அதை மறுப்பது மனிதத்தன்மை அல்ல' என்றான் அமானுல்லா.

"இதற்குமேலும் மறுப்பது நன்றாயிராதென்று எண்ணிய அட்டாகான், அமானுல்லாவுடன் கடைக்குள் நுழைந்தான். மற்ற வாலிபர்களும் தங்கள் தலைவனைப் பின்பற்றினர்கள். ஒரு கோப்பையை அட்டாகா

னிடம் கொடுத்து மற்ருென்றைத் தான் எடுத்துக் குடித்துக்கொண்டே, அமானுல்லா, 'நண்பா, அல்காவை நீ சுற்றிக் கொண்டிருப்பது எனக்கும் என் தோழர்களுக்கும் என்னவோ பிடிக்கவில்லை. அதற்கு இத்துடன் நீ முற்றுப்புள்ளி வைத்து விடுவது நல்லது' என்ருன்.

"'அப்படியா! ஆனலும் அந்த விஷயம் என்னைச் சேர்ந்தது' என்ருன் அட்டாகான்.

"'அல்ல; அதில் எனக்குச் சம்பந்தம் இருக்கிறது!' என்று உறுமினன் அமானுல்லா.

"அட்டாகான் கேலிச் சிரிப்புடன், 'பாய், உன் உபசாரத்துக்கும் அபிப்பிராயத்துக்கும் ஒரு சலாம். குடித்தாகிவிட்ட தல்லவா? எனக்கு விடை கொடு. நான் நேராய் அல்காவின் வீட்டுக்குப் போக வேண்டும்' என்ருன்.

"'அட்டாகான், இங்கிருந்து நேராய் உன் ஊருக்குப் போகும் வழியைப் பார்...இல்லாவிட்டால்...'

"'தோழா, பயந்து பணிகிற வழக்கம் என்னிடம் இல்லை. அல்காவிடம் நான் வைத்திருக்கும் பிரேமையை நான் யாருக்காகவும் கைவிடமாட்டேன். அப்படி என்னதான் நடக்கிறது, பார்க்கிறேனே!'

"ஒன்றும் பேசாமல் எல்லோருமே சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார்கள். இதற்குள் அமானுல்லாவிடம் அட்டாகான் ஒரு சிகரெட்டை நீட்டினன். அமானுல்லா வெகு மரியாதையுடன் ஸலாம் செய்துவிட்டு, அதை வாங்கிக் கொண்டான். அட்டாகானுக்கு இந்த நிச்சப்தம் சலிப்பை உண்டாக்கியது. உறையிலிருந்து கத்தியை வெளியே உருவி, அதைக் கொண்டு மேஜையின் மேல் பொம்மை வரைவதுபோல ஏதேதோ கிறுக்கினன். பிறகு திடீரென்று கத்தியை உறையில் போட்டுவிட்டு எழுந்து நின்ருன். 'தோழா, ஒரு வேலையும் இல்லாமல் ஊமைபோல் இங்கே உட்கார்ந்திருப்பது நன்ருயில்லை. நான் போகிறேன்' என்ருன்.

"'ஆமாம்! இப்படி உட்கார்ந்திருப்பது நன்ருகத்தான் இல்லை. எழுந்திருங்கள், வெளியே போகலாம்' என்று எல்லோரையும் பார்த்து அமானுல்லாவும் சொன்னன். வாலிபர்கள் எல்லோரும் எழுந்து வெளியே வந்துவிட்டார்கள்.

"'தோழா, உத்தரவுதானே?' என்ருன் அட்டாகான்.

"'ஆலேகும் ஸலாம், தோழா! நண்பர்களே, அட்டாகான் தன் கிராமத்துக்குத் திரும்பிப் போகிருன்... வழி விடுங்கள்!' என்ருன் அமானுல்லா.

"'நான் எங்கள் ஊருக்குப் போகவில்லை; என் சொந்த வேலையாக உங்கள் ஊருக்குத்தான் போகிறேன்' என்ருன் அட்டாகான்.

"'சரிதான். அப்படியானல் நாங்களும் உன்னைப் பின்தொடர்வோம்' என்று சொன்னன் அமானுல்லா. கூட்டம் அட்டாகானைப் பின்தொடர்ந்தது. அல்கா குடியிருக்கும் வீட்டுப் பக்கம் திரும்பினன் அட்டாகான். உடனே இரண்டு வாலிபர்கள் அட்டாகானுடைய தோளைப் பிடித்து, 'இப்படி; இப்படிப் போ, தோழா' என்று மலைக்குப் போகும் வழியில் திருப்பினர்கள். மற்றவர்கள் பிறைச் சந்திர வளையம்போல் அவனை வளைத்துக் கொண்டார்கள். அவனுக்கு எதிரே அமானுல்லா வந்து நின்றுகொண்டு, 'நீ அவர்கள் பிடியிலிருந்து விடுபட முயல்வது வீணன காரியம்... உன்னை நாங்கள் மரியாதைக் குறைவாக நடத்துவதற்கு எங்களை நீ மன்னிக்கவேண்டும். நாங்கள் இதை

உன் நன்மைக்காகவே செய்கிறோம். நாலுபேர் இந்தச் சங்கதியை அறிவதில் எங்களுக்கு இஷ்டம் இல்லை. ஆகையால், அதோ தெரிகிறதே மசூதி, அதற்குப் பின்னால் வந்தாயானால் பேசிக்கொள்ளலாம்...' என்று சொன்னான்.

"அட்டாகானுக்கு வந்த கோபம் எல்லை மீறிவிட்டது. பல்லை நறநற வென்று கடித்தான். பதில் பேசாமல் அந்த இரண்டு வாலிபர்களுடனும் மசூதிக்குப் பின்னால் போனான்.

"'இப்போதாவது உன் முரட்டுப் பிடிவாதத்தை விட்டுவிட்டு, ஊருக்குத் திரும்பிப் போய்விடு. இல்லாவிட்டால், உன் கதி என்ன ஆகும் என்பதை இப்போது நீ அறிந்து கொண்டிருப்பாய் என்று நினைக்கிறேன். என் பேச்சைக்கேள்; வீட்டுக்குப் போய்ச் சேர்...போகிறாயா, மாட்டாயா?' என்று கர்ஜித்தான் அமானுல்லா.

"அட்டாகான் பதில் சொல்லவில்லை.

"'போகிறாயா, இல்லையா?'

"'நான் இப்படித்தான் போவேன்' என்று சொல்லிய அட்டாகான், தன்னைப் பிடித்திருந்த இரு வாலிபர்களையும் உதறித் தள்ளிவிட்டு அம்பு பாய்ந்தாற்போல் ஊரை நோக்கி நடந்தான். அந்தக் கணமே அமானுல்லா மின்னல் வேகத்தில் முன்னே குதித்து, அட்டாகானைப் பிடித்து மசூதிச் சுவரிலே அமுக்கி நிறுத்தினான். அட்டாகானுக்கு ஆத்திரம் மூண்டது; அவன் உறையிலிருந்து கத்தியை உருவினான்.

"'வேண்டாம்! வேண்டாம்! அவ்வளவு தூரம் வைத்துக் கொள்ளாதே' என்று சொல்லிய அமானுல்லா, அட்டாகானுடைய கையைப் பிடித்தான். அட்டாகானின் உடம்பில் ஓடுவது துருக்கிய ரத்தம் அல்லவா? அவனுக்கு வெறி கிளம்பிவிட்டது. அமானுல்லாவை அட்டாகான் ஒரே திமிறலில் வீசித் தள்ளி அவன் மார்பிலே கத்தியால் குத்திவிட்டான். அமானுல்லா தரையில் சாய்ந்தான். அட்டாகான் அடுத்த கணமே காற்றாய்ப் பறந்தான். இந்த வாலிபர்களில் சிலர் அவனைத் துரத்தினார்கள்; மற்றவர் அமானுல்லாவிடமே தங்கி அவனைக் கவனித்தார்கள்.

"வேட்டை நாய்களைப்போலத் தன்னை வாலிபர்கள் துரத்திவருவதைக் கண்ட அட்டாகானுக்கு உதறல் எடுத்தது. அவன் கால்கள் ஓட மறுத்தன. எந்த வீட்டிலாவது நுழைந்து தன் உயிரைக் காத்துக் கொள்ள வேண்டுமென்று அவன் எண்ணினான். களைப்பு அதிகரித்தது. தூரத்திலே ஒரு வீடு தெரிந்தது. ஓடிப்போய் அந்த வீட்டுக்குள் நுழைந்தான். அங்கே ஒரு கிழவனைப் பார்த்தான். இவன் ஓடிவருவதைக் கண்ட அந்தக் கிழவன், 'என் தம்பீ, இப்படி ஓடி வருகிறாய்?' என்று விசாரித்தான். அட்டாகான் உடனே கிழவனின் காலில் விழுந்து, 'என்னைக் காப்பாற்றுங்கள்! என்னைக் காப்பாற்றுங்கள்!' என்று கெஞ்சினான்.

"'உனக்கு எவ்வித ஆபத்தும் வராது. நான் இருக்கிறேன். நீ ஒன்றுக்கும் பயப்படாதே!' என்றான் கிழவன்.

"'நான் குத்தி விட்டேன்!... அவனை...அவனை நான்...குத்தினேன்! அவன் உங்கள் ஊர் வாலிபன். அவனை நான் அநியாயமாய்க் குத்திவிட்டேன்!... ஆனால் அவன் என் விரோதி. அவர்கள் எல்லோரும் ...அவன் சிநேகிதர்கள்... என்னைக் கொல்லத் துரத்தி வருகிறார்கள்... என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா?' என்று புலம்பினான் அட்டாகான்.

"'நிச்சயமாய்க் காப்பாற்றுகிறேன், தம்பீ; நீ என் விருந்தாளி' என்றான் கிழவன். அட்டாகானைத் துரத்திவந்த வாலிபர்கள் இதற்குள் உடம்பெல்லாம் வேர்த்து வடிய வாசலில் வந்து நின்றார்கள். அவர்களில் ஒருவன் கிழவனைப் பார்த்து, 'ஹஜரத், அவன் குத்தி விட்டான்!' என்று கத்தினான்.

"'அது எனக்குத் தெரியும். அதை அவனே சொன்னான். ஆமாம், இவனை நீங்கள் எல்லோருமாக என்னதான் செய்ய நினைத்திருக்கிறீர்கள்?' என்று கேட்டான் கிழவன்.

"'அந்தச் சங்கதியை எங்களுக்கு விட்டு விடுங்கள்! நீங்கள் அவனை மாத்திரம் எங்கள் கையில் ஒப்பித்து விடுங்கள். அது போதும்' என்றார்கள் வாலிபர்கள்.

"'முடியாது. நீங்கள் சற்று முன்பே வந்திருக்க வேண்டும். இப்போது இவன் என் விருந்தாளி. உங்களிடம் இவனை விடமுடியாது. யாரும் இவன்மேல் கைவைக்கவும் நான் இடங்கொடுக்க மாட்டேன்' என்றான் கிழவன்.

"பேச்சு மூச்சு இல்லாமல் வந்தவர்கள் சிறிது நேரம் பிரமித்து நின்றார்கள். பின்பு, வாலிபர் கூட்டத்திலிருந்து மறுபடியும் ஒரு கேள்வி கிளம்பியது: 'ஹஜரத், அநியாயமாய் ஒரு மனிதனைக் குத்திய பாதகனைத் தண்டிக்க வேண்டாமா?'

"'தண்டிக்க வேண்டியதுதான். ஆனால் குத்துண்டவன் இவனுடைய விரோதியாமே? விரோத பாவத்தில் குத்தினால் அது குற்றமாகாது' என்றான் கிழவன்.

"'ஒரு மணி நேரத்துக்கு முன்னால் அவர்களுக்குள் விரோதம் ஏதும் இல்லையே. திடீரென்று ஆத்திரங் கொண்டு குத்தியிருக்கிறான். அதெப்படி நியாயமாகும்?'

"கிழவன் அட்டாகானின் பக்கம் பார்த்துத் தோள்களைக் குலுக்கி விட்டு, 'எனக்கு அதெல்லாம் தெரியாது. இவன் என் விருந்தாளி' என்றான்.

"'அவன், உங்கள்...' என்று தொடங்கிய வாலிபன், வாக்கியத்தை முடிக்க இயலாமல் அப்படியே நின்றுவிட்டான்.

"'சொல்லிவிடு! நடந்த சங்கதியை அவரிடம் சொல்லிவிடு! அக்ரம்கான் வயலில் இருப்பான் - அவனை அழைத்து வாருங்கள். அவனே சொல்லட்டும்......குத்துண்டவன் யார் என்பதை!' என்றான் மற்றொரு வாலிபன்.

"அக்ரம்கானைக் கூட்டிவர இரண்டு வாலிபர்கள் ஓடினார்கள். கோபத்துடனும் துக்கத்துடனும் அக்ரம்கான் ஓடிவந்தான். கிழவனுக்கு முன்னால் அவன் வந்து நின்றுகொண்டான்.

"'அப்பாஜான்' என்று இவனைக் கூப்பிட்டான்: 'அப்பாஜான், உங்கள் பிள்ளையையே ஒருவன் கொன்றிருந்தால் அவனைக் காப்பாற்றி உங்கள் விருந்தாளியாகக் கௌரவிப்பீர்களா?' என்று கேட்டான்.

"கிழவன் அஜ்ஜாம்கான், தன் மூத்த மகனை அக்ரம்கானுடைய கண்களை ஊடுருவிப் பார்த்தான். உண்மையை அறிந்தான்.

"'அமானுல்லா! அமானுல்லா!' என்று முணுமுணுத்த கிழவன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்; 'அமானுல்லாவுக்குக் காயம் பட்டிருக்கிறதா?' என்று ஆவலோடு கேட்டான்.

"'இவர்களெல்லோருமாகத் தம்பியை மசூதிக்குள் கொண்டுபோனார்கள்! நான் வீட்டுக்கு வரும்போது பார்த்தேன். ......அவன் இறந்துவிட்டான்' என்றான் அக்ரம்கான்.

"'இறந்து விட்டானா! இவன் தானா அவனைக் கொன்ற ஆசாமி?' என்று துக்கத்தோடு விசாரித்தான் கிழவன்.

"'ஆமாம், அவன் இறந்துவிட்டான். அவனைக் கொன்றவனும் இவன்தான். இங்கேயிருந்து விரட்டுங்கள் இந்தக் கொலைகாரனை. அப்பாஜான்!......அப்பாஜான்.....! அமானுல்லாவின் சவத்தை வீட்டுக்குக் கொண்டுவர வேண்டும். இந்தப் பாதகனைக் கழுத்தைப் பிடித்து நெட்டித்தள்ளுங்கள்!' என்றான் அக்ரம்கான். அஜ்ஜாம்கானே தான் எதிரி அமானுல்லாவின் தகப்பனென்றும், தான் அடைக்கலம் புகுந்த வீடு தான் குத்திய மனிதனுடையதே என்றும் தெரிய வந்தவுடன், அட்டாகான் வெலவெலத்து விட்டான்.

"அஜ்ஜாம் ஒரு முறை பின்னால் திரும்பி, அட்டாகானைப்பார்த்தான். அவனுடைய பயத்தை ஊகித்து அறிந்துகொண்டான்.

"'அமானுல்லா! அமானுல்லா!' என்று புலம்பிய அட்டாகான் கண்ணீர் பெருக்கி அழுவதை எல்லோரும் கண்டார்கள். 'அமானுல்லா இறந்துவிட்டானா, இறந்துவிட்டானா?' என்று அவன் திருப்பித் திருப்பிக் கேட்டான்.

"அக்ரம்கானைப் பார்த்து, அஜ்ஜாம்கான் 'மகனே, தம்பி அமானிடம் போ! இந்த மனிதனை என்னால் துரத்திவிட முடியாது... இவன் என் விருந்தாளி' என்றான்.

"'இப்போதில்லாவிட்டால் இன்னும் சற்று நேரம் பொறுத்தாவது இவன் வெளியே வராமல் போகிறானா! இவனை நாங்கள் சும்மா விட்டுவிடுவோமென்று நினைத்தீர்களா?' என்று வாலிபர்களெல்லாம் கோபத்துடன் கறுவிக்கொண்டே போனார்கள்.

"'இவன் என் காவலில் இந்த ஊரை விட்டுப் போவான்! அதைத் தவிர, நான் வேறே என்ன செய்ய முடியும்? சொல்லுங்கள்' என்று தன் மனவேதனையை உள்ளடக்கிக் கொண்டே சொன்னான் அஜ்ஜாம்கான்.

"அமானுல்லாவைப் பார்த்துக் கொள்ள அக்ரம்கான் போய்விட்டான். வாலிபர் கூட்டமும் வீட்டை விட்டு வெளியே போய் அட்டாகானின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தது. கிழவன் வாயிற் கதவைத் தாழிட்டு உள்ளே போய் ஒரு நாற்காலியில் தொப்பென்று விழுந்து நீண்ட யோசனையில் முழுகினான். அவனும் அட்டாகானும் வெகு நேரம் வரையில் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை. புத்திர சோகத்தில் ஆழ்ந்து வருந்தும் கிழவனைச் சமாதானப் படுத்த எண்ணினான் அட்டாகான். ஆனால் என்ன சமாதானம் சொல்லுவது என்றே அவனுக்குத் தெரியவில்லை. கடைசியில் அட்டாகான் இப்படிச் சொன்னான்: 'ஹஜரத், அவனைக் கொல்ல வேண்டுமென்று நான் நினைக்கவேயில்லை. இருவரும் அகாரணமாய்ச் சண்டையிட்டோம்... என்னால் பொறுக்க முடியவில்லை...' இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அஜ்ஜாம்கான், எல்லாம் தெரிந்ததுபோலத் தலையாட்டிவிட்டுப் பேசாமல் இருந்தான்.

"சூரியன் மலைவாயில் விழுந்தான். தன் விருந்தாளியைப் பற்றியே யோசித்துக்கொண்டிருந்த அஜ்ஜாம் ஒரு தீர்மானத்துக்கு வந்தான். சமையல்கார மோதீயைக் கூப்பிட்டு, அட்டாகானுக்குச் சாப்பாடு போடச் சொன்னான். 'இதோ பார் தம்பீ, சாப்பிடாமல் மாத்திரம் போகாதே!.. அந்த மேஜையைப் பக்கத்தில் இழுத்துப் போட்டுக்

கொண்டு உட்கார்ந்து சாப்பிடு... உன்னோடுகூட நானும் ஏதோ கொஞ்சம் சாப்பிடுகிறேன். நான் கொஞ்சமாகச் சாப்பிடுவதனால், நீ வித்தியாசமாக நினைத்துக் கொள்ளாதே!...எனக்கு...எனக்கு...நல்ல பசி இல்லை!' என்றான் கிழவன்.

"'எனக்கும் பசியில்லை, ஹஜரத்!' என்றான் அட்டாகான்.

"'ஐயோ! நீ அப்படிச் சொல்லக் கூடாது. என்னவோ, தம்பீ! கொஞ்சம் சாப்பிடத்தான் வேண்டும். இதோபார்! நீ வெகு தூரம் நடக்கப் போகிறவன்...சரி. நானும் வழக்கம் போல் நிறையச் சாப்பிட முயல்கிறேன். நடக்கட்டும்; நீயும் சாப்பிடு' என்று சொல்லி, அஜ்ஜாம் கானும் சாப்பிட ஆரம்பித்தான். ஆனால், அட்டாகான் ஒன்றுமே சாப்பிடாதது கண்டு, 'பையா, ஒன்றுமே சாப்பிடவில்லையே! போனால் போகிறது. கொஞ்சம் சாராயமாவது குடி. கஷ்டத்தில் அகப்பட்டு மனமும் கொஞ்சம் சரியாக இல்லாத சமயத்தில், மனிதன் சிறிது மதுவைக் குடித்தால் கொஞ்சம் நிம்மதியாயிருக்கலாம்' என்று உபசரித்தான் கிழவன். தவிரவும், தான் பேசாமலிருந்தால் தன் விருந்தாளி மரியாதைக் குறைவாக நினைப்பானோ என்று எண்ணிப் பேச்சுக் கொடுக்கவும் ஆரம்பித்தான்: 'இந்தப் பள்ளத்தாக்கில் பயிராகும் கோதுமை மிக நன்றாயிருக்கும் அல்லவா?' என்று கிழவன் கேட்டான்.

"'ஆமாம், எங்கள் அப்பா கூட அப்படிச் சொல்வது உண்டு' என்றான் அட்டாகான்.

"'இந்த வருஷம் நல்ல கொண்டாட்டந்தான். கோடையில் மழை பெய்தது. பள்ளத்தாக்கில் மட்டுமல்லாமல், எங்கள் வயல்களிலுங் கூட நல்ல வெள்ளம். நிலம் பசுமையாய் இருப்பதால், செம்மறியாடு, வெள்ளாடு எல்லாம் மேய்ந்து கொழுத்திருக்கின்றன.'

"இப்படிச் சொல்லிய கிழவன், இன்னமும் அட்டாகான் சரியாய்ச் சாப்பிடாதது கண்டு, 'தம்பீ, சாப்பிட வெட்கப் படுகிறாய் என்று தோன்றுகிறது. சரி, மூடிந்ததைச் சாப்பிடு; மிகுந்ததைக் கட்டிக் கொடுக்கிறேன். வழியில் பசித்தால் சாப்பிடலாம்' என்றான்.

"பிறகு அவன் அட்டாகானுக்கு ஹுக்கா, வெற்றிலை பாக்கு எல்லாம் கொடுத்தான். சற்று இளைப்பாறிய பிறகு, அஜ்ஜாம், 'தம்பீ, பிரயாணத்துக்கு வேண்டிய தெம்பு உனக்கு வந்திருக்குமென்று நினைக்கிறேன்...சரி, எழுந்திருப்போமா?' என்று கேட்டான்.

"'உத்தரவு! உங்களுக்குநான் எப்படி நன்றி செலுத்துவேன்!'

"'அதெல்லாம் கிடக்கிறது. எழுந்திரு, தம்பீ.'

"'நான் தயார்!'

"பிஸ்டலை எடுத்துக் கொண்டு அஜ்ஜாம் முன்னால் நடக்க, அட்டாகான் பின்னால் நடந்தான். வீட்டிலிருந்து வெளியில் வந்தவுடன், அட்டாகானின் வரவுக்காகக் காத்திருந்த வாலிபர்கள் அஜ்ஜாமின் கண்ணில் பட்டார்கள். அவர்கள் பக்கமாகக் கையை ஆட்டி, 'திரும்பிப் போங்கள்! இவன் என் விருந்தாளி; என் பாதுகாப்பில் இருக்கிறான்' என்று குரல் கொடுத்தான் அஜ்ஜாம் கான். அவனுடைய நோக்கத்தை அறிந்த வாலிபர் கூட்டம் பேசாமல் அகன்று போய்விட்டது. அட்டாகானைத் தன் குழந்தை போல் காத்து வந்த அஜ்ஜாம்கான், மலைகளின் மறைவில் வந்தபின், 'அட்டாகான், சீக்கிரம் போ! சீக்கிரம்! நன்றாய் இருட்டுமுன்பு ஊர்போய்ச் சேர்ந்து விடு. இன்னும் இரண்டு மணி

நேரந்தான் இருக்கிறது. அதன் பிறகு, நம் இருவருடைய ஊர்க்காரர்களும் போடும் சண்டையில் ரத்த ஆறு ஓடப்போகிறது. போய்விடு!' என்றான்.

"இப்படியிருக்கும், பாய், விருந்தாளிக்கு நாங்கள் செய்யும் மரியாதை!" என்று சொல்லிப் பதேகான் சிரித்தான். இதற்குள் பள்ளத்தாக்கில் ஜ்வாலைகள் தோரணம் போல் கிளம்பியதால், கூடாரத்தில் கலகலப்பு ஏற்பட்டது. நாங்கள் எல்லோரும் ஆயுத பாணிகளாகக் கிளம்பி முன்னோக்கி விரைந்தோம்.

---

## பொருள் அடக்கம்

### பிப்ரவரி '48


| | | |
|---|---|---|
| மறைந்த ஜோதி | ஜவாஹர்லால் நேரு | 1 |
| உலகத்தின் கண்ணீர் | செய்திகள் | 3 |
| முதல் சணல் ஆலை | அமிர்த பஜார் பத்திரிகை | 6 |
| பெண்ணுக்கு எதிரி பெண்ணே | வஸந்த் | 9 |
| மயக்க மருந்து | கரண்ட் ஸயின்ஸ் | 14 |
| குழந்தையைக் கெடுக்காதீர்கள் | பேரெண்ட்ஸ் மகஸீன் | 17 |
| உல்லாசமாகச் சாப்பிடு | நுட்ரீஷன் | 21 |
| நூறுண்டு வாழ வழி | விசால பாரத் | 23 |
| அல்லும் பகலும் உழைக்கும் நேரு | இந்தியா | 25 |
| லஞ்சமும் இறுமும் | விசுவ கர்நாடக வீக்லி | 30 |
| ஆயி பாடல் | திரிவேணி | 33 |
| பிசாசு ஓட்டிய பட்டர் | பம்பாய் கிரானிக்கிள் | 35 |
| யார் பத்திரிகாசிரியர்? | ஜயகேரளம் | 39 |
| பசுவைக் காத்த மொகலாயர் | ஓரியெண்ட் | 41 |
| இரட்டைக் குழந்தைகள் | ஸவுண்ட் | 46 |
| மறதி விபரீதம் | பிக்சர் போஸ்ட் | 49 |
| கருடனும் அஹிம்சையும் | நாகானந்தம் | 53 |
| எது தேசீய பாஷை? | ஸோஷல் வெல்பேர் | 57 |
| யானைக் குஸ்தி | கிர்லோஸ்கர் | 66 |
| இந்திய ஆண்டுகள் | அஸ்ட்ரலாஜிகல் மகஸீன் | 69 |
| மான் தரும் கஸ்தூரி | புஸ்தகப் பிரபஞ்சம் | 72 |
| இந்தியாவின் வேதனை | காலியர்ஸ் | 75 |


### விசேஷப் பகுதிகள்


| | |
|---|---|
| எது சரி? | 34 |
| காந்தி: வாழ்வும் வாக்கும் | 44 |
| குழந்தைகள் குறும்பு | 51 |
| பாபுராவ் பதில் சொல்லுகிறார் | 64 |
| சொல் பொருந்துமா? | 74 |
| சிறுகதை: விருந்தாளி: ஜனமஞ்சி ராமகிருஷ்ணா | 80 |


EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.



## அமர வாழ்வு - மகாத்மா காந்தி

(கடைசி அட்டைப் பக்கத் தொடர்ச்சி)

கிறதோ, அத்தனைக்கு அத்தனை தேகமும் அதே நிலையை அடைகிறது. சதைப்பற்று நிறைய இருந்தால்தான், தேகம் ஆரோக்கியமாக இருக்கும் என்று இதற்கு அர்த்தம் அல்ல. தீரமான ஆத்மா மெலிந்த தேகத்திலே பெரும்பாலும் உறைவதுண்டு. ஒரு குறிப்பிட்ட படியை எட்டிய பின்பு, ஆத்மா எத்தனைக்கு எத்தனை வளர்ச்சியடைகிறதோ அத்தனைக்கு அத்தனை தேகத்தில் சதை குறைந்துவிடுகிறது. முற்றும் ஆரோக்கியமான ஒரு தேகத்தில் சதையே இல்லாதிருக்கலாம். சதைப்பற்று நிறைந்த தேகம் வியாதிக் களஞ்சியமாகலாம்; வெளிக்கு நோயில்லை போல் தோன்றினாலும், உள்ளுக்குள்ளே அதைப் பல தொத்துநோய்கள் பீடித்திருக்கலாம். முற்றும் ஆரோக்கியமான தேகத்துக்கோ நோய்களே வரமாட்டா. மாசற்ற ரத்தம் எந்தத் தொத்துநோயையும் எதிர்க்கும் சக்தி வாய்ந்தது.

—சுயராஜ்யம் பெற இந்தியாவின் நியாயம் (புஸ்தகம்)

இந்தப் பரிபூர்ண நிலையை அடைவது கடினம். இல்லையானால், அதை நான் அடைந்திருப்பேன். ஆனால், இறந்த காலத்தின் சம்ஸ்காரங்களை அடியோடு அழித்துவிடுவது யாராலும் ஆகாத காரியம்; யாரால் ஆனாலும், என்னால் ஆகவில்லை. இந்தத் தாமதத்தைக் கண்டு நான் மனஞ் சோரவில்லை. அந்தப் பரிபூர்ண நிலையின் சித்திரத்தை, நான் என் கற்பனையில் காண்கிறேன். துளித்துளி அதன் தரிசனமும் எனக்குக் கிடைத்திருக்கிறது. அதில் நான் அடைந்திருக்கும் முன்னேற்றம், எனக்கு நம்பிக்கை ஊட்டுகிறது. என் நம்பிக்கை பூர்த்தியாகும் முன்பாக நான் இந்த உடலை விட்டுப் பிரிய நேர்ந்தாலும், அதை என் தோல்வியாக எண்ணமாட்டேன். ஏனென்றால், எனக்குப் புனர் ஜன்மத்தில் நம்பிக்கை உண்டு; இந்த ஜன்மத்தில் எவ்வளவு நம்பிக்கை உண்டோ அவ்வளவு நம்பிக்கை அதிலும் உண்டு. ஆகையால், எனது மிகச் சிறு முயற்சியுங்கூட வீணாகாது என்பதை நான் அறிவேன்.

—யங் இந்தியா 5-6-'24

ஆத்மா அமரத்வம் வாய்ந்தது என்பதை நான் நம்புகிறேன். கடலையே இதற்கு நான் உதாரணம் கூறுவேன். எத்தனையோ நீர்த்துளிகள் சேர்ந்ததுதான் கடல். அந்த ஒவ்வொரு துளியும் ஒவ்வொரு வியக்தி; அதே சமயத்தில் அந்த ஒவ்வொரு துளியும் முழுக்கடலின் ஒவ்வொரு பகுதியே. அதாவது 'ஒன்றாகிப் பலவாகி'யிருக்கிறது கடல். இந்த வாழ்க்கைக் கடலில், நாம் அனைவருமே பல துளிகள். இந்த வாழ்க்கைக் கடலில், வாழும் சகல ஜீவன்களோடும் நான் இரண்டறக் கலக்க வேண்டும்; கடவுளின் திருமுன்னில், வாழ்க்கையின் மாட்சியிலே நான் பங்கு கொள்ள வேண்டும். இதுவே என் கொள்கை. இந்த வாழ்க்கைக் கடலே கடவுள்.

—சுயராஜ்யம் பெற இந்தியாவின் நியாயம் (புத்தகம்)



# அமர வாழ்வு

மகாத்மா காந்தி

‘மரணம் என்பது ஒரு பெரிய மாறுதல்; அவ்வளவே. மரணம் வரும்போது, அதை வரவேற்கவேண்டும்’ என்பதை வெகு வருஷங்களாகவே என் மனம ஒப்புக்கொண்டுவிட்டது. மரண பயம் உளபட, சகல பயங்களையும் என் உள்ளத்திலிருந்து உதறித்தள்ள நான் தீர்மானமாய் மகத்தான முயற்சி செய்திருக்கிறேன். என்றாலும், சில சமயம் சாவு நெருங்குவது போன்ற எண்ணம் எனக்கு உண்டானதுண்டு. அப்போதெல்லாம், வெகு நாளைக்கு முன்னே பிரிந்த ஒரு நண்பனைச் சந்திக்கப் போவது போன்ற ஓர் ஆனந்தமே எனக்கு ஏற்பட்டது.

—தென்னாப்பிரிக்க ஸத்தியாக்கிரகம் (புஸ்தகம்)

‘சாவுக்குத் தப்புவதற்காக இந்த வருஷக் கடைசி வரையில் ஹிமாலயத்துக்குப் போய்விடுங்கள்’ என்று யாராவது என்னிடம் சொன்னால், அப்படி நான் போக மாட்டேன். ஏனென்றால், மனிதன் என்னதான் முன்னெச்சரிக்கை எடுத்துக் கொண்டதாக மதிமயங்கினாலும், சாவு என்பது தவிர்க்க முடியாதது. இந்தியாவில் உள்ள பொதுஜன ஊழியர்களில், தங்கள் ஆரோக்கியத்தைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளத் தெரிந்தவர் மிகச் சிலரே. அந்தச் சிலரில் நானும் ஒருவன். என்னிடம் என்ன வேலை வாங்குவது என்பது கடவுளுக்குத் தெரியும. தமது வேலைக்கு நான் தேவையில்லாமல் போன பின்பு, ஒரு நிமிஷங் கூட என்னை அவர் உயிரோடு வைத்திருக்க மாட்டார்.

—ஹரிஜன்: 15-1-'38

ஆரோக்கியமான தேகத்திலேதான் ஆரோக்கியமான ஆத்மா வாழும். ஆத்மா எத்தனைக்கு எத்தனை ஆரோக்கியமும் இச்சைகளிலிருந்து விடுதலையும் அடை

(தொடர்ச்சி பின்பக்கத்தில்)

Regd. No. M. 4975